

கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு


நியூ செஞ்சுரியின்

உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2049*

*மலர் - 10 இதழ் - 10 - ஜனவரி - 2019*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ்.சண்முகநாதன்*
*தி.ரெத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி.சரவணன்*

இதழ் வடிவமைப்பு

*ஞா.சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்

பதிவு எண் : 21/2005/ 11/2/2005

16 (142), ஜானி ஜான்கான் ரோடு,

இராயப்பேட்டை, சென்னை - 600 014

ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in

இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00

மாணவர்களுக்கு ₹ 300.00

ஆயுள் சந்தா ₹ 3000.00

அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00

*சந்தா தொகையை*

**New Century Reader's Sangam**

*என்ற பெயரில் அனுப்பலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**

**உங்கள் நூலகம்**

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**

**அம்பத்தூர், சென்னை - 600098.**

**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


# பொருளடக்கம்


பிரபஞ்சனும் அவரது எழுத்துக்களும்
அ.மார்க்ஸ் – 4

காலனி அரசும் மருத்துவப் பயிற்று மொழியும்...
டாக்டர் சு.நரேந்திரன் – 9

மிருணாள் சென்
மு.இராமசுவாமி – 17

பிராமணிய எதிர்ப்பின் தலைமை மாணிக்கவாசகராவார்
பேராசிரியர் நல்லூர் சா.சரவணன் – 21

ஒண்ஞாயிறன்னோன் புகழ்மாயலவே...
இரா.காமராசு – 31

அரசு அமைப்பு பற்றிய குறிப்பு
அய்டன் டபிள்யூ.சவ்தால் | தமிழில்: கி.இரா.சங்கரன் – 35

ஆளுமைகளை உருவாக்கிய ஆளுமை
இரா.அறவேந்தன் – 44

நூலகம் இன்றும்... இனியும்...
சுகுமாரன் – 59

மானிடவியல் நோக்கில் சாதியும் பெண்களும்
தீ.ஹேமமாலினி – 69

மாமனிதரைப் போற்றுதும்...
பேரா.ச.சு.இராமர் இளங்கோ – 77

மனித வாழ்க்கையை வளமாக்கும் காப்பியங்கள்
சி.ஆர்.ரவீந்திரன் – 80

தமிழ்ப் பிரபஞ்சத்தைக் கவர்ந்த பிரபஞ்சன்
பா.வீரமணி – 87

காலனியமும் பின்னைக் காலனியமும்
முனைவர் உ.கருப்பத்தேவன் – 92

மனிதரை இழிவாக நடத்தும் மதத்தை...
டாக்டர் அம்பேத்கர் | தமிழில் : ஏ.எம்.சாலன் – 100


தவிர்க்க முடியாத காரணங்களால்
**ஆ.சிவசுப்பிரமணியனின் ‘படித்துப் பாருங்களேன்...’**
இவ்விதழில் இடம் பெறவில்லை
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

-பொறுப்பாசிரியர்



# பிரபஞ்சனும் அவரது எழுத்துக்களும்

**அ.மார்க்ஸ்**

**பி**ரபஞ்சனின் எழுத்துக்களைவிட பிரபஞ்சன் என்னும் மனிதர் இன்னும் சுவாரசியமானவர். எழுத்தை மட்டுமே நம்பிய ஒரு வாழ்வைத் தேர்வு செய்தவர்கள் பட்டப்பாட்டை எல்லாம் அறிந்த பின்னும் பிடிவாதமாக இறுதிவரை எழுதியே வாழ்ந்து இறந்தவர் அவர். அவருடைய முதல் கதை 1961இல் ஏதோ ஒரு சிறிய இதழில் வெளிவந்தது. அப்போது அவருக்குப் பதினாறு வயது. இறந்த போது அவர் வயது 73. ஆக அரை நூற்றாண்டுக்கும் மேற்பட்ட எழுத்துலக அனுபவம் உடையவர் அவர். கடைசிவரை மருத்துவச் செலவு உட்பட பெரிய அளவில் அவர் எல்லாவற்றிற்கும் பிறர் உதவிகளைச் சார்ந்துதான் வாழ வேண்டி இருந்தது. அந்த வாழ்வை விரும்பியும், பிடிவாதமாகவும் தேர்வு செய்தவர் அவர்.

எந்த நாளும், எந்த இக்கட்டுகள் மத்தியிலும் சினிமா அல்லது வேறு துறைகளை நாடி வாழ்வை வளப்படுத்திக் கொள்ள அவர் முனைந்ததில்லை. அப்படியே நேர்ந்தாலும் அதில் அவர் நிலைத்ததில்லை. எழுத்தாளர் பவா செல்லதுரை சொன்ன ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. இடையில் ஒரு முறை மிகச் சில காலம் ஒரு கல்லூரியில் அவருக்குப் பேராசிரியப்பணி கிடைத்தது. அதை ஏன் விட்டீர்கள் எனக் கேட்டபோது, "இட்லிதான் காரணம்" எனச் சொன்னாராம். "மதிய இடைவேளை வந்தால் எல்லா ஆசிரியர்களும் டிஃபன் பொட்டலத்தைப் பிரிக்கிறார்கள். எல்லார் வீட்டிலிருந்தும் இட்லிகள். என் மனைவியும் இட்லி கொடுத்தனுப்பத் தொடங்கினாள். எனக்குச் சின்ன வயதிலிருந்து இட்லி பிடிக்காது. வேலையை விட்டுவிட்டேன்" என்றாராம். இது உண்மையோ இல்லை, வெறும் நகைச்சுவையோ அவரால் அப்படியெல்லாம் ஒரு வேலையில் தரிக்க முடியவில்லை என்பதை நாம் புரிந்துகொள்கிறோம்.

ஒரு சம்பவத்தை இங்கே குறிக்கத் தோன்றுகிறது. மோடி அரசின் கருத்துரிமைப் பறிப்பு நடவடிக்கைகள் முதலியவற்றை எதிர்த்து, நாடெங்கும் எழுத்தாளர்கள் சாகித்ய அகாடமி உள்ளிட்ட அரசு விருதுகளைத் துறந்தபோது தமிழகத்திலிருந்து

யாரும் அப்படிச் செய்யாததை அறிவோம். அப்போது யாரோ பிரபஞ்சன் எல்லாம் ஏன் அதைச் செய்யக் கூடாது எனக் கேட்டார்கள். அப்போது அவர், "நான் விருதைத் திருப்பிக் கொடுப்பது பற்றிப் பிரச்சினையில்லை. ஆனால் அந்த விருதோடு கொடுக்கப்பட்ட ஐம்பதாயிரம் ரூபாயை நான் எப்படித் திருப்பிக் கொடுப்பேன்" எனக் கேட்டதாக ஒரு செய்தி பரவியது. அப்போது நாமக்கல்லைச் சேர்ந்த ஒரு நண்பர் என்னைத் தொடர்புகொண்டு, "நான் அந்தப் பணத்தைக் கொடுத்துவிடுகிறேன். நீங்கள் அவரிடம் சொல்லுங்கள்" என்றார். நான் மறுத்துவிட்டேன். அவரை நாம் அறிவோம். அவரிடம் இப்படிச் சொல்வதே அவரை அவமதிப்பதுதான். பேசாமல் இருங்கள் என்றேன்.

அவர் அப்போது விருதைத் திருப்பிக் கொடுக்காததன் பின்னணி இதுதான். மற்றபடி பிரபஞ்சன் கூர்மையான அரசியல் பார்வை உடையவர். தன்னை திராவிட இயக்கப் பின்னணியில் உருவானவன் என ஒரு கட்டத்தில் அறிவித்துக் கொண்டவர். எனக்கு அவரோடு இது தொடர்பான சில அனுபவங்கள் உண்டு. தமிழ் எழுத்தாளர்கள் சார்பில் கண்டன அறிக்கைகள் வெளியிட நேர்ந்த போதெல்லாம் முதல் கையொப்பத்திற்காக அவரிடம்தான் போவேன். ஊரில் இல்லாவிட்டால் போனில் தொடர்பு கொள்வேன். எந்தத் தயக்கமும் இல்லாமல் அத்தனையிலும் அவர் கையொப்பம் இட்டுள்ளார். 2014 நாடாளுமன்றத் தேர்தலின்போது மதவாதம் பேசுகிற கட்சிகளுக்கு வாக்களிக்காதீர்கள் என எழுத்தாளர்கள் எல்லோரும் ஒரு அறிக்கை வெளியிடலாம் எனச் சொன்ன போதும் அவர் முதல் ஒப்புதல் அளித்தார்; பா.ஜ.கவின் எச்.ராஜா பெரியாரை அவமரியாதையாகப் பேசிய போது அவரைக் கைது செய்ய வேண்டும் என காவல்துறைத் தலைவரிடம் (DGP) நேரடியாகப் புகார் செய்தபோதும் அதிலும் பிரபஞ்சன் கையொப்பம் இட்டிருந்தார். இப்படி நிறைய.

புதுச்சேரி மாநிலத்தில் மண்டல் குழு பரிந்துரைகளின் நிறைவேற்றத்திற்காகப் போராட்டம் நடந்த போது எவ்வாறு பிரபஞ்சன் தினந்தோறும் அந்த நடவடிக்கையில் பங்குபெற்றார் என்பதைப் புதுச்சேரி சுகுமாரன் பதிவு செய்துள்ளார். பாபர் மசூதி இடிக்கப்பட்ட அடுத்த இரண்டாண்டில் (1994) புதுச்சேரியின் அடையாளங்களில் ஒன்றாக விளங்கும் 'சம்பா கோவில்' என மக்களால் அழைக்கப்படும் மாதா கோவிலை இடிக்க வேண்டும் என அங்குள்ள இந்துத்துவ அமைப்புகள் சில கிளம்பின. ஒரு சிவன் கோவிலை இடித்துக் கட்டப்பட்டது அந்த மாதா கோவில் என்கிற பிரச்சாரத்தை அவர்கள் தீவிரமாக முன்னெடுத்தனர். அப்போது அதற்கெதிராக உண்மை வரலாற்றை வெளிக்கொணரும் வகையில் ஒரு சிறு வெளியீடு கொண்டுவரலாம் என ரவிக்குமார், சுகுமாரன், நான் எல்லோரும் முடிவு செய்தோம். அது தொடர்பான வரலாற்றுத் தகவல்களை எல்லாம் சேகரித்தபோது மேலதிகமாகப் பிரபஞ்சன் பல விவரங்களைச் சொன்னார். அவரையே அதை எல்லாம் எழுதித் தருமாறு கேட்டோம். இறுதியில், "மசூதிக்குப் பின் மாதா கோவிலா?" எனும் தலைப்பில் அந்தக் குறுநூல் வெளிவந்தபோது அதில் என்னுடைய கட்டுரையுடன் அவரது கட்டுரை ஒன்றும் அரிய வரலாற்றுத் தகவல்களுடன் இடம்பெற்றது.

அவர் என்னாளும் தன் அரசியலை வெளிப்படுத்திக் கொள்ளத் தயங்கியதில்லை. தனது புனைவுகளிலும் அவர் அவற்றைப் பதிவு செய்துள்ளார். அவரது சிறுகதை ஒன்றில் (நீரதன் புதல்வர்) ராமச்சந்திர குஹாவின் 'காந்திக்குப் பிந்திய இந்தியா' நூலிலிருந்து இந்திரா காந்தியின் அவசரகாலக் கொடுமைகள், பத்திரிகைத் தணிக்கைகள் முதலியன பற்றிய ஒரு பத்தி அப்படியே இடம்பெறும். அந்தக் கதையே எம்.ஜி.ஆர் ஆட்சியில் அதிகாரி வீட்டில் கஞ்சாவைக் கொண்டு வைத்துப் பொய் வழக்குப் போட்டதாகச் சொல்லப்படும் ஒரு நிகழ்வைப் பின்னணியாகக் கொண்டதுதான். பாதிக்கப்பட்டவரின் மனைவி தினந்தோறும் எம்.ஜி.ஆர் வீட்டு வாசலில் அவர் வரும்போது கண்ணில் படுமாறு குழந்தையுடன் நின்றதாகவும், கடைசியாக ஒரு நாள் அவர் நின்று விசாரித்துவிட்டு அடுத்த நாள் அவரைச் சிறையிலிருந்து விடுவித்ததாகவும் சொல்லப்படும் சம்பவம் அப்படியே முழுமையாக அக்கதையில் இடம் பெற்றிருக்கும்.

அவர் தன்னைத் திராவிட இயக்கத்தின் வெளிப்பாடு எனச் சொல்லிக் கொண்டாலும் திராவிட இயக்கத்தை அவர் கடுமையாக விமர்சிக்காமல் இருந்ததில்லை. 'இரண்டு நண்பர்களின் கதை' எனும் சிறுகதையும் ஒருவகையில் திராவிட இயக்கத்தை விமர்சித்து எழுதப்பட்டதுதான். அரசியல் அதிகாரத்தை நோக்கி நகர்ந்து, பொருளை மட்டுமின்றி பிற சுகங்களையும் அடையும் ஒருவன் மற்றும் அவனைப் போல அத்தகைய 'குயுக்தி' இல்லாத அவனது வகுப்புத் தோழன் ஒருவன் என இரு நண்பர்கள் பற்றிய சிறுகதை அது. அந்தத் திறமைசாலி நண்பனின் பெயர் செல்வம். கட்சியில் சேர்ந்தபின் அவன் பெயர் 'தமிழ்ச்செல்வன்'. அந்தக் கட்சியை "நாக்கை மட்டுமே நம்பிய இயக்கம்" என்பார் பிரபஞ்சன். இந்த நுட்பம் எல்லாம் தெரியாமல் இந்த நண்பனிடமே உதவியாளனாய் இருந்து அவனால் வஞ்சிக்கப்படுவதாகச் சித்திரிக்கப்படும் அந்த இரண்டாவது நண்பனின் பெயர் 'மாடன்'.

'உயிர்மை' இதழில் சங்க இலக்கியம் பற்றி பிரபஞ்சன் எழுதிய கட்டுரைகளிலும் அவர் திராவிடர் இயக்கப் பாணியில் சங்க காலத்தைப் பொற்காலமாகச் சித்திரிக்காமல் அக்காலகட்டத்தைக் கூடியவரை எதார்த்தமாகச் சித்திரிக்கவே முயற்சித் திருப்பார். அந்த வகையில் வரலாற்று ஆய்வுகளில் ஒரு மாற்றுப் பார்வையை முன் வைக்கிற மார்க்சிஸ்டு களின் தாக்கம் அதில் கூடுதலாக இருந்தது எனலாம். கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதர் பயிற்சி பெற்றவராக இருந்தபோதும் நல்ல வேளை யாக அத்தகைய பண்டிதத் தாக்கமும் அவரின் படைப்பு களில் வெளிப்படவில்லை.

எனினும் ஒன்றைச் சொல்லித்தான் ஆக வேண்டும். புதுமைப்பித்தன் தொடங்கி ஜெயகாந்தன் ஊடாக தமிழ்ச் சிறுகதை நுட்பம் பெரிய அளவில் வளர்ந்திருந்த காலத்தில் ஒரு கவனத்துக்குரிய எழுத்தாளராக வெளிப்போந்த பிரபஞ்சனின் சிறுகதைகளால் அவர்களது படைப்புகளின் உயரங் களைத் தொட இயலவில்லை. முழுக்க முழுக்க ஜனரஞ்சகப் பத்திரிகைகளைச் சார்ந்தே அவர் இருக்க நேர்ந்தது ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

ஆனால், நாவலாக்கங்களில் அவருக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. குறிப்பாக அவரது இரட்டை நாவல்களாகிய 'மானுடம் வெல்லும்' 'வானம் வசப்படும்' ஆகியவற்றைச் சொல்லலாம். 'மானுடம் வெல்லும்' குறிப்பிட்டுச் சொல்லத்தக்க ஒன்று. கல்கி, சாண்டில்யன், அரு.இராமநாதன் பாணி வரலாற்று நாவல்களிலிருந்து பிரபஞ்சனின் 'மானுடம் வெல்லும்' வேறுபட்ட ஒன்று. தன் கால கட்ட அன்றாட அரசியல், சமூக நிகழ்வுகளை எல்லாம் நாட்குறிப்புகளாகப் பதிவு செய்து வைத்திருந்த அனந்தரங்கம் பிள்ளைக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். அந்நிய ஆட்சி இங்கு தன் அதிகாரத்தை விரிவாக்கியதன் ஊடாக மக்கள் சந்தித்த பிரச்சினைகள் ஒரு குறிப்பிட்ட அளவு இடம் பெற்றதாலும், ராஜராஜ சோழன் அல்லது ஜெகநாத கச்சிராயன் போன்ற சூப்பர் ஹீரோக்கள் யாரையும் பிரபஞ்சன் தேடி அலையாததாலும் இந்த இரு படைப்புகளும் தமிழ் நாவல் வரிசையில் ஒரு முக்கிய இடம் பிடிக்கின்றன.

பிரபஞ்சனுக்கு சாகித்ய அகாதமி, சாரல், பாரதிய பாஷா பரிஷத், இலக்கிய சிந்தனை முதலான படைப்பிலக்கியங்களுக்கான முக்கியமான விருதுகள் எல்லாம் வழங்கப்பட்டன. அவர் இருதய அறுவை சிகிச்சைக்காக அப்போலோ மருத்துவ மனையில் இருந்தபோது அந்தச் செலவுகளை புதுச்சேரி அரசு ஏற்றுக் கொண்டது. இப்போது அவரது இறுதிச்சடங்குகளும் அரசு மரியாதை களுடன் நடந்தேறின. தமிழ் பேசும் மாநில மானாலும் புதுச்சேரிக்கென சில தனி அடையாளங் களும் பண்பாடுகளும் உண்டு. அவற்றை எழுத்தில் கொண்டுவந்தவர் என்கிற வகையில் புதுச்சேரி அரசும் மக்களும் பிரபஞ்சனுக்கு உரிய மரியாதை களை அளித்துள்ளது வரவேற்கத்தக்கது.

தனிப்பட்ட முறையில் என்னிடம் மிக்க அன்புடன் பழகியவர் பிரபஞ்சன். என் நூல் வெளியீடுகள் பலவற்றிலும் கலந்து கொண்டு அவற்றை முழுமை யாகப் படித்து வந்து விமர்சித்துள்ளார். தீராநதியில் நான் ஐந்தாண்டுகள் தொடர்ந்து 'பேசாப் பொருளைப் பேசத் துணிந்தேன்' என்கிற தலைப்பில் எழுதிவந்த கட்டுரைகள் நூல் வடிவம் பெறவேண்டும் என்பதைத் தொடர்ந்து வற்புறுத்தி வந்த அவர் ஒரு கட்டத்தில் தான் பணிபுரிந்து வந்த ஒரு வெளியீட்டு நிறுவனத்திற்கு ஒருநாள் என்னை அழைத்துச் சென்று அதை வெளியிட வற்புறுத்தினார். அவர்கள் அதைப் பகுதி பகுதியாக வெளியிட விரும்பியதை நான் ஏற்காததால் அது சாத்தியமாகவில்லை.

பிரபஞ்சனுடனான ஒவ்வொரு உரையாடலுமே ஒரு கதையை வாசிக்கும் அனுபவத்தை நமக்கு அளிக்கும். எல்லாவற்றையும் கதையாக மாற்றிவிடும் வல்லமை அவருக்கு உண்டு. பள்ளியில் படிக்கும் போது அப்போதைய ஃப்ரெஞ்ச் சட்டத்தின்படி அவர் மீண்டும் கீழ் வகுப்பொன்றிலிருந்து படித்துவர வேண்டும் என்கிற நிலை ஏற்பட்டதாம். வகுப்பி லேயே உயரமான பெரிய பையனாக வயதில் குறைந்த மாணவர்களுடன் தான் பயில நேர்ந்ததை சிரிக்கச் சிரிக்கச் சொல்லிக் கொண்டிருந்தார் ஒரு நாள். இப்படி நிறையச் சொல்லலாம்.

இரண்டாண்டுகளுக்கு முன் அவர் மனைவி இறந்தபோது அவரது வீட்டிற்குச் சென்றிருந்தேன். என்னைக் கண்டவுடன் எழுந்து வந்து அருகில் அமர்ந்து வழக்கம்போலச் சிரித்துப் பேசத் தொடங்கி விட்டார். எல்லோரும் பார்க்கத் தொடங்கியவுடன் ஒரு கணம் பேச்சை நிறுத்திவிட்டுப் பின், "இன்னிக்கு நான் சிரிக்கக் கூடாது இல்ல..." எனச் சொல்லிவிட்டு மீண்டும் சிரித்தார். பின் எழுந்து, "வாங்க ஒரு டீ குடிச்சிட்டு வரலாம்" எனச் சொல்லி அருகிலிருந்த ஒரு தேநீர்க் கடையில் எங்களுடன் டீ குடித்துவிட்டு ஒரு சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டு வந்தார். சிறிது நேரத்தில் நான் புறப்பட்டுவிட்டேன். அடுத்த நாள் மனைவியின் சடலம் இறுதிச் சடங்குகளுக்காக எடுத்துச் செல்லும்போது குலுங்கி அழுது அவர் கதறிய கதையை நண்பர் சுகுமாரன் சொன்னபோது அது எனக்கு வியப்பாக இல்லை.

அதுதான் பிரபஞ்சன். ●

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்




## வால்கா முதல் கங்கை வரை

**ராகுல சாங்கிருத்தியாயன்**

**விலை ₹ 350/-**

கி.மு 6000-2500 வரையிலான காலம் தொடங்கி 20ஆம் நூற்றாண்டு வரையிலான சமுதாயங்களின் வரலாறும் வளர்ச்சிப் படிநிலைகளும்கதை வடிவில் 20 தலைப்புகளில் தொகுக்கப்பட்டுள்ள நூல்.




## வெகுளி


தமிழில் : ச. வின்சென்ட்

பதிப்பாசிரியர் : சா.ஜெயராஜ்

**விலை ₹ 750/-**

**ஃபியோதர் தஸ்தயேவ்ஸ்கி**

உலகத்தைப் புரிந்துகொள்ள முயலாமல் தன்போக்கில் ஆத்ம தரிசனத்தோடு ஆழமாக அன்பு செலுத்தவும், முற்றாக நேசிக்கவும் விரும்பும் அப்பழுக்கற்ற ஒரு மனிதனை இவ்வுலகம் எவ்விதமாகவெல்லாம் கேலி செய்கிறது என்பதோடு அவற்றைக் கண்டுகொள்ளாமல் தொடர்ந்து பயணிக்கும் பழிபாவமற்ற ஒரு மனிதனின் கதையே இந்நாவல்.




## மஹத்

முதல் தலித் புரட்சியின் உருவாக்கம்


தமிழில் : கமலாலயன்

**விலை ₹ 550/-**

**ஆனந்த் டெல்டும்ப்டே**

இந்நூலில் இந்திய சாதி அமைப்பு மற்றும் தீண்டாமை குறித்தும், இதற்கு எதிராகக் கடந்த காலத்தில் நிகழ்ந்த சாதி எதிர்ப்புப் போராட்டங்கள் குறித்தும் பேசப்படுகிறது.

கடந்த காலத்தில் நிகழ்ந்த போராட்டம் ஒன்றின் பதிவாக மட்டுமின்றி தற்போதைய தலித் இயக்கங்களுடன் இணைத்தும் ஆராய்கிறது.





## காலனியத் தொடக்கக் காலம்

**விலை ₹ 195/-**

(கி.பி. 1500-1800) **எஸ்.ஜெயசீல ஸ்டீபன்**

இதுவரை தமிழில் எடுத்துக் கூறப்படாத தமிழகத்தின் காலனியத் தொடக்கக் காலம் பற்றி மிக விரிவாக, மூல ஆதாரங்கள் அடிப்படையில் இந்நூல் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கின்றது.



# காவ்யாவின் தமிழ்ப் பொங்கல்

## சென்னைப் புத்தகக் காட்சியில்

# 20 நூல்கள் வெளியீட்டு விழா


தலைமை: நீதியரசர் **ஆர்.மகாதேவன்** உயர்நீதிமன்றம், சென்னை

வெளியிடுபவர்: **அவ்வை நடராசன்** மேனாள் துணைவேந்தர் தமிழ்ப்பல்கலைக் கழகம்

நிகழ்த்துநர்: **பேரா.காவ்யா சண்முகசுந்தரம்**

**சிறப்பு அழைப்பாளர்கள்**

எழுத்தாளர் **பொன்னீலன்**, ஊடகவியலாளர் **மாலன்**, கவிஞர் **ஈரோடுதமிழன்பன்**,
கவிஞர் **முத்துலிங்கம்**, அருட்திரு **ஜெகத் கஸ்பார்**, பேரா. **வீ.அரசு**,
கவிஞர் **தமிழச்சி தங்கபாண்டியன்**, கவிஞர் **ஆண்டாள் பிரியதர்சினி**,
திரு. **இனிகோ**, திரு. **அருள்**, திரு. **அழகியசிங்கர்**, **ஞானத்தாய்**, திரு. **மணவழகன்**,
திரு. **சஜீவ்**, எழுத்தாளர் **டேவிட்பிரபாகரன்**, திரு. **ஆழ்வைக்கண்ணன்**,




நாள் : **10-01-2019** வியாழன், மாலை **3.30** இடம் : **ஒய்.எம்.சி.ஏ.மைதானம்,** நந்தனம்

தொடர்புக்கு : **98404 80232** காவ்யா **கடைஎண் : 334**



# காலனி அரசும் மருத்துவப் பயிற்று மொழியும்

டாக்டர் சு.நரேந்திரன்

## இந்தியா முழுவதும் உள்ளூர் மொழியில் மருத்துவம்

### கல்கத்தாவில் உள்ளூர்மொழி வழி மருத்துவக் கல்வி ஆரம்பம்

18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மருத்துவ மனையில் வேலை பார்த்த பிரிட்டிஷ் சர்ஜன்கள் சில இந்தியர்களுக்கு நோய்கள் மற்றும் மருத்துவம் குறித்து பயிற்சி கொடுத்தனர். என்றாலும் இது ஒரு வரைமுறைக்கு உட்பட்டதாக இருக்கவில்லை. இப்படி பயிற்சி பெற்றவர்கள் சுதேசி மருத்துவர்கள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் அரசால் ஒரு ரெஜிமெண்ட்டுக்கு இருவரும் மற்றும் சிவில் ஸ்டேஷன்களுக்கு ஒருவர் அல்லது அதற்கு மேலும் பணியில் அமர்த்தப்பட்டார்கள். இவர்களை மக்களும் அரசும் கம்பவுண்டர் என அழைத்தனர். மேற் பதவிக்குச் செல்ல இவர்கள் தேர்வுக்கு ஆளாயினர்.

*1813 சார்ட்டர் சட்டத்திற்குப் பிறகே ரூ. 1 லட்சம் இந்தியருக்கான கல்விக்குப் பணம் ஒதுக்கப்பட்டது. இச்சமயத்தில் காலனி அரசு மருத்துவக் கல்வியை இந்தியருக்கு எந்த மொழியில் தருவது என்பதில் கவலை கொண்டது. மேலும் சப் மெடிக்கல் சர்வீஸ் ஆட்களை ஐரோப்பியர்களைக் கொண்ட ராணுவத்திற்கு (1812) அனுமதிக்க வேண்டியதாகவும் இருந்தது. ஆகவே இதற்காக நாட்டு மருத்துவர்களை உருவாக்கத் தகுந்த கல்வி நிலையங்களை ஏற்படுத்த வேண்டியதாய் இருந்தது. ஆரம்பத்தில் இந்தியர்கள் இப்பயிற்சிக்கு அனுமதிக்கப்படவில்லை. 1822க்குப் பிறகே இது சாத்தியமானது. இதற்கான மெடிக்கல் போர்டு சமஸ்கிருதத்தில் உள்ள மிகச் சிறந்த ஆயுர்வேத மருத்துவ நூல்களை 1822இல் சமர்ப்பித்து ஒரு முக்கிய நிகழ்வை உண்டாக்கியது. அதாவது உள்நாட்டு ஆயுர்வேத மருத்துவத்துடன் நவீன மருத்துவத்தையும் இணைத்துக் கற்பிப்பதே இதன் நோக்கம் ஆகும்.* (Medicine and Raj, p.19)

### சுதேசி மொழியில் வங்காளத்தில் மேலை மருத்துவம்

*ஆரம்ப காலத்தில் ராணுவத்திற்குத் தேவையான சுதேசி மருத்துவர்கள் ஆங்கிலத்தில் இல்லாது உள் நாட்டு மொழிகளிலேயே கற்பித்து அதே சமயத்தில் ஐரோப்பியர்களின் மேன்மையை விளக்கும் நவீன மருத்துவத்தையும் இணைத்துக் கற்பிக்க வேண்டியதாய் இருந்தது. ஆகவே, ஆரம்பத்தில் உள்நாட்டு மருத்துவ நிறுவனம் 1822இல் கல்கத்தாவில் டாக்டர் ஜேம்ஸ் ஜெம்மிசனை கண்காணிப்பாளராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இவருக்கு ஊதியம் ரூ. 800/-. இவருக்கு உதவியாக ஒரு பண்டிட் பதவியில் அமர்த்தப் பட்டார். 1824 அக்டோபர் மருத்துவப் பள்ளி திறக்கப் பட்டது.*

*இந்த நிறுவனத்தில் 20 மாணவர்கள் தங்கள் படிப்பை உள்நாட்டு மொழியில் படிக்க ஆரம்பித்தனர். இதற்காக இந்தி அல்லது உருதில் ஆங்கில மருத்துவ நூல்களைக் கண்காணிப்பாளர் இந்திய மொழியிய லாளர்கள் துணையுடன் மொழிபெயர்த்துக் கொணர முயன்றனர். இதனைத் தொடர்ந்து லண்டன் பார்ம கோபிய 1825இல் மதுசூதன் குப்தாவால் மொழி பெயர்க்கப்பட்டது. இவர் சுதேசி மருத்துவ நிறுவனத்தில் மாணவராக இருந்து பிறகு கல்கத்தா மருத்துவக் கல்லூரிக்கு இந்தி வகுப்புகளுக்கு ஆசிரியராகப் பணியாற்றி, ஹூப்பரின் உடற்கூறு வடிமேகம்* (Hooper's Anatomist's vademecum) *எனும் நூலை மொழிபெயர்த்தார். இதற்காக ரூ.1000 இவருக்கு வழங்கப்பட்டது.*

*பண்டைய முறையில் மருத்துவ வகுப்புகள் நடத்தி மெழுகு பொம்மைகளைக் கொண்டு உடல் கூறு சுதேசி மொழியில் கற்பிக்கப்பட்டது. பிறகு ஆடு மாடுகள் மிருகங்கள் உடற்கூறைக் கற்க பயன் படுத்தப்பட்டது.*

*இந்நிறுவனத்தில் படித்த மாணவர்கள் மாதத்திற்கு ரூ. 8 பெற்றனர். இந்நிலையத்தில் படித்து தேர்ச்சி பெற்றபின் ராணுவத்தில் அல்லது அரசில் வேலைக்கு அமர்த்தப்பட்டு மாதத்திற்கு ரூ. 20 ஊதியமாக அளிக்கப்பட்டு 15 ஆண்டுகள் பணிபுரிய அனுமதிக்கப்பட்டனர். இதுதவிர பாதுகாப்புப் பணிக்குச் சென்றால் கூடுதல் ரூ.5 கொடுக்கப் பட்டது.*

### மேலை மருத்துவத்துடன் இந்திய மருத்துவமும் கற்பிக்கப்பட்டது

*3 ஆண்டுகள் படிப்புப் பயிற்சியின்பொழுது இரண்டாகப் பிரிக்கப்பட்டு, முதல் பகுதியில் மருந்து தயாரித்தல், உடலியங்கியல் மற்றும் உடல்கூறு ஆகியன போதிக்கப்பட்டன. இரண்டாம் பகுதியில் மருத்துவம், அறுவை சிகிச்சை கற்பிக்கப்பட்டன. நோயாளிகளைப் பார்த்துப் படிக்க கல்கத்தாவின் பல மருத்துவமனைகளுக்குச் சென்று வந்தனர். உடற்கூறு கற்கும்போது மனித உடலைச் சோதனையிட்டுப் படிக்காது, சிறு விலங்குகளை அதற்குப் பயன் படுத்தினர். மேலும் பொது மருத்துவமனையில் நடைபெறும் சவப் பரிசோதனையின் போது பார்வையிட அனுமதிக்கப்பட்டனர். இக்கால கட்டத்தில் கண்காணிப்பாளர் டாக்டர் ஜெம்மிசன் இறந்த பிறகு, சர்ஜன் பீட்டர் பிரீட்டம்* (Peter Brettrom) *பதவி ஏற்றார். இதே நேரத்தில் கல்கத்தா சமஸ்கிருத கல்லூரியில் சமஸ்கிருத மருத்துவ வகுப்புகள் தொடங்கப்பட்டு, அங்கு சரகர், சுசுருதா நூல்கள் கற்பிக்கப்பட்டன. இத்துடன் உருதில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்களும் போதிக்கப் பட்டன. இதேபோல கல்கத்தா மதரசாவில் உருதில் மொழிபெயர்க்கப்பட்ட ஹூப்பர் உடல்கூறு வடிமேகம் உட்பட பல நூல்கள் கற்பிக்கப் பட்டன. இந்நிலையில் உள்நாட்டு மொழியில் பயிற்றுவிப்பது அரசிற்குப் பெரும் தொல்லையாகவும் முறையாகக் கல்வியைக் கொடுக்க முடியவில்லையோ என்ற எண்ணமும் பள்ளி இயக்குநர்களுக்கு இருந்தது. இதன் வெளிப்பாடாக 1824 பிப்ரவரி 18இல் ஜேம்ஸ்மில், "இம்மாதிரி உள்நாட்டு நூல்களைக் கற்பிப்பதும், அவற்றைக் கற்பிக்கத் தேவையானவர் களை உத்தியோகத்தில் சேர்ப்பதும் தேவையற்றது என்பதைவிட, பொருளற்றது. மேலும் நமக்கு இந்துக்கள் அறிந்ததைக் கற்பிப்பது என்பது முழுமையான கல்வி ஆகாது," என்று அரசுக்குப் பரிந்துரை செய்தார். பள்ளி இயக்குநர், உள்நாட்டு மொழிப் பள்ளியை மூட ஆணை பிறப்பித்தார்.*

அரசு, இதற்கு உடன்படாது, இதன் தேவையை உணர்த்தியது. இதற்காகக் கிழக்கிந்தியக் கம்பெனியில் 1826 ஜூன் 21 பெரும் சர்ச்சையும் வாக்குவாதமும் நடைபெற்று கடைசியில் ஆணை திரும்பப் பெறப் பட்டது.

### சுதேசிக் கல்வி வழி படிக்க பண உதவி

1830 நவம்பரில் டெய்லர் காலத்தில் அதிக மொழிபெயர்ப்புகள் நடைபெற்றன. இக்காலத்தில் சமஸ்கிருத கல்லூரிக்கு அருகில் 30 படுக்கை வசதியுடன் மருத்துவமனை கட்டப்பட்டது. இந்த மருத்துவமனை பாபுராம் கம்யூல்சென் என்பவரால் பெரும் தொகை அன்பளிப்பு அளிக்கப்பட்ட பின்னரே கட்டப்பட்டது. இவர் சமூக நீதிக் காவலர் கேசவ் சந்திரசென்னின் பேரனாவார். டைலர் இந்திய மொழிகளில் கற்பிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி, ஆங்கில வழிப் படிப்பை மறுத்து வந்தார். ஜான் டெய்லருக்குப் பிறகு பிரிட்டன் பணியில் அமர்ந்தார். சுதேசி மொழி வழிக் கல்வி 1835 வரையிலும் நடைபெற்று பிறகு அது அரசால் புறக்கணிக்கப் பட்டது. இது இப்படி இருக்க,

### மாணவர் ஆர்வம் காட்டவில்லை, பிராமணர்கள் உடல்கூறு கற்க மறுப்பு

பள்ளி நடந்து கொண்டிருக்கும்போது (1824-34) மாணவர்கள் சேர்க்கை மிகவும் குறைவாக இருந்தது. ஆர்வம் காட்டவில்லை. இதற்காகப் பள்ளி பிள்ளை களுக்கு ஊக்கத் தொகையைக் கூட்டிக் கொடுத்து, அரசுப் பதவிகளில் முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று கூறியது. கடைசியாக நிரந்தர வேலை அளிப்பதாகக் கூறிய பிறகே மாணவர் எண்ணிக்கை கூடியது. பிராமணர் உடற்கூறு படிப்பது கூடாது என்ற மூடநம்பிக்கையும் மாணவர் சேர்க்கைக்கு ஒரு தடையாய் இருந்தது. ஆரம்ப காலத்தில் சுதேசி மருத்துவ மாணவர்கள் உள்நாட்டு இராணுவ அதிகாரிகளின் பிள்ளைகள் அல்லது உள்நாட்டு மருத்துவர்கள் பிள்ளைகளாகவே இருந்தனர். பொது மக்களிலிருந்து மிகச்சிலரே மாணவராகச் சேர்ந்து படித்தனர்.

### சுதேசி மொழி வழிக் கல்வி – அரசு ஏமாற்றமடைந்தது

மருத்துவக் கல்வி கற்பிப்பதில் திடீர் திருப்புமுனை 1833இல் நிகழ்ந்தது. கவர்னர் ஜெனரல் லார்ட் வில்லியம் பென்டிங் (William Bentinck) உள்நாட்டு மருத்துவ நிலையங்கள் எப்படி நடை பெறுகின்றன என்பதைக் குறித்து அறிக்கை அளிக்க ஒரு கமிட்டியை அமைத்து கேட்டுக் கொண்டார். இதன்படி அறிக்கை சமர்ப்பித்தபோது அரசு பெரும் ஏமாற்றம் அடைந்தது.

இதற்கு ஜான் டெய்லர் உள்நாட்டு மொழி மருத்துவத்தின் சிறப்பைக் கூறி வாதிட்டாலும், ஆங்கிலத்தை ஆதரிப்பவர் சார்பாக அலெக்சாண்டர் டர்ப் வாதாடினார். இதன்படி நூல்கள், படம், அனைத்தும் மிகுதியாக சொல்ல முடியாத அளவில் ஆங்கிலத்தில் உள்ளது. ஆனால், உள்நாட்டு மொழியில் மருத்துவம் மிகவும் அறிவுசார்ந்ததாக இல்லை. மேலும் செப்பமற்று உள்ளதாகக் கூறினார். பிறகு மெக்காலேயின் கல்வி அறிக்கையின்படி 1835 கல்கத்தா மருத்துவக் கல்லூரி ஆரம்பித்த நிலையில் ஆங்கிலம் பயிற்சிமொழி ஆக்கப்பட்டது.

### உள்நாட்டு மொழிவழிக் கல்வி மறுப்பு

பென்டிக் கமிட்டியின் அறிக்கை 1834 அக்டோபர் உள்நாட்டு மொழிப் பயிற்சியைத் தடை செய்யக் கோரியது. அக்கமிட்டி இதற்குக் காரணமாக "உள் நாட்டு மருத்துவர்களைப் பெரும் பணச்செலவில் உருவாக்கியதால், அவர்களின் மூலம் அரசு பெறும் நன்மை குறைந்தது. மேலும் இவர்கட்கு கற்பிக்க ஆங்கிலமும் உள்நாட்டு மொழியும் கற்பிப்பவர் களுக்குக் கூடுதல் ஊதியம் தர வேண்டியதாய் உள்ளது. அதிக அளவு பணச் செலவு, நூல் எழுத, மொழி மாற்றத்திற்காக செலவிட வேண்டியதாய் உள்ளது. மற்றும் இம்மாணவர்கள் தங்கள் மத நம்பிக்கை காரணமாக உடற்கூறு பயிற்சி பெறாது பட்டம் பெறுவதால் குறையுள்ள படிப்பாகவே பட்டது எனக் கூறப்பட்டது. வங்காள உள்நாட்டு மருத்துவ நிலையமே காலனி அரசின் முதல் கல்லூரியாகும். இது மூடப்பட்ட பிறகு மீண்டும் 85 ஆண்டுகள் கழித்தே 1991இல் புரவன்சியல் அரசு சட்டத்தின்படி (Provincial Government Act) மறு பரிசீலனைக்கு வந்து புத்துயிர் பெற்றது.

மெடிக்கல் கவுன்சிலின் பரிந்துரைப்படி பென்டிக்கினால் 1835 உள்ளூர் மொழி மருத்துவ நிலையங்களை மூட ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன்படி கல்கத்தாவில் சமஸ்கிருத கல்லூரி மற்றும் மதரசாவில் நடைபெற்று வந்த கல்லூரிகள் மூடப் பட்டு, கல்கத்தா மருத்துவக் கல்லூரி 1835 பிப்ரவரி 1இல் தொடங்க அடிக்கல் நாட்டப்பட்டது. இதனால் நிலையத்திலிருந்த நூல்களும், உபகரணங்களும் புதிய மருத்துவக் கல்லூரிக்கு மாற்றப்பட்டு அங்கு வேலை பார்த்த "வைத்தியப் பேராசிரியர்" மதுசூதன் குப்தாவும் அவருடன் வேலை பார்த்த மற்ற இருவரும் புதிய மருத்துவக் கல்லூரிக்கு மாற்றப்பட்டனர். மருத்துவக் கல்லூரி கண்காணிப் பாளர், உதவி மருத்துவர், இரசாயனத் துறைக்கான பேராசிரியர் என மூவருடன் 50 மாணவர்களைக் கொண்டு கல்லூரி தொடங்கியது. மாணவர்களுக்குத் தகுதிக்குத் தகுந்தபடி ரூ. 7 - 12 வரை உதவித்

தொகை வழங்கப்பட்டது. இவர்கள் தேர்ச்சி பெற்றவுடன் சப் அசிஸ்டண்ட் சர்ஜனாக அரசில் பதவி பெற்றனர். அல்லது தனியாக அவர்கள் விருப்பத்திற்கேற்ற இடத்தில் மருத்துவம் செய்யவும் அனுமதிக்கப்பட்டனர்.

### ஆங்கில வழிப்படிப்பும் வேலை வாய்ப்பும்

வங்கத்தில் கல்வியும் மேலை விஞ்ஞானமும் ஆங்கில மொழி மூலம் கற்பிக்க உள்ளூர் மொழிகளிடமிருந்து மாற்றம் பெற்றமைக்குச் சமூக ரீதியாக 1820-30களில் அங்கீகாரம் கிடைத்தது. உள்ளூர்வாசிகளான மொகலாயர் ஆட்சி போனபின்பு தங்களுடைய வலிமையை இழந்தனர். புதிய படித்த சமுதாயமான பைத்ராலாக் (Baidralok), பிராமணர், பனியாஸ், கயாஸ்தாஸ் போன்ற இந்து உயர்சாதிக்காரர்கள் 18ஆம் நூற்றாண்டின் பிந்தைய பகுதியில் கிழக்கிந்தியக் கம்பெனியின் முகவர், துபாசி (மொழி பெயர்ப்பாளர்) மற்றும் வேலை ஆட்களாகவும் ஆகினர். இதற்குப் பெரும் துணையாய் இருந்தது ஆங்கில மொழிக் கல்விக்கு இவர்கள் மரியதே ஆகும். ஏனெனில் பன்னெடுங்காலமாகத் தங்களை ஆட்சி செய்த மொகலாயர்கள் மொழியையே பின்பற்றி வாழ வேண்டியதாய் இருந்தது. இக்கால கட்டத்தில் பாரசீக மொழி படித்த பல மேதைகள்கூட ஆங்கில வழிக்குத் திரும்பினர்.

### அரசு உதவி இன்றி – இந்துக் கல்லூரி

இதன் தொடர்பாக உயர்சாதியினர் கல்கத்தாவில் 1816இல் இந்துக் கல்லூரியை அரசு உதவி இன்றியே ஆரம்பித்தனர். இதில் வானியல், வேதியியல், புவி இயல், வாழ்வியல் போன்ற விஞ்ஞான பாடங்கள் கற்பிக்கப்பட்டன. இக்கல்லூரியில் 1828இல் மொத்தம் 400 மாணவர்கள் கல்வி கற்றனர். இவர்கள் அனைவரும் இந்துக்களே ஆவர். இதன்பின் பல ஆங்கிலப் பள்ளிகள் திறக்கப்பட்டு, உயர்சாதியினர் அரசு வேலைகளுக்குத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டனர். இதனைப் பெரிதும் ஆதரித்து இராஜாராம் மோகன்ராய் 1823 டிசம்பர் 11 அன்று தன் பிரசித்தபெற்ற பேச்சில், “மேலை விஞ்ஞானத்தைக் கற்றல் என்பது ஓர் அருமருந்து. இது பல இந்துக்களைத் தீமைகளிலிருந்து உய்விக்கும்” என்ற கருத்து இடம் பெற்றது. இதைத் தொடர்ந்து மற்றொரு சமூக ஆர்வலர் பாபு ரதே காந்தவும், பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கக் கோரினார். இக்கால கட்டம் பிராமணர்கள் உடற்கூறைக் கற்றுக் கொள்ள பிணப் பரிசோதனை செய்வது தங்கள் இந்து மதத்திற்கு எதிரானது என்று கருதிய காலமாகும். ஆனால் 1836 ஜனவரி 10இல் மதுசூதன் குப்தா மற்றும் அவர் மாணவர்களான உமாசந்திரன் சேட், துவாரகாநாத் குப்தா, ராஜ் கிறிஸ்டோ டே மற்றும் ஒருவருடன் ஆசிரியர் குட்டேவ் துணையுடன் பிணப் பரிசோதனையை, கல்லூரியின் ஒரு பகுதியில் நிகழ்த்தினார். ((Medicine and the Raj, p. 28)

இவர் பிணப்பரிசோதனை நிகழ்த்துவதற்குமுன் இதனைப் போற்றும் விதமாக கல்கத்தா வில்லியம் கோட்டையில் 50 முறை பீரங்கி முழங்கியது.

இதனை நினைவில் நிறுத்தும் விதமாக Drink Water Bethune - a member of Supreme Council, கல்லூரிக்கு 1850இல் மதுசூதன் குப்தா படத்தை அன்பளிப்பாக அளித்தார். அது இன்றும் அங்குக் காட்சி அளிக்கிறது.

மதுசூதன் குப்தா பிணப் பரிசோதனை செய்த இரண்டு ஆண்டுகளுக்குப்பின், மற்றவர்களும் பிணப் பரிசோதனை செய்து உடல்கூறைக் கற்கத் தொடங்கினர். இதை வெள்ளையர்கள், இந்தியாவே மேலை விஞ்ஞானத்தை ஏற்றுக் கொண்டது போல் வியந்து போற்றினர்.

ஆங்கிலமொழி வழிப் பயிற்சி மூலம் 50 மாணவர்களும், எல்லா இனத்தவரும், மதத்தவரும் இணைந்து ஆங்கிலம் - வங்காளம் அல்லது ஆங்கிலம் - இந்தி மொழியில் படிக்கவும் எழுதவும் தெரிந்தவர்கள் கற்று வந்தனர். இவர்களுடன் சில மாணவர்கள் இலங்கை, பர்மாவிலிருந்தும் வந்து படித்தனர்.

ஆங்கில வழிக் கல்வி நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே சமயம், ராணுவ வகுப்பு உள்ளூர் மொழியில் திட்டமிட்டபடி ஆரம்பிக்கப்பட்டது. 15 மாணவர்கள் உள்ளூர் மொழியை எழுதவும் படிக்கவும் தெரிந்த நிலையில் அனுமதிக்கப்பட்டு, மாத உதவி ஊதியம் ரூ.5 அளிக்கப்பட்டது. இவர்களும் கல்லூரி வளாகத்தில் வசிக்க அனுமதிக்கப்பட்டனர். இவ்வகுப்புகளுக்கு மதுசூதன் குப்தாவுடன் 4 ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட்டனர். இவர்கள் அனைவரும் இந்தியர்களே. இதில் மதுசூதன் குப்தா 1843 இல் கண்காணிப்பாளராகி ராணுவ வகுப்பையும் தலைமையேற்று நடத்தினார். இது பழைய உள்ளூர் மொழி நிறுவனத்தைப்போல் இல்லாது மருத்துவ மனை, பரிசோதனைக்கூடம், சவப் பரிசோதனை ஆகிய வசதிகளுடன் கற்பிக்கப்பட்டன. இதற்குப் பிறகு, 1853 வங்காளத்தைக் கற்பிக்கும் மொழியாகக் கொண்டு புதிய வகுப்புகளில் மாவட்ட மற்றும் கிராம மருத்துவமனைகளுக்குச் சென்று வேலை செய்ய கற்பிக்கப்பட்டது.

ஆனால், இராணுவ வகுப்பு மாணவர்கள் அரசுக்குத் தேவையான அளவிற்கு எண்ணிக்கையில்

சேர்க்கையில் இல்லை. சேர்ந்தவர்களும் ஒழுங்காகக் கல்வி கற்கவில்லை. இதனால் பலர் படிப்பைவிட்டு வெளியேற வேண்டியவர்களாயினர். 1838இல் இராணுவத்திற்கு அதிகமான உள்நாட்டு மருத்துவர்கள் தேவைப்பட்டபோது, கல்லூரி கவுன்சில் இங்குப் படித்தவர்களை அனுப்ப மறுத்தது. ஏனெனில் இவர்களைச் சேர்த்தால் ஐரோப்பியர்களின் பழக்க வழக்கங்களுக்கு எதிராகக் களங்கத்தை ஏற்படுத்துபவர்களாக இருப்பார்கள் என நம்பியதனால் ஆகும்.

### இந்தியருக்கு மேல்நாட்டில் உயர்கல்வி

எனினும் கல்கத்தா கல்லூரியில் படித்த மாணவர்கள் உயர்படிப்பு படிக்க உள்ளூர் வாசியான பாபு துவாரகநாத் (Babu Dwarakanath) தனது செலவில் இருவரை டாக்டர் குட்டேவ் 1845இல் இங்கிலாந்திற்குச் செல்லும்போது அழைத்துச் சென்றார். இத்துடன் குட்டேவ் உதவியுடன் மற்ற இரு மாணவர்களும் இங்கிலாந்து சென்றனர். லண்டன் சென்ற நான்கு மாணவர்கள் துவாரகநாத் போஸ், கோபால் சந்திர கில், போலநாத் போஸ், சர்ஜ்கோமர் சக்கரவர்த்தி - இவர்கள் அனைவரும் அங்குப் படித்து தேர்வில் வெற்றி பெற்று (MRCS) 1846இல் இந்தியா திரும்பினர். இதில் சுர்சி கோமர் சக்ரவர்த்தி லண்டனில் தங்கி எம்.டி. படித்து லண்டனில் ஐ.எம்.எஸ். தேர்வில் முதலாவதாக வெற்றி பெற்றார். (1853) இவரே இந்தியர்களில் முதலாவதாக இந்திய மருத்துவப் பணித் துறையில் வேலை செய்து கல்லூரிப் பேராசிரியராக வேலை பார்த்ததுடன், கல்கத்தா நகரில் சிறந்த மருத்துவ ஆலோசகராகவும் விளங்கியவர்.

### இருவகை வகுப்புகள்

1842 வரை கல்லூரியில் வகுப்பு ஆரம்பித்த பிறகு, ஆங்கிலக் கல்வி பிரைமரி கிளாஸ் என்றும், ராணுவ வகுப்பு, செகண்டரி வகுப்பு எனவும் அழைக்கப்பட்டன. மக்கள் மத்தியில் படிக்க வரவேற்பு ஏற்படும் என்ற காரணத்திற்காக ஆங்கில வகுப்பு மாணவர்கள் உதவித்தொகை பெற்றனர். ஆனால் 1843க்குப் பிறகு, படிக்க இலவச அனுமதி மட்டும் அளிக்கப்பட்டு, உதவித் தொகை கொடுப்பது சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டது. 1857-58இல் உதவித்தொகை பெறுபவர் எண்ணிக்கை 50லிருந்து 35 ஆனது. உதவித்தொகையின்றி படித்தவர் எண்ணிக்கை 75 ஆனது. 1858க்குப் பிறகு ரூ.5 பிரைமரி வகுப்பில் சேர கட்டணம் வசூலிக்கப்பட்டது. பணம் கொடுத்து படிக்கும் பழக்கம் 20 ஆண்டுகளில் கிட்டத்தட்ட முழுமையானது. இவர்கள் கல்கத்தா பல்கலையில் பட்டம் பெற்று மேற்படிப்பிற்கு இங்கிலாந்து செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

### ஆங்கில வகுப்புகளில் உயர்ஜாதி இந்துக்கள்

பிரைமரி வகுப்பில் பெரும்பாலோர் இந்துக்களே. இதேபோல் ராணுவ வகுப்பில் முழுவதுமாக இஸ்லாமியர்களே மாணவர்களாக இருந்தனர். 1857-58 கணக்குப்படி (பிரைமரி வகுப்பில்) மொத்தம் 80இல் 79 இந்துக்களும் 1 முஸ்லீமும் இருந்தனர். இந்துக்களில் பிராமணர் - 32, காஸ்டோ - 30, பைட்டோ - 9 ஆகும். இதனால் நாம் அறிவது, ஆங்கில வழிக் கல்வியை ஆதரித்துப் படித்தவர்கள், இஸ்லாமியர்களை விட இந்துக்களே என்பதாகும். ஏனெனில், இஸ்லாமியர்கள் தங்கள் மொகலாய ஆட்சி இழப்பு என்பதிலிருந்து மீளாது இருந்து, தங்கள் மதக் கொள்கைப் பிடியிலும் சிக்கி இருந்தனர். இதற்கு மாறாக, உயர்ஜாதி இந்துக்களில் (எ.கா. பிராமணர்கள், பனியாக்கள்) பெரும்பான்மையானவர்கள் ஆங்கில வழிக் கல்வி கற்று அரசுக்கு அவசியமானவர்களாக மாறினர்.

### ராணுவப் பள்ளியில் அதிகமாக இஸ்லாமியர்

ஆனால் இதற்கு மாறாக ராணுவப் பள்ளியில் 115 மாணவர்களில் 94 முஸ்லீம்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் வடமேற்கு பிரதேசத்தைச் (North West Pradesh) சேர்ந்தவர்கள். மற்றவர்கள் 21 பேர் இந்துக்கள் வங்காளத்தைச் சேர்ந்தவர்கள்.

இதன்பிறகு, ராணுவ வகுப்பில் சேர ஆங்கிலம் எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் என அரசு நிர்ப்பந்தம் செய்தது. இது முஸ்லீம் மாணவர்களைப் பெரிதும் பாதித்தது. பிறகு, படிப்பில் சேர ஆங்கில சோதனையில் வெற்றி பெற்றால் ரூ.250 உதவித் தொகை வழங்கப்பட்டது. இதில் முஸ்லீம் மாணவர்கள் பெரிதும் தோல்வியைக் கண்டனர். இதன் காரணமாகவே ஆக்ராவில் ஆங்கிலவழிக் கல்வி மருத்துவக் கல்லூரி 1853இல் தொடங்கப் பட்டது.

1852-53இல் வங்காள மொழி வழி மருத்துவப் படிப்பு உள்நாட்டு மருத்துவர்களை உருவாக்க ஆரம்பிக்கப்பட்டது. இதில் தேறியவர்கள் ஜூனியர் ராங்க்கில் அரசிலும், ஜெயில், தேயிலைத் தோட்டம், சுரங்கம் மற்றும் தொடர்வண்டி நிர்வாகத்திலும் பணியாற்றினர். இவர்கள் ஆங்கில வழிக் கல்வி பயின்றவர்களைக் காட்டிலும் அதிகமாக ஐரோப்பிய மருத்துவத்தைப் பரப்பினர். சுதேசி மொழியில் படிக்கும் போது இவர்கள் சவப் பரிசோதனை செய்வதும் படிப்பதும் திருப்திகரமாக இருந்தன.

### வங்கமொழி பேசும் இஸ்லாமியருக்கு படிக்க ஆர்வமில்லை

சேர்க்கைக்கு வங்காள மொழியில் பள்ளி நடத்த (1852-53) அழைப்பு அனுப்பப்பட்டது. இதில் 40

பேர் சேர்க்கப்பட்டனர். 30 நபர்கள் உதவித்தொகை பெற்றனர். இவ்வகுப்புக்கும் சேர்த்து மதுசூதன் குப்தா கண்காணிப்பாளர் ஆனார். 1852 மாணவர் சேர்க்கையில் முஸ்லீம்கள் மிகக் குறைவு. இவர்கள் வங்க மொழி பேசுபவராக இருந்தும், மாணவராக ஆர்வம் காட்டவில்லை. இதற்குக் காரணம் யூனானி மருத்துவத்தில் இருந்த நம்பிக்கை, அதைத் தங்களுடையது என்று நினைத்தது. மற்றொரு காரணம், தங்கள் மதம், தத்துவம் மற்றும் பண்டைய இலக்கியங்களைப் படிக்க வேண்டும் என்ற கொள்கைப் பிடிப்பு.

உலகின் மிகப்பெரிய கல்லூரியாக இருந்தும் அரசுக்குத் தேவையான பாதி அளவுகூட மக்களுக்குச் சேவை செய்ய சப் அசிஸ்டண்ட் சர்ஜன் மற்றும் சுதேசி மருத்துவர்களை உற்பத்தி செய்ய முடியவில்லை. ஆகவே, 1856 ஆம் ஆண்டு 447 மூன்றாம் தர உதவியாளர்களாகப் படிக்காதவர்களை அரசு மற்றும் இராணுவ சேர்க்கைக்கு உட்படுத்திட வேண்டியதாயிற்று. இதற்கு மற்றொரு காரணம், கல்லூரியில் சேர்ந்தவர்களும் பாதியிலேயே படிப்பை விட்டுச்சென்றதும் அடக்கம். இதில் வங்காள மொழியில் படித்தவர்கள் அதிகமாகும். சிலர் சில மாதம் உதவித்தொகையை மட்டும் பெற்றுக் கொண்டு, சில மாதங்களில் படிப்பை நிறுத்தினர். இது வறுமையின் காரணமாகவே ஆகும். மற்றும் சிலர் தனியாக மருத்துவ ஆலோசனை வழங்கச் சென்றதால் அரசின் பதவியில் சேரவில்லை மற்றும் சிலர் இங்கிலாந்திற்கு மேற்படிப்பிற்குச் சென்றனர். சிலர் இரயில்வே சேவையில் கூடுதல் ஊதியத்துடன் பணியாற்றினர். இன்னும் சிலர் தேயிலைத் தோட்டத்தில் சரியாகப் பட்டம் பெறாத நிலையில் ‘கூலி டாக்டர்’ என்ற பெயருடன் வேலை பார்த்தனர். இதற்கு 1865இல் அரசு தடை விதித்தாலும், தேயிலைத் தோட்ட முதலாளிகளின் ஆதிக்க சக்தியால் தடையை மீறி வேலை பார்ப்பதற்கு யாதொரு தடங்கலுமின்றி பணிபுரிந்தனர்.

வங்காள மொழியில் படித்து வெளிவந்து மருத்துவ ஆலோசனை வழங்கியவர்கள் உள்ளூரில் வேலைபார்த்த வைத்தியர் கிபிராஜ்களுக்கு (Kibirajes) எதிராளியாகத் தோற்றமளித்தனர். இதனால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டன. இப்படி நல்ல நிகழ்வுகளைப் பாராட்டும் விதமாக வங்காள மொழியில் கற்பித்த ஆசிரியருக்கு ராய் பகதூர், கான்பகதூர் பட்டங்கள் (எ.கா. அறுவை மருத்துவர் பாபுராம் நாராயணன் போன்றவர்களுக்கு) வழங்கப் பட்டன. (Medicine and the Raj, p.29-33).

பயிற்று மொழி குறித்து வங்காளத்தைப் போன்ற வரலாற்றுத் தரவுகள் மதராசைப் பொருத்தமட்டில் மிக மிகக் குறைவாகவே காணக் கிடைக்கின்றன. ●


# 42வது சென்னை புத்தகக் கண்காட்சியில் எமது அரங்கு எண்கள்

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் – 377, 378, 441, 442**

**டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன் – 18**

**தாமரை பப்ளிகேஷன்ஸ் – 323, 324**

**அறிவு பதிப்பகம் – 579, 580, 615, 616**

**பாவை பப்ளிகேஷன்ஸ் – 223, 224**

**Nestling Books - 708**

10ஆம் ஆண்டில் டிஸ்கவரி புக் பேலஸ்

105 ஆண்டுகளுக்குப் பிறகு மறுபதிப்பு


**தமிழில் பிரசுரமான முதல் பயண நூல்**

**சே.ப.நரசிம்மலு நாயுடு**

*எழுதிய*

# ஆரியர் திவ்விய தேச யாத்திரையின் சரித்திரம்

பதிப்பாசிரியர் : **ந.முருகேசபாண்டியன்**




செவ்வியல்தன்மையுடன்...

அழகிய அச்சமைப்பில்..

உயர்தரமான தாளில்..

**560** பக்கங்கள்

விலை: **555/-** ரூபாய்

1885ஆம் ஆண்டு பம்பாயில் நடைபெற்ற முதல் காங்கிரஸ் மாநாட்டிலும், 1886ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற இரண்டாவது காங்கிரஸ் மாநாட்டிலும் பங்கேற்பதற்காகப் பயணித்த சே.ப.நரசிம்மலு நாயுடுவின் பயண அனுபவங்கள், **ஆரியர் திவ்விய தேச யாத்திரையின் சரித்திரம்** என்ற பயண நூலாகியுள்ளன. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வடஇந்தியக் கோவில்களையும் நதிகளையும் புண்ணிய ஸ்தலங்களையும் நகரங்களையும் நேரில்கண்ட தமிழரான நரசிம்மலு நாயுடுவின் அனுபவங்கள் செவ்வியலாகப் பதிவாகியுள்ளன.

பதிப்பாசிரியர் **ந.முருகேசபாண்டியன்** அவர்களின் நீண்டகால உழைப்பில் செம்பதிப்பாக வெளியாகிறது.

டிஸ்கவரி புக் பேலஸ்

**கே.கே.நகர் மேற்கு, சென்னை - 600 078. (பாண்டிச்சேரி கெஸ்ட் ஹவுஸ் அருகில்)**

Ph: 044 48557525 Mobile: +91 87545 07070

**http://discoverybookpalace.com/**

# காலச்சுவடு பதிப்பகம்

669, கே.பி. ரோடு, நாகர்கோவில் 629 001 தொலைபேசி: 04652-278525, 96777 78863 மின்னஞ்சல்:
nagercoil@kalachuvadu.com facebook.com/Kalachuvadu Publications

**சென்னை புத்தகக் கண்காட்சி 2019 – புதிய வெளியீடு**

காலச்சுவடு அரங்கு எண்
187, 188, 255, 256

சுதர்சன் புக்ஸ் அரங்கு எண்
195, 196, 247, 248

₹175






**சோழர்கால விஸ்வரூபச் சிற்பங்கள்**

(ஆய்வு நூல்)

எஸ்.ஏ.வி. இளஞ்செழியன்




₹125




**பணிக்கர் பேத்தி**

(நாவல்)

ஸர்மிளா ஸெய்யித்

₹225






**சேவல் களம்**

(நாவல்)

பாலகுமார் விஜயராமன்




₹120



**அறமும் தமிழும்**

(கட்டுரைகள்)


த. சுந்தரராஜ்



# திரைமொழியை அரசியலில் தோய்த்தெழுதிய இணைதிரை முயற்சிகளின் (parallel cinema) முன்னோடி மிருணாள் சென்

மு.இராமசுவாமி

**வ**ங்கத் திரையுலகின் மிக முக்கிய ஆளுமை களாக விளங்குகிற சத்யஜித் ரே *(1921 மே 2)*, ரித்விக் கடக் *(1925 நவம்பர் 4)* ஆகியோரின் சமகாலத் திரை ஆளுமையாய் விளங்கியவர் மிருணாள் சென் *(1923 மே 14)*. திரைமேதைகளான சத்யஜித் ரே 71 வயதிலும், ரித்விக் கடக் 51 வயதிலும் 21 ஆம் நூற்றாண்டைக் காணாமலேயே காற்றுடன் கரைந்து போக, தொன்னூற்றி அஞ்சரை வயது வரையிலும் வாழ்ந்து, டிசம்பர் 30, 2018 இல் மறைந்திருக்கிறார் மிருணாள் சென்! இன்று பங்களாதேஷ் என்று அழைக்கப்படும் கிழக்கு வங்காளத்தில் பரித்பூரில் (Faridpur) பிறந்தவர் அவர்!




தொடக்கத்தில் மார்க்ஸிய இலக்கியங்களின் வழி மார்க்ஸிய வாழ்க்கை நெறிக்கும் மார்க்ஸிய அரசியலுக்கும் மிக நெருக்கமாகத் தன்னை ஆளாக்கிக் கொண்டவர். கல்கத்தா பல்கலைக் கழகத்தில் இயற்பியல் பட்டப்படிப்பு முடித்துவிட்டு சிலகாலம் இடதுசாரி இயக்கத்தில் தீவிரமாகச் செயல்பட்டவர். மனிதத்திற்கும் சமூகத்திற்குமான உறவை, அதற்குள் மறைந்திருக்கும் அரசியலைப் பல நிலைகளில் நேர் முகமாய்க் கேள்விக்குட்படுத்தியவர். கலை உபாசகர் களுக்கு அது கொஞ்சம் நெருடலாகக் கூட அன்றைக்கு இருந்தது. கல்கத்தாவின் அய்ம்பது தொடங்கிய என்பது களின் போராட்ட வாழ்க்கை அவருக்கு அதைத்தான் கற்றுக் கொடுத்திருந்தது.

எதைப்பற்றியும் கொஞ்சமும் சஞ்சலப்படாமல், தான் அறிந்த, தனக்கு நெருக்கமான வாழ்க்கை யதார்த்தத்தின் பின்னிருக்கிற அரசியலைத் தன் உள்ளொளியாய் நிறைந்திருக்கிற மார்க்ஸியப் பெரு வெளியில் அதைத் திரையில் கொண்டுவந்து நிறுத்தி, மக்களை, அவரறிந்த யதார்த்த அரசியலைப் புரிந்து கொள்ள அழைத்தவர் மிருணாள் சென்.

இந்தியத் திரையுலகிற்கு அவர் அளித்திருக்கிற மிக முக்கிய மான கொடை, அவர் படங்களில் அவர் பேசியிருந்த அரசியல்தான்! அது ஒளிவுமறை வற்றிருந்தது. மண்டையில் ஓங்கி அறைந்து உறைப்ப தாயிருந்தது. திரைக்கலை யானது, யதார்த்த நிலைப் பட்ட அழுத்தமான அரசி யலைப் பேசியது. சமூக மாற்றங்களைத் திரைப்படம் எனும் ஊடகம் மூலம் அழுத்த மாகக் கூறமுடியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட மிருணாள் சென் ‘ராத்





போர்' (Raat Bhore) எனும் படம் மூலம் *1955* இல் திரைத்துறையில் நெறியாளுநராய்த் தன் பயணத்தை மேற்கொண்டார்.

'பதேர் பாஞ்சாலி' திரைப் படம் மூலம் திரையுலகம் சத்யஜித்ரேவைத் திரும்பிப் பார்க்க வைத்திருந்த நேரமும் அது! இவரை மிக முக்கிய இயக்குநராக அடையாளங் காட்டிய திரைப்படம் *1969* இல் வெளியான 'புவன் ஷோம்' (Bhuvan Shome) ஆகும். இது திதிசி எனப்படும் திரைப்பட நிதி உதவி நிறுவனத்தில் ஒன்றரை லட்ச ரூபாய் நிதி உதவி பெற்று தயாரிக்கப் பெற்றதாகும். ஒருநாள் கூட திரையரங்குகளில் ஓடாது எனும் நம்பிக்கையில் தயாரிக்கப் பெற்ற அந்தப் படத்தின் வெற்றி தான் இணைத் திரை முயற்சிகளில் மற்றவர்களை இறங்க வைக்கும் உத்வேகத்தைக் கொடுத்திருந்தது. இதுவே, இந்தியத் திரைப்பட உலகின் இணை திரை முயற்சிகளின் தொடக்கப் புள்ளி எனலாம்.

சத்யஜித் ரே, ரித்விக் கடக்கிற்குப் பிறகு யதார்த்தம், தீவிரமான காட்சிமொழி ஆகிய இரண்டுடன் கூர்மை யான அரசியலையும் பேசியவை இவரது படங்கள்! திரையுலகிற்கு இந்திய அரசு வழங்கி வரும் மிக முக்கிய, உயர்ந்த விருதான தாதா சாகேப் பால்கே விருதினை *2005*இல் பெற்றவர் மிருணாள் சென்! திரைத்துறையில் *18* தேசிய விருதுகளையும், *12* சர்வதேச விருதுகளையும் பெற்றவர். *1981* இல் பத்மபூஷன் விருது பெற்ற இவர், *2000* இல் சோவியத் நட்புறவு வரிசை விருதையும் பெற்றவர். வங்காளம், இந்தி மொழி போக, ஒரிய மொழியில் *1966* இல் 'மாதிர மனு ஷா' (Matira Manu sha) என்ற படத்தையும், *1977* இல் 'ஒக ஊரி கதா' (Oka Oori Katha) என்ற தெலுங்குப் படத்தையும் வழங்கியவர். இவரின் மிக முக்கியமான திரைப்படங்கள்: 'இண்டர் வியூ' (Interview-1971), 'கல்கத்தா1971' (Calcutta 1971-1972), 'மிருகயா' (Mrugaya-1976), 'கந்தார்' (Kandhar-1988), 'ஏக் தின் அசானக்' (Ek din Achanak-1989), 'அகலெர் சந்தனே' (Akaler Sandane-1980), 'ஏக் தின் பிராடிதின்' (Ek din Pratidin-1979), 'ஜெனிசிஸ்' (Genesis-1986), 'அந்தாரீன்' (Antareen-1993) என்பதாய் *28* முழு நீளப் படங்களும் நான்கு ஆவணப் படங்களும் நெரியாளுகை செய்திருக்கிறார். மாஸ்கோ சர்வதேசத் திரைப்பட விழா, பெர்லின் சர்வதேசத் திரைப்பட விழா, கான்ஸ் திரைப்பட விழா என உலகின் சிறந்த திரைப்பட விழாக்களில் கலந்து கொண்ட பெருமைக் குரியவர். விழாக்கள் அனைத்திலும் கலந்து கொண்டு விருதுகள் பல பெற்றவர். ●

# நியூ செஞ்சுரியின் விற்பனை சாதனைத் தொகுப்பு நூல்கள்

## மார்க்ஸ்-எங்கெல்ஸ்

**தேர்வுநூல்கள் மற்றும் வாழ்க்கை வரலாறுகள்**

**20 தொகுதிகள்**

பதிப்பாசிரியர்: **ந.முத்துமோகன்**

## நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வர வேண்டும்?


மொழி, கலை, பண்பாடு, இலக்கியம், தத்துவம் பற்றிய தொகுப்பு

**பெரியார் ஈ.வெ.ராமசாமி**

**5 தொகுதிகள்**

தொகுப்பாசிரியர்: **பசு.கவுதமன்**




**₹ 5000/-** **₹ 4500/-**

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

☎ 044-26251968, 26258410, 48601884 | Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

**கிளைகள்**

அம்பத்தூர்: 044-26359906; ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-4210990, 2323990; மதுரை: 0452-2344106, 4374106; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.

### சைவ பக்தி இலக்கிய வரலாற்றில்

# பிராமணிய எதிர்ப்பின் தலைமை மாணிக்கவாசகராவார்

பேராசிரியர் நல்லூர் சா.சரவணன்

**தமிழகத்தில் சைவ சித்தாந்தத் துறையின் முதல் மாணவராகப் பயின்று அத்துறையில் முனைவர் பட்டம் பெற்று பேராசிரியரானவர் நல்லூர் சா.சரவணன். தற்போது இவர் சென்னைப் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத் துறையின் தலைவர் மற்றும் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். தமிழ் இலக்கியத்திலும் சைவ சித்தாந்தத்திலும் துறைபோகிய இவர் சமீபத்தில் தொல்லியலறிஞர் முனைவர் ஆ.பத்மாவதி அவர்களின் 'மாணிக்கவாசகர் காலமும் கருத்தும்' எனும் நூலை பதிப்பித்தமைக்காக காவி பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளானார். ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் இவரைப் பதவி நீக்கம் செய்யப் பல்கலைக்கழகத்தை முற்றுகையிட்ட போது, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், அம்பேத்கர் படிப்பு வட்டம் சார்ந்த மாணவர்கள் அதனை முறியடித்தனர். இன்று தமிழகத்தில் இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ் அமைப்புகள் இந்து தீவிரவாத அரசியலுக்கு அடிகோல முனையும் நிலையில் இந்நேர்காணல் முக்கியத்துவம் பெறுகிறது.**

நேர்காணல்: **கணபதி இளங்கோ**

**உங்களது கல்வி, இளமைப்பருவம், சமூக செயல் பாடுகள் குறித்து சுருக்கமாகக் கூறுங்கள்.**

*இடைக்கழி நாட்டு நல்லூர் சொந்த ஊர்; பிறந்தது சென்னை மருத்துவமனையில். படித்தது நல்லூர் பஞ்சாயத்து தொடக்கப்பள்ளி, அதன்பிறகு ஆறு முதல் 12 வரை கிருஷ்ணாரெட்டியார் மேல்நிலைப் பள்ளி. இது கடப்பாக்கம் கடற்கரை சாலையில் அமைந் துள்ளது. 6 முதல் 10 வரை படிக்கும்போதே வரலாற்று ஆசிரியருக்கு என்மீது பரிவு உண்டு. அந்த அம்மையார் திருமதி.பார்வதி அவர்கள் என்னை தனது மகனாக பாவித்து முன்வரிசையில் அமர்த்தி பாடம் நடத்துவார். அப்போதே என்னுடைய குரல் மென்மையாக இருந்ததால் என்னை 'கவிஞன்' என்று குருநாதன் ஆசிரியர் அழைப்பார். பத்தாம் வகுப்பிலேயே என்னை பட்டிமன்றங்களில் பங்கேற்கச் செய்தனர். அதன் பிறகு பள்ளிகளுக்கு இடையிலான பட்டிமன்றம் முதலான போட்டிகளில் கலந்து கொள்வேன். பன்னிரண்டாம் வகுப்பில் தேர்ச்சி யடைந்த பிறகு அடுத்தடுத்து பாடங்களை தேர்ந் தெடுத்து சேரத் தெரியவில்லை. அந்த நிலையில் எனக்கு பிடித்தமானது வேதியியலும், தாவரவியலும் தான். இருந்தாலும் அதை உரிய நேரத்தில் விண்ணப் பிக்காததால் கிடைக்கவில்லை.*

*இது 1982இல் நடந்தது. அப்போதுதான் இளங்கலை இலக்கியவியல் சேர்ந்தேன். மயிலம் கல்லூரியில் Walk in Interview நடந்தது. தமிழ் இலக்கியத்தைப் படிக்க அப்போதெல்லாம் பெண்களே பெரும் பாலும் சேரும் நிலையிருந்தது. பையன்கள் குறைவு. எனவே, என்னை அப்போதே விண்ணப்பம் கொடுத்து சேர்த்துக் கொண்டனர். இது 1982இல் நடந்தது கடுமையான மழை வெள்ளம். காலதாமதமாக சென்று கடைசி அரை மணி நேரத்தில் முதலாமாண்டில் தேர்வெழுத அனுமதித்தனர். இரண்டாமாண்டு மூன்றாமாண்டு சைவசித்தாந்தம் பாடமிருந்தது, அவற்றில் நல்ல மதிப்பெண் எடுப்பேன். முதல்வர் வகுப்பிலே கேள்வி கேட்பார். நான் ஆய்வுக் கட்டுரையே எழுதிவிடுவேன். காலையில் வகுப்பு தொடங்கும் முன்பே சிவலிங்கனார் உடன் என்னை உட்கார வைத்து அவரும் சேர்ந்து எனது கட்டுரைகள் குறித்து விவாதிக்கச் செய்வார். மூன்றாமாண்டில் பிள்ளைத்தமிழ், உலா எல்லாம் நான் எழுதியிருக் கிறேன். புதுக்கவிதையும், மரபுக்கவிதைகளும் கூட எழுதினேன். அந்தச் சூழலில்தான் பட்டப்படிப்பு முடித்தவுடன் அவர் என்னிடம் "நீ எல்லாரையும் போல தமிழ் இலக்கியம் படிக்க வேண்டாம். எனக்குத் தெரிந்த இரத்தினசபாபதி என்பவர்*

*இருக்கிறார். அவரிடம் முதுகலை சைவசித்தாந்தம் படி" என்று அனுப்பி வைத்தார். இங்கு நான் தமிழ் இலக்கியம், சைவ சித்தாந்தம் இரண்டும் விண்ணப் பித்தும் பொற்கோ தமிழ்இலக்கியம் படிக்க அழைத்தும், வை.இர என்னை விட விரும்பவில்லை. சைவ சித்தாந்தத்தில் 4 பேர் சேர்ந்தோம். அதில் ஒருவர் பெண். மற்ற இருவர் வழக்கறிஞர்கள். ஆனால், அந்த பெண்ணுக்கு திருமணமாகிவிட்டது. வக்கீல்களும் இடையில் நின்று விட்டனர். நான் ஒருவன்தான் முடித்தேன். சைவ சித்தாந்தத் துறையின் முதல் மாணவன் நான்தான். பிறகு அங்கேயே முனைவர் பட்டத்திற்கும் ஆய்வு மேற்கொண்டேன். அதன் பிறகு நெறியாளரும் பணிமூப்பு அடைந்து விட்டார். சைவ சித்தாந்தத்துறையும் Endowment Department என்பதால் நிரந்தர வேலை தராது என்று உணர்ந்து மீண்டும் தமிழ் இலக்கியம் எம். ஏ. படித்து விட்டு வாரணாசி இந்து பல்கலைக்கழகத்தில் மகாகவி பாரதியார் இருக்கையில் தமிழ்ப்பேராசிரியர் பணி. மீண்டும் மயிலாப்பூர் இராமகிருஷ்ணா மிஷன் விவேகானந்தா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக தமிழ் நாட்டிற்கும் வந்து, இப்போது சைவ சித்தாந்தத் துறையின் முதல் மாணவன் என்ற அடிப்படையில் வழக்கில் வெற்றி பெற்று பேராசிரியராகவும் இருக்கிறேன். இதுதான் முன்கதைச் சுருக்கம்.*

**புராணங்கள் குறிப்பிடும் மாணிக்கவாசகர் கட்டிய கோயில்தான், ஆவுடையார் கோயில் என்று மக்கள் வழிபட்டு வருகின்ற நிலையில் அதனை தொல்லிய லாளர் ஆ. பத்மாவதி ஆராய்ந்து இது மாணிக்க வாசகர் கட்டிய கோயிலல்ல, மாணிக்கவாசகரையே கடவுளாக வழிபடுகின்ற கோயில் என்று கூறி யுள்ளதும், அவர் காலத்தில் வரகுண பாண்டியனால் கட்டப்பட்ட கோயில் மாணிக்கவாசகரால் பாடப்பட்ட ஆதிகைலாசநாதர் கோயில் அவ்வூரின் இன்னொரு பகுதியில் இருக்கின்றது என்பதையும் அறிவியல் கண்ணோட்டத்தில் தொல்லியல், கட்டடக்கலை, சிற்பக்கலை வரலாற்று சான்றுகள் உதவியோடு விளக்கும் இந்நூலை அவர்கள் எந்தவிதத்தில் மறுக்கிறார்கள், சைவராக உங்களுக்கு ஏற்புடைய இது அவர்களுக்கு தகாததாக மாறுவது எப்படி?**

*நல்ல கேள்வி, இதை வகை பிரித்துச் சொல்ல வேண்டும். முதலாவதாக, ஆவுடையார் கோயிலை மாணிக்கவாசகர் கட்டினார் என்று புராணங்கள் குறிப்பிடவில்லை. மாணிக்கவாசகர், கோயிலை கட்டினார் என்று கூறுகின்றதே தவிர ஆவுடையார் கோயிலைக் கட்டினார் என்று எடுத்துக் கொள்ள முடியாது. புராணம் என்பதே இலக்கியம். இவர்கள் பார்க்கின்ற ஆவுடையார் கோயிலை மாணிக்கவாசகர் கட்டினார் என்று புராணம் கூறவில்லை. அந்த ஊர் பவித்ர மாணிக்க சதுர்வேதி மங்கலம் என்னும் ஊர். கோயில் ஆவுடையார் கோயில். இது எல்லாம் வரலாற்றில் தெளிவாக உள்ளது. இந்தக் கோயில் மூலமாக வரலாறு முன்னெடுக்கப்படுகிறது. புராணப் படி மாணிக்கவாசகர், மன்னன் கொடுத்த பணத்தில் கோயில் கட்டினார். அதற்காக மன்னனால் தண்டிக்கப் பட்டார் என்பதுதான் முக்கியமே தவிர மாணிக்க வாசகர் கோயில் புராணத்திற்கு முக்கியமல்ல. புராண வாதிகளுக்கு முக்கியமானது கோயில் வழிபாட்டை விடவும் ஒரு மனிதனுடைய வரலாற்றை வெகுஜன ஊடகத்தின் முன் எப்படி நகர்த்துகிறார்கள் என்பதே முக்கியத்துவம் பெறுகிறது. இன்றைக்கு தமிழகத்தில் எல்லாக் கோயில்களுக்கும் புராணங்கள் உண்டு. இப்புராணங்களில் ஒரே மாதிரியான வரலாறு வரும். இந்தக் கோயிலை அகத்தியரும், இந்தக் கோயிலை திருமாலும், இந்தக் கோயிலை பிரம்மாவும் இப்படி பலரும் வழிபட்டார்கள் என்று அவை அமையும். அது அந்தந்தத் தலங்களை மகிமைப்படுத்துவது. அந்தத் தல வரலாற்றோடு அந்த ஊர் சார்ந்த பெரிய மனிதர் களை, மன்னரை மகிமைப்படுத்தும் வரலாற்றையும் இணைப்பார்கள். இதற்கு உள்ளார சென்று வரலாற்றுச் செய்தி எதுவாக இருக்கும் என்று கண்டுபிடிப்பவர்கள் தான் சமூக அறிவியல் விஞ்ஞானிகள். அப்படிப் பட்ட சமூக விஞ்ஞானியாகத்தான் பத்மாவதியை நாம் நினைக்கின்றோம். அந்த அடிப்படையில்தான் அவர்களும் கிடைக்கும் சான்றுகளின்படி உண்மை களை நிறுவ முயற்சிக்கின்றார்கள். இதனில், மாணிக்கவாசகர் கோயில் கலையம்சம் பொருந்திய ஆர்வத்தைத் தூண்டும் கோயில். கல்லால் அமைந்த பரண், கொடுங்கை தாழ்வாரம், குதிரை வீரர்கள், வாள்கள் முதலியவற்றை எந்தெந்த நாட்டினுடைய குதிரை வீரர்கள் என்று கோயில் வழிகாட்டிகள் விளக்குவர். பஞ்சாட்சர மண்டபத்தைக் கடந்து கோபுர வேலன் (முருகர்) இருப்பார். இடது பக்கம் மாணிக்கவாசகர், உற்சவர் மாணிக்கவாசகர், குருந்த மரம், யோகாம்பிகை, சண்டேசுவரர் எல்லாம் வலம் வந்து கடந்து உள்ளே வந்தால் ஆவுடையார் பீடம், ஆவுடையார் இருக்கும். இதில் சதுரமான பகுதி ஆவுடை, பாணம்தான் லிங்கம். அந்தக் கோயில் கல்பலகையால் ஆவுடையார் கோயில் என்பது பொது. ஆன்மாவை உடைமையாகக் கொண்டவர் என்பது மற்றொன்று. ஆவுடையார் என்பதை லிங்கத்தின் தத்துவமாகக் கூறுவர். லிங்கத்தை பிரம்ம பாகம், ருத்திரபாகம், மால்பாகம் என பிரிப்பது ஒருவகை. ஆவுடையார் ஆன்மா, அதிலிருந்து வெளிவரும் லிங்கம் கடவுளாகவும் கருதுவது ஒன்று. ஆவுடையார் என்பது பாலினக் குறியீடு என்றும் உண்டு.*

*லிங்கத்திற்கு எத்தனை விளக்கமும் தரலாம். ஆனால், அடிப்படையில் அங்கு லிங்கம் இல்லை. ஆவுடையார் என்னும் வேலைப்பாடுடைய இடையுறுப்பும் அடிப்பகுதியும் இல்லை. அது ஒரு கல்பலகை. அது*




படையலுக்காக இருக்கிறது. (தளம் கிடைப்பகுதி, மேல் பகுதியும் இல்லை) படையலுக்காக இருக்கும் அது கடவுளின் அருவ வடிவம், என்று குறிப்பிடு கின்றார்கள். கடவுளுடைய அருவ வடிவம், மாணிக்க வாசகர் அதையேதான் வழிபட்டார் என்றும் இப் போது வழிபடுகிறவர்கள் கொண்டு வந்து நிறுத்து கிறார்கள். இதை மாணிக்கவாசகர் பாடலில் எங்கும் குறிப்பிடவில்லை. கடவுள், குதிரைசேவகனாக, சாத்தனாக, குருவாக வந்து ஆட்கொண்டான் என்னை எனப் பாடும் மாணிக்கவாசகர், அக்கடவுளை நான் இப்படி அடையாளப்படுத்திக் கட்டினேன் என்று குறிப்பிடவில்லை. திருப்பணி செய்திருப்பதாக வருகிறது. அமைச்சராக இருக்கிறவர் செய்திருப்பார் தான் இத்தனை திட்டமிட்டு குருவாக ஆட்கொண்ட வருக்கு கோயில் எழுப்பினார் என்றால் எத்தனையோ கோயிலை பாடியவர், கடவுளை இப்படி இதனையும் தனது பாடலில் பாடியிருப்பார். அவரது வாயால் பாடாமலிருந்திருக்க மாட்டார். என்னை ஆட் கொண்டவன் என்றுதான் பாடுகிறாரே தவிர, தான் எழுப்பிய கோயிலுடைய கடவுள் என்றும், ஆட் கொண்டவனை இவ்வாறு அடையாளப்படுத்தி யிருக்கிறேன் என்றும் கூறவில்லை. ஆட்கொண்டவன் என்று சொல்வது வேறு, அனுபவிக்கும் கடவுளைச் சொல்வது வேறு. இவர் தான் அனுபவிக்கும் கடவுளை இவ்வாறு கட்டியிருக்கிறேன், என்று சொல்வது வேறு. அப்படி எந்த அருளாளர்களும் பயணிக்கவில்லை. மன்னன் கோயில் கட்டினான் எனில் அதனைப் பற்றி கல்லில் பொறித்து வைப்பான். மாணிக்கவாசகர் இலக்கியம் பாடும் அளவிற்கு அறிவாளியான அவர் கோயிலைக் கட்டியிருந்தால் மொத்த திருவாசகத்தையும் கல்லில் வடித்திருப்பார். மாணிக்கவாசகர் கோயில் கட்டும் அளவிற்கு அறிவு படைத்தவரெனில் குறைந்த பட்சம் ஏதாவது ஒரு விசயத்தையாவது கல்லில் வடித்திருப்பார். அதுமாதிரி எந்த முயற்சியும் இல்லை. அந்த மாதிரி பாடுபவர்களே எழுதாவிட்டாலும் சிற்பி "சாமி உங்களைப்பற்றி எழுதுகிறேன்" என்று கூறி எழுதி யிருப்பான் அல்லது அவருக்குத் தெரியாமலேயே அவன் எழுதியிருப்பான். இது சிற்ப மரபு மட்டு மல்ல, கோயில் கட்டுகிறவர்கள் அதன் வரலாற்றுக்குள் வந்து விடுகிறார்கள் என்பதே உண்மை. அந்த மன்னன் கட்டியிருந்தாலும் அதுபோன்ற விசயம் இந்த கோயிலில் எங்கும் இல்லை. அந்தக் கோயில் கட்டிய காசுக்காக மன்னன் தண்டித்த வரலாறு இருந்தால் அவனாவது கல்வெட்டு பொறித்திருப்பான். அவன் திருச்செந்தூரில் கல்வெட்டு போட்டிருக் கின்றான், தளவாய்புரத்தில் செப்பேடு போட்டிருக் கின்றான். இப்படி ஒரு பெரிய அதிசயம் நடந்திருந்தால் அவன் என்ன செய்திருப்பான். வரகுண பாண்டியன் வேப்பம் பழத்தையும் சிவலிங்கம் என நினைக்கும் பக்தன். வேப்பம் பழம் வெளிலிலே காயக் கூடாது என்று பந்தல் போடுகிறான் திருவிடைமருதூரில். அது மட்டுமல்ல, தவளை 'பக பக' என்று கத்தும். அதனை 'சிவ சிவ' என்று கத்துவதாகக் கருதி அவற்றுக்கு குளத்தில் இரத்தினத்தை வாறி இறைக் கின்றான் என்று பட்டினத்தார் எழுதுகிறார். அவன் திருவிடைமருதூரில் தளவாய்புரம் செப்பேடு குறிப்பிடும் போருக்குப் பிறகு கோயில் கட்டுகிறான். திருச்செந்தூருக்கும் தானம் செய்திருக்கின்றான். இப்படிப்பட்ட மன்னன் மாணிக்கவாசகர் வரலாற்றை நடந்திருந்தால் எழுதியிருப்பான். அவனுடைய தம்பி என் அண்ணன் கடவுளுக்கு மிகப் பெரிய தொண்டு செய்தவன் என்பதை கல்வெட்டில் பதிந்திருக்கின்றான். அவனும் இந்த மாணிக்கவாசகர் வரலாற்றுத் தொடர்பை குறிப்பிடவில்லை. மகேந்திரவர்மன், திருநாவுக்கரசர் சைவத்திற்கு வந்ததை எழுத

வில்லை. தான் சைவத்திற்கு மாறியதை எழுதுகிறான். மன்னர்கள் விசயமாக நடந்தது. அதே போல மாணிக்கவாசகர் வரலாற்றில் நடக்கிறதா? இங்கு மாணிக்கவாசகரே கோயில் கட்டுகிறார். அப்பர் போல பாடிவிட்டுப் போனவரல்ல. கோயில் கட்டுகிறார் என்றால் அந்தக் கல்வெட்டுக் கலை தெரிந்தவர் அவர் வரலாறு எழுதாவிட்டாலும் திருவாசகம் எழுதாவிட்டாலும் அந்தக் கோயிலுக்கு பாடிவிட்டு போயிருப்பார். அப்படி எந்த விசயமும் அந்தக் கோயிலுக்கு நடக்கவில்லை. மாணிக்கவாசகரின் வரலாற்றைப் பொறுத்தவரை இலக்கிய வரலாறு ஒரு வேறுபட்ட போக்குடையது. திருக்கோயிலுக்கு சென்று வழிபட்டு, வாழ்க்கைப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதை திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் பாடியிருக்கிறார்கள். ஆனால், மாணிக்கவாசகர் திருக்கோயில் வழிபாட்டை சொல்லவில்லை. உன் பிரச்சினையும் நீ சுத்தமாயிருப்பதும், யாருடன் சேர்ந்திருக்கிறாய் என்பதும் மனித அனுபவத்துக்கும் கடவுள் தன்மைக்குமான விசயமாக மடைமாற்றம் நடக்கின்றது. பெண்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதும், குடும்பம், பெண்கள் சார்ந்த விசயமுமாக புதியதளம் உருவாகின்றது. இது திருக்கோயில் வரலாறுடன் தொடர்புபடவில்லை. இங்கு இடைக் கால வரலாற்றில் புரிந்து கொள்ள முடியாத இருட்டடிப்பு நடைபெற்றிருக்கிறது. அந்த இருட்டடிப்பு வேலைக்கான மிகப் பெரிய காரணமாக மாணிக்கவாசகர் இருந்திருக்கிறார். மாணிக்கவாசகர் கடவுளும் தானுமான வரலாற்றைப் பதிவு செய்யாத நபரல்ல. குருவாய் வந்து ஆட்கொண்டான் என்பவர் ஆட்கொண்ட பிறகு கோயில் கட்டினேன் என்று எழுதவில்லை. கடவுளும் ஏம்பா அந்தக் கோயில் கட்டியதை எழுது என்று சொல்லவில்லை. ஆக, அகச் சான்றுகளில் கோயில் கட்டியது காணப்படவில்லை. மாணிக்கவாசகர் கோயில் கட்டியது தான் பெருமையா? என்று பார்க்க வேண்டியதில்லை. அவர் கோயில் வழிபாட்டின் முரணிலிருந்து விடுபட்டிருக்கின்றார் அல்லது சமூகம் அவரை விடுபடுத்தி எழுதியிருக்கிறது. மாணிக்கவாசகர் ஒரு 'க்ளு' தருகிறார். 'சமுதாயத்தில் இன்று ஒரு புயல் காற்று அடித்தது' என்கிறார். 'மாயா வாதம்' என்னும் சண்டமாருதம் என்கிறார். சுழல் காற்று வீசியது என்கிறார். லோகாயதத்தைக் கூட பாம்பு என்று தன்மையாகக் கூறுகிறார். ஆனால், இதனை புயல் காற்று என்கிறார். சமகாலத்து சமூகப்பிரச்சினையான சங்கரரை எதிர்கொண்ட நபராக மாணிக்கவாசகர் இருக்கிறார். தமிழ்ச் சமூகத்துக்குள்ளே பிராமணிய எதிர்ப்பின் தலைமை மாணிக்கவாசகர் ஆவார். சங்க காலத்தில் பிராமணிய எதிர்ப்பாளராக நக்கீரர் இருக்கிறார். மாணிக்கவாசகருக்குப் பிறகு அருணகிரிநாதர். அவர் சிவன் கோயிலுக்கு சென்று முருகனை பாடுபவராவார். அவரை தொழுநோயாளியாக




வரலாற்றில் இருட்டிப்பு செய்துள்ளனர். நான்காவதாக இராமலிங்க வள்ளலார் வருகிறார். சைவ பக்தி இலக்கிய வரலாற்றில் பிராமணிய எதிர்ப்பின் தலைமை, மாணிக்கவாசகர் ஆவார். ஒரு சமுதாயத்தில் பிராமணியத்தினை எதிர்த்து குரல் கொடுப்பவர்கள் மழுங்கடிக்கப்படுகிறார்கள். எனவே, மாணிக்கவாசகர் வரலாற்றைத் திரித்து எழுதுவது அவர்களது வேலை. அதே சமயத்தில் மாணிக்கவாசகர் பற்றி அந்தணர்களை வைத்து எழுதவைக்கிறார்கள். அவர்கள் வடமொழி நூல்களில் இருந்து மன்னனிடம் சம்பளமும் பெற்றுக் கொண்டு தமக்கு எதிராக வரலாறு போய் விடாமலும் எழுதுகிறார்கள். ஆகவே பாண்டியர்களுக்கு திருப்தி ஏற்படும்படி மாணிக்கவாசகர் பாண்டிய மன்னர்களால் ஆதரிக்கப் பெற்றவர் என்றும், தண்டிக்கப்பட்டவராகவும் எழுதும் போது பாண்டியருக்கு மகிமை செய்தும், பிராமணியத்துக்கு எதிராக சங்கரருக்கு எதிராக திருக்கோயில் வழிபாட்டிற்கு எதிரானவர் என்பதை மறைத்தும் 'தண்டிக்கப்பட்டவர்' என எழுதுகிறார்கள். எனவே, மாணிக்கவாசகர் வரலாறு இதன் மூலம் நிறைவடைகிறது. பிராமணர்களுக்கு மூடி மறைக்கப்படுகின்றது.

இங்கு ஆ. பத்மாவதி அவர்கள் பாண்டிக்குலோதயம் என்ற நூலைப் படித்தவுடன் (தினமலர் ஏற்கெனவே அது மாணிக்கவாசகர் கட்டிய கோயில் அல்ல என்று கட்டுரை வெளியிட்ட நிலையில்) மாணிக்கவாசகர் வரலாற்றில் தண்டிக்கப்படவில்லை என்பதை வெளிக் கொண்டுவரச் செய்த முயற்சிதான் இந்நூல். இங்குத் தமிழ் புராணங்களில் மாணிக்கவாசகர் மன்னனால் தண்டிக்கப்பட்டதாகவே கூறப்படுகின்ற நிலையில் வடநூல் மாறான வரலாற்றுச் செய்திகளை தருகின்றது. இதை மேலும் தொல்லியல் கல்வெட்டியல் சான்றுகளோடு அம்மையாரின் நூல் முன்னெடுக்கிறது.

இங்கு மாணிக்கவாசகர் மன்னனுக்கு உதவினாரா? இல்லையா? என்பதை மன்னனின் குண இயல்பு சார்ந்து பொருத்திப் பார்க்க வேண்டும். திருவிடை மருதூரில் போர் செய்தவன், அம்பாசமுத்திரம் எரிச்சாவுடையார் கோயிலுக்கும் சோழ நாட்டின் திருநெய்த்தானம், திருக்கோடிக்காவல், திருக்காட்டுப் பள்ளி, கும்பகோணம், ஆடுதுறை, திருவிசைநல்லூர் கோயில்களில் இம்மன்னன் கொடையளித்தது பற்றிய கல்வெட்டுகள் உள்ளன. திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கும் கொடையளித்துள்ளான். இம்மன்னனுடைய தம்பி பராந்தக வீரநாராயணன் வெளியிட்ட தளவாய்புரம் செப்பேட்டில் "எங்கோ வரகுணன் பிள்ளை பிறைச் சடைக்கணிந்த பினாக பாணி எம்பெருமானை உள்ளத்தில் இனிதிருத்தி உலகம் காக்கின்ற நாளில்" என்று குறிக்கின்றான். ஆக, வரகுணன் மிகச் சிறந்த சிவபக்தன் என்பது புலனாகின்றது. திருக்கோவையாரில் மாணிக்க வாசகரே 'வரகுணன் என்னும் தென்னன் ஏத்தும் சிற்றம்பலம்', 'சிற்றம்பலம் புகழும் மயல் ஓங்கு இருங்களி யானை வரகுணன்' என்றெல்லாம் பாடி யிருக்கின்றார். இத்தகைய சிவபக்தனாகிய வரகுணன் சிவன் கோயிலுக்காக மாணிக்கவாசகர் செலவளித்து விட்டதற்கு தண்டித்திருப்பானா? திருவிளையாடற் புராணத்தில் பாண்டியன் மாணிக்கவாசகரை தண்டித்து இறைவன் மன்னனை பிரம்படித்தான் என்ற மன்னன் வரலாறு உண்மையென்றால், கல்வெட்டில் சான்றில்லாமல் போகுமா? ஆனால், வரகுணனின் மாற்றாந்தாய் அல்லது தந்தையின் மற்ற மனைவியரின் பிள்ளைகளோடு சண்டை நடந்ததை இலங்கை, மகா வம்சம் கூறுவதும், பாண்டிக்குலோதயம் நூலோடும் கல்வெட்டு செய்தி களோடும் பொருந்துகிறது. இதை பாண்டிக் குலோதயம் சொல்லும் போது அதன் மீது நம்பகத் தன்மை அதிகரிக்கின்றது. அது மாணிக்கவாசகருக்கு திருமணம் ஆனது என்பது இங்கு முக்கியமில்லை. ஆனால், இங்குப் பாண்டியர் எழுத வைத்தார்களா? மண்டலக்கவி அவராகவே எழுதினாரா என்பது தெரியவில்லை. வடநாட்டு ஆட்சியாளரோடு ஒப்பிடும்படி ஒருவர் தென்னாட்டில் இருக்கிறாரே என்று வரகுண பாண்டியனைப் பற்றி எழுதியிருக் கலாம். ஆனால், தமிழ் புராணம் எழுதுபவர்களுக்கு மாணிக்கவாசகர் என்னும் ஆளுமையை திருக் கோயிலுக்கு எதிராக, பிராமணர்களுக்கு எதிராக விளங்கிய ஆளுமையை குலைத்து திரித்து எழுதுகிற நோக்கம் இருக்கிறது. திருக்கோயில் என்பது "மக்கள் உடைமை." அதை 'மனு உடைமை'யாக மாற்றியவர் சங்கரர். இங்கு மாணிக்கவாசகர், 'கோயிலுக்கு சென்று மெனக்கெட வேண்டாம்' என 'வீட்டிற்கே இறைவன் வருவான்' என வழிபாட்டு நெறியைத் தந்தவர். இவரை மன்னன் தண்டித்தான் என திரித்து எழுதியவர்கள் சோழிய பிராமணர்கள். இந்த வரலாறு பேசப்படுகிறது. அதை விளக்கும் வகையில் எழுதும் போது சிவன் கோயிலல்ல, மாணிக்கவாசகர் கோயில் என்று சொன்னதற்காக எதிர்ப்பு வருகிறது. அதுவும் மக்களுக்கு சிவபெரு மானையும், மாணிக்கவாசகரையும் இழிவுபடுத்துகிற நூல் என்று சொல்லிதான் தூண்டுகிறார்கள். மக்களுக்கு மாணிக்கவாசகர் என்பதில் பிரச்சினை ஒன்றும் இல்லை.

**உலகம் - உயிர் - கடவுள் ஆகிய இவை தனித் தனியானவையாகக் கருதி அவற்றிற்கு இடையிலான தொடர்புகளை இயக்கத்தினை பேசுவது 'புலன்கடந்த பொருளியல்' எனப்படுகிறது. உலக இயக்கம், தோற்றம், முடிவு குறித்து ஆராயும்போது அவற்றுக் குள்ளேயே விடை காண்பது 'அறிவாராய்ச்சி' எனப் படுகிறது. பொருள்கள் எப்படி இயங்குகின்றன என்று அறிந்து கொள்ளும்போதே ஏன் எதற்கு என்பதற்குரிய விடையும் தெளிவுபடுத்தப்பட்டுவிடுகின்றன. இங்குக் கடவுள் கருத்தியல் மதிப்பிழந்து விடுகின்றது என்பதையும் சைவவாதியாக நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்.**

அறிவாராய்ச்சி கொள்கையின்படி உலகம் எப்படி இயங்குகின்றன என்று ஆராயும் போதே ஏன் எதற்கு என்பதற்கான விடை கிடைத்துவிடுகின்றது எனில், ஏன், எதற்கு எனும் போது நீங்கள் கடவுளுக்கு மதிப்பளித்தால் கடவுள் இருக்கிறார், ஏன் எதற்கு என்பதில் கடவுளுக்கு நீங்கள் மதிப்பளிக்கவில்லை என்றால் கடவுள் இல்லைதான்.

**நரியை பரியாக்கிய கதை எவ்வாறு பிராமணியத்திற்கு பாதுகாப்பு வழங்குகிறது. பாண்டிக்குலோதயம் அதனை அம்பலப்படுத்துவது எவ்வாறு என்பதை விளக்குங்கள்.**

பாண்டிக்குலோதயத்திலும் மன்னன் தண்டித்தான் என்றுதான் வருகின்றது. திருவிளையாடல் புராணம் 'நரியை பரியாக்கிய கதை கோயில் கட்டினான்' என்று சொல்கிறது. வடநூல் சிவதர்மத்திற்கு செலவழித்து விட்டதால் மன்னன் தண்டித்தான் என்று கூறு வதையும் மறுத்து தண்டித்திருக்க வாய்ப்பில்லை என்று ஆய்வு செய்வதே பத்மாவதியின் சிறப்பு. மாணிக்கவாசகர் சிவதர்மத்திற்கு செலவழித்து விட்டதால் மன்னன் தண்டித்தான். சிவபெருமான் காட்டில் உள்ள நரிகளை பரிகளாக்கி அனுப்பினார். அரசன் மகிழ்ந்து வாதபுரநாயகருக்கு பரிசுகள் அளித்தான். பின்னர் அக்குதிரைகள் நரிகளாகி ஓடுகின்றன. அங்குள்ள குதிரைகளையும் கடித்து விட்டு ஓடுகின்றன என்றே பாண்டிக்குலோதயம் கூறுகிறது. அது கோயில் கட்டியதாகக் கூறவில்லையே தவிர, சிவதர்மத்துக்கு செலவழித்தாகக் கூறுகின்றது. நரியை பரியாக்கிய கதை அகச் சான்றுகளிலும்

வருகின்றது. இங்குதான் ''நரிகளெல்லாம் பெருங் குதிரையாக்கியவாறு அன்றேயுன் பேரருளே'' ''பரிமேற் கொண்ட சேங்கனார்'' என்று திருப்பாண்டி பதிகத்திலும், திருவேசறுபதிகத்திலும் பாடியுள்ளார்.

"நரியை குதிரைப் பரியாக்கி
ஞாலமெல்லாம் நிகழ்வித்தும்
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
நரியை குதிரை ஆக்கிய நன்மையும்"

என்றும் பாடுகிறான்.

குதிரைச் சேவகன், தேவதேவன் மேயச் சேவகன், தென் பெருந்துறை நாயகன் என்றெல்லாம் இறைவனை சேவகன் நாயகன், குதிரைப் படைத் தலைவன் எனும் பொருள் அமைத்துப் பாடியுள்ளார். இவ்வாறு அகச் சான்றுகளை எடுத்துக்காட்டி தத்துவ அடையாள மாக்கி விளக்குகிறார்கள். வடமொழியில் வந்த கதோபநிசத்து முதலியவற்றில் இருந்தும், திருமூலரி லிருந்து எடுத்து தத்துவமாக்குகிறார்கள். ஐந்து இந்திரியங்களை ஒருமுகப்படுத்தி நேர்வழிசெல்லும் குதிரையாக மாற்றுவது என்றும் கதோபநிசத்துவை வைத்து நரி-பரி கதையை அம்மையார் விளக்கு கிறார். நரியை குதிரையாக்குவது என்பது யோக மரபில் இடகலை-வடகலை என்று கூறுவர். இடகலை நரி - வடகலை பரி - இன்னொன்று பன்றிச் சத்தம் கூட கூறுவர். இங்கு மாணிக்கவாசகர் பொதுவில் தான் இறைவன் தன்னை ஆட்கொண்டான் என்று கூறுகிறார். குதிரை அடையாளம் வரையில்தான் மாணிக்கவாசகர் வருகிறார். கடவுள் குதிரைச் சேவகனாக வருகிறார். குதிரை வரவில்லை. இந்த இடங்கலை, வடகலை, யோக மரபு எல்லாம் சிறப்பு வழிதான். அடுத்தவருக்கு அடுத்த உயிர்களுக்கு கருணையில்தான் காணமுடியும்.

இங்குதான் வள்ளலார் எல்லாம் பிற்காலத்தில் பொது மரபில் தொடர்கிறார்கள். ஆக, மாணிக்கவாசகர் மரபு முக்கியமான மரபு. உடம்பை இன்பத்துக்கான குதிரையாக்குவது மட்டும் பேசாமல் அதனை அடையாளமாக மட்டும் கூறிவிட்டு அதற்கு மேல் பலவும் பேசுகிறார்கள். நரியை குதிரையாக்கியது தான் வருகிறதே தவிர கடவுள் தண்டித்தான் என்றோ மன்னன் விசயமோ வரவில்லை. இது தத்துவ மரபு யோக மரபு பற்றியது. ஒன்று இன்னொன்றாக மாறுவது பற்றி மாணிக்கவாசகர் பாடியுள்ளாரே தவிர இதில் தண்டனைக்கு இடமில்லை. இங்குக் குறியீடாக வரும் தத்துவ மரபை கதையாக்கி மாணிக்கவாசகருக்கு தண்டனை வழங்குவது என்பது பிராமணியத்திற்கு பாதுகாப்பு வழங்குகிறது. இங்கு பாண்டிக்குலோதயமும் தண்டித்தாகவே கூறுகிறது. பிராமணியத்தை அம்பலப் படுத்தவில்லை. நரியை பரியாக்கிய கதையும் அவ்வாறே அமைந்துள்ளது. அவற்றை அம்பலப் படுத்துவது ஆ. பத்மாவதி அம்மையார்தான்.

**அரிமர்த்தன பாண்டியன் யார்? வரகுண பாண்டியன் யார்?**

வரகுணபாண்டியன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் மகன், கி.பி. 811-860 வரை ஆட்சி செய்தவன். அவனது காலத்துக்குப் பிறகு அவனுடைய காமக் கிழத்தியர் மக்கள் ஆட்சிக்கு முடிவுகட்டி ஆட்சிக்கு வந்தவன் தான் இரண்டாம் வரகுண பாண்டியன், திரும்புறம்பியம் போர் செய்தவன். பாண்டிய மன்னனை அரிமர்த்தன பாண்டியன் என பரஞ்சோதி முனிவர் கூறுகின்றார். பகைவர்களை அழித்தவன் என்ற சிறப்புடன் 'அரிமர்த்தனன்' எனக் கூறப்பட்டது என்று வெள்ளை வாரணனார் கூறுகிறார். இப்படிப்பட்ட மன்னன் வரலாற்றில் இல்லை புராணங்கள் கூறுவது தவிர.

**குறும்பர்-குறும்ப வேளாளர்-காராளர் ஆனபூர்வ குடியானது பாண்டியனால் பிராமணர்களுக்காக விரட்டப்பட்டது பற்றி ஆவுடையார் வழக்குரைத்த அம்மானை என்ற நூலை ஆராய வேண்டும் என்றும், அந்தணர்களுக்கு எதிராக குறும்பர்களுக்கு உதவியவர் மாணிக்கவாசகர் என்னும் உண்மை இதனால் புலப்படும் என்றும் கூறியுள்ளீர்களே அதனை விளக்கவும்.**

இராதாகிருஷ்ணன் ஐயர், தமது கட்டுரையில் இவ் வுண்மையை ஆராய்கிறார். திருப்பெருந்துறை இருக்கும் இடம் கான நாடு. அது குறும்பர் நாடாக இருந்தது. வடக்கே இருந்து வரவழைக்கப்பட்ட அந்தணர்களுக்கு குறும்பர்களை அப்புறப்படுத்தி நிலமளித்தான். குறும்பர்கள் மீண்டும் நிலத்தை அடைய வழக்குரைத்தனர்.

வழக்கில் குறும்பர்கள் 'தமது' என்று சொல்லி நிலத்தை பன்னிரண்டு ஆள் பரிசம் வெட்டினாலும் நீர் ஊராது என்றும் அந்தணர்கள் பக்கம் வழக்குரைத்து வெட்டியவுடன் தடையறவே நீருற்று தங்காமல் வந்துவிடும் என்றும் சாதித்துக் கொண்டதாக ஆவுடையார் வழக்குரைத்த அம்மானை கூறுகிறது.

''கல்வெட்டி நாட்டினார் காராளர் எல்லையிலே வேதியர்கள் எல்லை விதவிதமாய்க் கல்நாட்டி அந்தணர்க்குக் காணி உறுதியிட்டார் வந்த மன்னர்; குறும்பர் அனைவரும் கூடி விசாரமிட்டு அந்தணர்க்கு காணி உறுதியிட்டோம் என்று சொல்லி ஊர்குடியும் விட்டு ஒதுங்கினார் தென்திசையில்'' என்று அந்நூல் தெளிவாகக் கூறுகிறது.

மேலும் சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையில் காடுகாண் காதையில் ஆதியில் சோழ நாட்டைச் சேர்ந்திருந்து பிறகு பாண்டியநாட்டின் பாகமாக முத்தூர் கூற்றம் ஆயிற்று என்று கூறப் பெறுவதும், புறநானூறு 21ஆம் பாட்டில் முத்தூற்ற கூற்றம் என்பதும் கானக்கூற்றம் எனப்படுவதும் இதுவே ஆகும்.

**வரகுணபாண்டியனுடைய மாற்றாந்தாய் பிள்ளைகள் பிராமணர்களுடைய உதவியோடு சூழ்ச்சி செய்து ஆட்சியை மணகைப்பற்றவும், பிராமண எதிர்ப்பு கொண்டவரான மாணிக்கவாசகரை சிவபக்தனான வரகுணபாண்டியன் சந்தித்து உதவிகேட்கவும் அவர் அரசியல் தந்திரங்களைக் கையாண்டு வரகுண பாண்டியனை ஆட்சியில் அமர்த்தினார் எனக் கொள்ளலாமா? இங்குப் பிராமண எதிர்ப்பு கொண்ட இவரை சாணக்கியரோடு ஒப்பிட முடியாதல்லவா?**

*பாண்டிக்குலோதயம் நூல்தான் மாணிக்கவாசகரை சாணக்கியனோடு ஒப்பிட்டுக் கூறுகின்றது. நாம் சாணக்கியனோடு ஒப்பிடுவதை ஏற்க முடியாது. வரகுணபாண்டியனின் மாற்றாந்தாய் பிள்ளைகளுக்கு உதவியவர்கள் பிராமணர்கள் அல்ல. மாயா பாண்டியன், உக்கிர பாண்டியன், வீர பாண்டியன்தான் மாற்றாந்தாய் பிள்ளைகள். இவர்களுக்கு இலங்கை மன்னன் முதலாம் சேனன், முதலியவர்களின் உதவி யோடு தாக்குதல் தொடுத்திருக்கின்றார்கள். அவர் களுக்கு பிராமணர்கள் துணையிருந்தார்கள் என்று சான்றுகள் இல்லை.*

*மாணிக்கவாசகர் குருந்த மரத்தடியில் வாதவூரடிகள் ஆட்கொண்ட பிறகு திருவாசகம் பாடுகின்றார். அவர் போர் வீரராகவும், சிவபக்தராகவும் விளங்கியவர். மன்னனாகிய சிவபக்தனுக்கு சிவபக்தர் உதவுவது என்ற அடிப்படையில்தான் இது நிகழ்ந்திருக்கலாம்.*

**புராணங்களில் ஒன்றாகவும், வரலாற்றியல் ஆய்வு முறையில் வெளிப்படும் உண்மை ஒன்றாகவும் ஆவுடையார் கோயில் அமைந்துவிட்டதைப் போல, அறுபத்து மூன்று நாயன்மார்களில் வேறு நாயன் மார்களின் வரலாறுகளுடன் தொடர்புள்ள கோயில்கள் உள்ளனவா?**

*பூசலார் நாயனார் வழிபட்ட திருநின்றவூர் ஹிருதயாலேசுவரர் கோயில் மயிலை வாயிலார் நாயனார் கோயில் முதலியவை இத்தகைய ஆய்வுக்கு உரியவைதான். காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலை தான் ராஜசிம்மன் கட்டுகின்றான். அப்போது மனதிலே கோயில் கட்டியவர் பூசலார் நாயனார். அதனால் ஹிருதயாலேசுவரர் கோயில் எழுந்தது. இங்கு நோக்கத்தக்க ஒன்று உண்டு. அது கைலாச நாதர், கைலாச நாதர் என்றே பல கோயில்களுக்கு பெயர் வைக்கிறார்கள். அது நமது எல்லை இமய மலை வரைக்கும் வகுத்துக் காட்டுவதும் ஆகலாம். இன்னொன்று வடவரின், வடமொழியின் தாக்கம் என்றும் கருதலாம்.*

**இந்த மாணவர்களின் போராட்டத்திற்குப் பிறகு காவி ஆர். எஸ். எஸ். கும்பல் தனது வாலை சுருட்டிக் கொண்டதாக கருதிய நிலையில் சைவ வரலாற்றில் தாங்கள் மேற்கொள்ளும் முன்னெடுப்புகளை தடுக்க ஆ.பத்மாவதி அம்மையாரின், நூலை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்றே கருதினோம். ஆனால், அவர்கள் மீண்டும் ஆ. பத்மாவதியின் முந்தைய நூல்களை எடுத்து பிரச்சினையை தொடுக்கிறார்கள். புலவர் செ. ராசு நூல்களை எல்லாம் எடுத்து தாக்குதல் தொடுக்கிறார்கள். இதை எப்படி எடுத்துக் கொள்வது?**

*பரப்பப்பட்டிருக்கிற கதைப் போக்குத் தன்மையில் அறிவுபூர்வமான விசயம் தலையெடுக்கக் கூடாது. அறிவியல்பூர்வமான அணுகுமுறையை முளை யிலேயே கிள்ளி எறிவதுதான் அவர்கள் நோக்கம். அவர்கள் நம்ப வைத்திருக்கின்ற விசயத்துக்குள் சிந்திக்க வைக்கும் அறிவியல் அணுகுமுறையை தடுப்பதன் மூலம் அவர்களைத் தக்கவைத்துக் கொள்கிறார்கள்.*

**கவர்னரிடமிருந்து விளக்கம் கேட்டு பல்கலைக் கழகத்திற்கு கடிதம் வந்ததைப் போல சி.எம். செல்லிலிருந்து வந்ததாகவும் அறிந்தேன். தமிழக அரசு இவ்விசயத்தில் என்ன செய்தது?**

*தமிழக அரசு அதாவது தலைமைச் செயலகத்தி லிருந்து இந்து அறநிலைத் துறைக்கு அனுப்பி யுள்ளார்கள். அதற்கு முன்பாக நானே ஆவுடையார் கோயிலை மாணிக்கவாசகர் கட்டிய கோயில் அல்ல என்று முறையாக ஆய்வு செய்து அறிவிக்கும் படி நீதிமன்றம் மூலம் மனு அனுப்பியுள்ளேன். ஆர்.எஸ்.எஸ். காரர்கள் சன் தொலைக்காட்சியில் இந்நூலை தடைசெய்யும்படி அறிவிக்கக் கோரினார்கள். அவர்கள் செய்யவில்லை. மக்கள் அதாவது ஆய்வாளர்கள் "கோயிலை ஆய்வு செய்து எழுதி யிருப்பார்கள் அதை மதிப்பதில்லை. அரசாங்க ஐயர் சொல்வதே எடுபடுகிறது. தொல்லியல் ஆய்வில் காணும் முடிவுகள் பாடத் திட்டத்தில் மாற்றப்படு வதில்லை. கோயில்களில் ஐயர் சொல்லும் விசயத்தி லிருந்து விலகி மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. அதனுடைய விளைவுதான் இப்பிரச்சினை வளர்ந்ததற்கு அடிப்படை. இந்தியாவின் அறிவு விழிப்புணர்ச்சியை நிர்வாகம் சார்ந்த ஆங்கிலமும், மதம் சார்ந்த சமஸ்கிருதமும்தான் மழுங்கடித்து ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. ஆங்கிலம் என்பது நிர்வாகம். மக்களுக்கு நிர்வாகம் எனும்போது ஆங்கிலம் மாயை. எனது அகம் என வரும்போது வடமொழி மாயை. அறிவு எனும் போது ஆங்கிலத்தி லிருந்து விடுபடவும், கடவுள் எனும்போது வட மொழியை மறுக்கவும் யாரும் தயாராக இல்லை. ஆர்.எஸ்.எஸ். கிறித்துவர்களை எதிர்க்கிறார் களே? ஆங்கிலத்தை எதிர்ப்பார்களா? சுதந்திரப் போராட்டத்தில் தொடங்கிய இரண்டு விசயம் இந்தியாவை நிர்ணயிக்கின்றது. ஆங்கிலம், மதம் சார்ந்த சமஸ்கிருதம் இரண்டும் அறிவார்ந்த விழிப்புணர்ச்சிக்கு என்றும் உதவாது உதவாது உதவாது.*


# தமிழினி


**அரங்கு**

**28 - 29**

**281 - 282**




நாவல்கள்




























சிறுகதைகள்










வாக்காளனாகிய நான்...
மானசீகன்
கட்டுரைகள்


சொல் என்னும் உயிர்விதை
மகுடேசுவரன்



பழமொழித்தேறல்
மகுடேசுவரன்



விதை
அரசியல்
பாமயன்


GOETHE
கதே
இரா.குப்புசாமி


VOLTAIRE
வால்டேர்
இரா.குப்புசாமி


NABOKOV
நபக்கவ்
வலிமையான அபிப்பிராயங்கள்



De Sica
டி சிகா



தெருவோர
ஜென்
குரு
பெர்னி கிளாஸ்மேன்


நெஞ்சொடு கிளத்தல்
பாதசாரி



பகுத்தறிவின்
மூடநம்பிக்கைகள்
இராசேந்திர சோழன்



திரைக்கு
வெளியே
மகுடேசுவரன்


திரை இசைத்
தென்றல்
மகுடேசுவரன்



நம்மை
மகிழ்வித்த
கலைஞர்கள்
மகுடேசுவரன்


திரையில்
ஒளிர்ந்த
கதைகள்
மகுடேசுவரன்


திரைக்கு
வெளியே
மகுடேசுவரன்




சிறுகதைகள்







கவிதைகள்









கவிதைகள்















கட்டுரைகள்















# ஒண்ணாயிரன்னோன் புகழ்மாயலவே....

இரா. காமராசு



**ந**மக்கு இன்றைய தேவை அறிவுத் துறையையும் மக்கள் சமூகத்தையும் இணைக்கக்கூடிய செயற் பாட்டாளர்களே என்பார் கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி. நம் அறிஞர்கள் பலர் சமூகத் தொடர் பின்றியும், ஏன் சில வேளைகளில் எதிராகவும், இருப்பதை அறிந்தால் இதன் அவசியத்தை உணரலாம். மக்களிடமிருந்து கற்றும் பெற்றும் கண்டடைந்த உண்மைகளை மக்களுக்கே கையளிப்பது நல் அறிவு வசப்பட்டால் சாத்தியமாகும். அரிதின் முயன்று தான் கண்ட வரலாற்றியல் முடிவுகளை தமிழ் மக்கள் வரலாற்று மீட்டெடுப்பாக முன்வைத்த பேராசிரியர் ந. அதியமான், தமிழ்நாட்டின் கடலியல் ஆய்வு முன்னோடி ஆவார்.

*26.06.1963*ல் திருச்சி மாவட்டம் சிறுகனூரில் விவசாயப் பின்புலம் கொண்ட குடும்பத்தில் பிறந்தவர். தொடக்கத்தில் பொறியியல் பட்டயம் பயின்றவர். பின்னர் 'Diving' எனும் நீர்மூழ்கும் நுட்பம் கற்றார். கோவா கடலாய்வு மையத்தில் பணிக்குச் சேர்ந்தார். 'நான் 'boy service' பதினெட்டு வயதாகும் முன்பே பணிக்குச் சேர்ந்தவன்' என அடிக்கடிச் சொல்வார். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் வ.ஐ.சுப்பிரமணியத்தின் அழைப்பின் பேரில் நீர் அகழாய்வு மையத்தில் பணிக்குச் சேர்ந்தார்.

அதியமான் அறிவைச் சேகரிக்கும் துடிப்பு மிக்கவர். நாளும் புதியது கற்கும் ஆர்வம் இயல்பி லேயே அவரிடம் இருந்தது. தமிழ் இலக்கியம், வரலாறு, தொல்லியல், நாணயவியல், சுவடிகள், கல்வெட்டு... எல்லாம் அவரே முயன்று கற்றுத் தேர்ந்தவை மட்டுமல்ல மொழிகளைக் கற்பதிலும் பேரார்வம் கொண்டவர். ஆங்கிலத்தில் மிக இயல்பாகப் பேசவும், எழுதவும் தேர்ந்தவர். அவரின் கட்டுரைகள், நூல்கள் பல ஆங்கிலத்திலேயே வந்தன. ஓரளவு இந்தி மொழிப் பயிற்சியும் உண்டு. தெலுங்கு, மலையாளம், மராட்டி போன்ற இந்திய மொழிகள் அறிவார். ஆய்வுத் தேவைகளுக்காக கிரேக்கம், இலத்தீன், பிரெஞ்சு மொழிகளையும் ஓரளவு கற்றதாகக் கூறுவார். இந்த பன்மொழிப் புழக்கமும். பல்துறைப் பயிற்சியும் அவரின் கல்விப்புல ஆய்வுகளின் ஆழ, அகலங்களை விசாலப்படுத்திற்று எனலாம்.

தமிழ் மக்களின், மொழியின் தொன்மைமிகு வரலாற்றுத் தடங்கள் இந்திய அளவிலும், உலக அளவிலும் ஏற்புறுதி பெறும் காலமிது. அகழாய்வு களும், தொல்பொருள் சான்றுகளும் இதுவரை தொன்மமாகப் பார்க்கப்பட்ட கருதுகோள்களை 'உண்மை வரலாறாக' மாற்றிக் காட்டியிருக்கிறது. தமிழ்க் கடலியல்சார் ஆய்வுகளுக்கும் இதில் பெரும் பங்களிப்பு உண்டு. கடலோடிகளாகத் திகழ்ந்த ஆதித்தமிழர்களின் கடல் பயணங்கள், கடல் பயண வழிகள், வணிகத் தலங்கள், வணிகப் பொருள்கள், வணிகமுறைகள் குறித்த வரலாற்று, பண்பாட்டுக் கூறுகளை அதியமான் தன் ஆய்வுகளின் வழியே நிறுவிக் காட்டினார். மட்டுமல்ல அவற்றை இந்திய வரலாற்றின் ஒரு பகுதியாக உணர்த்தவும் செய்தது அவரது ஆகச் சிறந்தப் பங்களிப்பு எனலாம்.

கோவாவில் இயங்கும் தேசிய கடலாய்வு நிறுவனத்தோடு இணைந்து பூம்புகார், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் கடலியல், தொல்லியல் ஆய்வு களை மேற்கொண்டார். புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ராஜன், தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ராஜவேலு. செல்வக்குமார் ஆகியோருடன் இணைந்து பல ஆய்வுகளை நிகழ்த்தி உள்ளார். தாண்டிக்குடி. மயிலாடும்பாறை, மந்திரிப்பட்டினம் ஆகிய இடங்களில் நடந்த கடல்சார் தொல்லியல் ஆய்வு களில் இவரின் பங்கு பெரிது. சங்க இலக்கியங்களை நுட்பமாகக் கற்றார். இதன் விளைவாக இலக்கியச் சான்றுகளை வரலாற்று ஆய்வுகளில் தேடிக் கண்டார். அரிய பொருள்கள் சிலவற்றை இவர் அடையாளப்படுத்தினார். இதனூடாக சங்ககால வரலாற்றுக்கு அரண் சேர்த்தார். கிழக்குக் கடற்கரை ஆய்வுகளில் ஈடுபட்டு இவர் கண்டுபிடித்த 'நங்கூரங்கள்' பழந்தமிழர் கடல் பயண வழித் தடத்தையும், வரலாற்றையும் மெய்ப்பித்தன.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் துறைத்தலைவர், புலத்தலைவர், ஆட்சிக்குழு உறுப்பினர் போன்ற பல பதவிகளில் சிறப்புறப் பணியாற்றினார். தமிழ்க் கலை, civilization இதழ்களின் ஆசிரியராகவும் இருந்துள்ளார். பல தேசிய, பன்னாட்டுக் கருத்தரங்கு களை முன்னின்று நடத்தியுள்ளார். ஆய்வுத் துறையில் இளைஞர்களை ஊக்குவித்தார். நிகமம், தமிழகக் கடல்சார் வரலாறு, நாவாய் போன்ற நூல்கள் யாவும் மூத்த, இளம் ஆய்வாளர்களின் தொகுப்புக்களே. பா.ஜெயக்குமார், ஆ.துளசேந்திரன், பவானி போன்ற துறைப் பேராசிரியர்களை ஒருங்கிணைத்து இவற்றைச் செயற்படுத்தினார்.

தம் துறை சார்ந்த அறிஞர்களைப் பொன்னே போல் போற்றுவார். அறிஞர் ஒய்.சுப்பராயலு அவர்களைத் தன் ஞானத்தந்தையாக மதித்தார். செ.ராசு, ஐராவதம், சாந்தலிங்கம் உள்ளிட்ட இந்திய அறிஞர்களோடும், உலக அறிஞர் பலரோடும் நல்லுறவைப் பேணினார்.

தமிழ்ப்பண்பாட்டு உணர்வு உந்துதலை வெளிப் படுத்துவார். தன்னை இடதுசாரி, மார்க்சியக் கருத்தியல் சார்புடையவராக அடையாளப்படுத்திக் கொள்வதில் மகிழ்வார். நாவாவின் ஆராய்ச்சி, உங்கள் நூலகம், சமூக விஞ்ஞானம் ஆகியவற்றில் தொடர்ந்து எழுதினார். தோழர்கள் சி.மகேந்திரன், ஆர்.நல்லகண்ணு, சண்முகம் சரவணன் ஆகியோர் மீது பேரன்புமிக்கவர். 'தாமரை' வளர்ச்சிக்கு உதவினார். கழிந்த சில மாதங்களாக துறைமுகப் பட்டிணங்கள் குறித்து மாதம்தோறும் 'தாமரை' இதழில் எழுதினார். அய்யா பழ. நெடுமாறன் அவர்களோடும் நெருக்க மாக இருந்தார்.



தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனமும் இணைந்து நடத்தும் சிறந்த நூல்களுக்கு விருது வழங்கும் திட்டத்தில் சில ஆண்டுகளுக்கு முன் புரவலராக இணைந்தார். சிறந்த ஆய்வு நூலுக்குப் பரிசு வழங்கினார். யார் பெயரில் பரிசு வழங்குவது என வருகிறபோது என் தந்தையார் சிறந்தவர். என்றாலும் அவர் பெயர் வேண்டாம். நான் நாளும் மதித்துப் போற்றும் நம் அறிஞர் பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன் பெயரில் விருது தரலாம் என்றார். அவரிடமும் இதனை வலியுறுத்தினார். ஆன்றவிந்த கொள்கைச் சான்றோராகிய தோழர் ஆ.சிவசுப்பிரமணியன் கறாராக தன் பெயரில் வேண்டாம் என மறுத்துவிட்டார். பின்னர் அவ் விருதினை தான் மதிக்கும் மூதறிஞர் வ.அய். சுப்பிர மணியம் பெயரில் அதியமான் வழங்கி வந்தார்.


தொல்லியல் கழகத்தின் பொறுப்பில் இருந்து அதனை முன்னெடுத்தார். 'ஆவணம்' இதழ் தொடர்ந்து வர உதவினார். மாணவர்க்கும், ஆய்வாளர்க்கும் பல உதவிகளைச் செய்து வந்தார். அவரிடம் நல்ல நூலகம் உண்டு. ஆறு மாதங்களுக்கு முன்பு எழுத்தாளர் பிரபஞ்சன் என்னைத் தொடர்பு கொண்டு, கோவலன், கண்ணகி - புகார் குறித்து எழுதத் திட்டம். ஓர் நூல் வேண்டும் கிடைக்குமா? என்றார். சி. கோவிந்த ராசனார் எழுதி, மதுரைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட "கண்ணகியார் அடிச்சுவட்டில் புகார் முதல் வஞ்சிவரை" எனும் நூல்தான் அது. நான் பேராசிரியர் அதியமானிடம் கேட்டேன். இருக்கிறது என்றார். செராக்ஸ் எடுத்து அனுப்பலாம் என்றேன். வேண்டாம் பிரபஞ்சன் ஓர் அற்புதப் படைப்பாளி. அவர் கேட்கிறார். நூலை அனுப்பு தம்பி. பிறகு நாம் பார்த்துக் கொள்ளலாம் என்றார். இதுதான் அதியமான்.

குறைவான வயதில் பல உச்சங்களைத் தொட்டவர் அதியமான். துளியும் கர்வம் கிடையாது. எளிமை, இனிமை அவர் சுபாவம். அழகாக உடுத்துவார். சிரித்த முகமும், குழைவானப் பேச்சும், குதூகலமும் அவரோடு எப்போதும் இருந்தன. நண்பர்கள், துறை வல்லுநர்கள் ராஜவேலு, செல்வகுமார், நூல்கள், பயணங்கள், ஆய்வுகள்... என அவர் வாழ்வை அமைத்துக் கொண்டார். ஆய்வியல் அறம், ஞானச் செருக்கு, உடல் உயரம் போலவே மேலோங்கியப் பார்வை... இதுதான் பேராசிரியர் அதியமான். அன்பும் பாசப்பிணைப்பும் கொண்ட வாழ்க்கைத் துணைவி கல்பனா, தன் கணவர் ஆற்றல் உணர்ந்து இறுதிவரை அவரைக் கொண்டாடினார், பேராசிரியரும் துணைவியாரின் சுதந்திரத்தை மதித்தார். தொடர்ந்து அவர் உயர் கல்வியைத் தொடர ஊக்குவித்தார். இரண்டு மகள்கள். காயத்ரி, சுகி நந்தினி.


மரணத்திற்கான வயதில்லை. ஞான அண்ணனை, நாங்கள் இழந்தோம். தமிழ் அறிவுலகம் கடல்சார் வரலாற்று அறிஞனை இழந்துவிட்டது. தமிழின வரலாற்று மீட்டெடுப்பில், சீறிப்பாயும் கடல் அலை போல ஓர் பேரலையாக பேராசிரியர் ந.அதியமான் நின்று நிலைப்பார். ●

# அருணா பப்ளிகேஷன்ஸ்

## எங்களது புதிய வெளியீடுகள்





Code: A467
**Price: ₹70**




Code: A472
**Price: ₹120**




Code: A471
**Price: ₹120**




Code: A470
**Price: ₹60**

தொடர்புக்கு:

**அருணா பப்ளிகேஷன்ஸ் ARUNA PUBLICATIONS**

12, 1st Street, (Annexe) North Jagannatha Nagar, Villivakkam, Chennai - 600 049. ✆ +91-44-2650 7131.
Cell: 94440 47790 E-mail : arunapublications@yahoo.com Online shopping at : www.arunapublications.com


# அரசு அமைப்பு பற்றிய குறிப்பு:

## ஆப்பிரிக்காவிலும் இடைக்காலத்திய ஐரோப்பாவிலும் கூறாக்க அரசுகள்

அய்டன் டபிள்யூ.சவ்தால்

தமிழில் : கி.இரா.சங்கரன்

Aidan W.Southall,
*A Note on State Organization : Segmentary States in Africa and in Medieval Europe* in **Early Medieval Society**
(ed), Sylvia Thrupp, NewYork, 1980.



அய்டன் டபிள்யூ.சவ்தால்

இந்திய வரலாற்றியலில் (Indian Historiography) பர்டன் ஸ்டய்ன் (Burton Stein) வருகை அரசு (state) பற்றிய ஆய்வினை அர்த்தத்துடன் உந்தியது. அவர் தென்னிந்திய வரலாறு பற்றி இடைக்காலத் தென்னிந்தியாவில் அரசும் வேளாண்முறையும்: ஒரு வரலாற்றியல் விமர்சனம் (The State and the Agrarian Order in Medieval South India: A Historiographical Critique) என்ற தலைப்பில் கட்டுரை வெளியிட்டபோது அவராய்வின்மேல் போதுமான கவனம் திரும்ப வில்லை. ஆனால், அக்கட்டுரையின் அடிப்படையில் அவர் விரிவாக எழுதி வெளியிட்ட இடைக்காலத் தென்னிந்தியாவில் வேளாண் அரசும் சமூகமும் (Peasant State and Society in Medieval South India, 1980) என்ற நூலிற்கு ஆதாரங்களுடன் கருத்தியல் பூர்வ மாகவும், கல்வெட்டியல் மூலமாகவும் அறிஞர்கள் விமர்சனங்களை வெளியிட்டனர். காரணம், அந் நூலிற்கான கருத்தியலாக மானிடவியலார் அய்டன் டபிள்யூ.சவ்தால் (Aidan W.Southall) *1956* இல் வெளியிட்ட ஆலூர் சமூகம் : ஓர் ஆய்வு ஆதிக்கம் தொழிற்படும் முறையின் வகைகள் (Alur Society : A Study in Process and Types of Domination), என்ற நூலில் வாதிக்கப்பட்ட கூறாக்க அரசுகூறுகளைப் பயன்படுத்தி இடைக்காலத் தென்னிந்திய வரலாற்றினை பர்டன் ஸ்டய்ன் அணுகியிருந்தார். கூறாக்க அரசின் கூறுகளை தம் நூலில் அய்டன் டபிள்யூ.சவ்தால் (Aidan W.Southall) சுருக்கமாகத் தந்திருந்தார். *1980*இல் தாம் வெளியிட்ட அரசு அமைப்பு பற்றிய குறிப்பு: கூறாக்க அரசுகள் (A Note on State Organisation: Segmentary States in Africa and Medieval Europe) என்ற கட்டுரையிலும் அக் கூறுகளை வெளியிட்டார். அக்கட்டுரையின் மொழி பெயர்ப்பே இங்குத் தரப்படுகிறது. கட்டுரையே, ஒரு கருதுகோள் போன்றுள்ளது. இக்கட்டுரையில் அய்டன் டபிள்யூ. சவ்தால் பயன்படுத்திய Feudatory, Count, Earldorman, Flander, Vassal என்ற சொற்களுக்கு அதிகார தொனியில் வேறுவேறு பொருள்கள் இருப்பினும் அவற்றுக்கு இணையாக தமிழில் குரிசில் என்ற சொல்லினை நிலவுடைமையாளர் / வட்டாரத்தலைவர் என்ற பொருளிலும் ஆண்டை, பண்ணையார் என்ற சொற்களிலும் சுட்டியுள்ளேன். ஐரோப்பாவின் இடைக்காலத்து வரலாறு, இங்கிலாந்தின் அரசியல்அமைப்பு வரலாறு போன்ற வரலாற்று நூல்களின் அடிப்படையிலும், துர்கைமின் சமூகத்தில் உழைப்பின் பிரிவு, சமூக-பொருளியல் அமைப்பின் கோட்பாடு என்ற சமூகவியல் நூல்களின் அடிப்படையிலும், ஆப்பிரிக்க அரசியல்முறை, ஒரு கருப்புபைசாண்டியம், புகாண்டா இனத்தின் வழக்கங்கள் என்ற மானிடவியல் நூல்களின் அடிப் படைக் கருத்துகளையும் உட்செரித்து இக்கட்டுரை யினை எழுதியுள்ளார். எனவே, இக்கட்டுரையில் விளக்கப் பட்ட கருத்துகளை இடைக்காலத்திய ஐரோப்பாவின் வரலாற்றுப் பின்னணியில் புரிந்து கொள்ள வேண்டும். இவர் பயன்படுத்திய நூல்கள் கட்டுரையின் இறுதியில் தரப்பட்டுள்ளன.

ஒரு சமூகத்தில், (இங்கு இதனை இனக்குழு என்று புரிந்துகொள்ளலாம்) வெளியிலிருந்து வரும் ஆக்கிரமிப்பிலும், உள்கட்டவேறுபாடுகளாலும் அரசு அமைப்புகள் உருவாகியிருக்க வேண்டும் என்று சில அறிஞர்கள் எழுதுகின்றனர். சிலர், ஆக்கிரமிப்பு பல உடனிகழ்ச்சிகளால் உருவாகலாம் என்று அழுத்திக் கூறினர். ஆனால், இதற்கான இனவியல் சான்றுகள் போதுமானதாக இல்லை. ஆனால், ஆபர்க், க்ளக்மேன் (Oberg, Gluckman,) போன்றோர் சூளூ, பன்யன்கோள் (Zulu,Banyankole) போன்ற ஆப்பிரிக்க இனங்களில் அரசமைப்புகள் உருவாவதற்கு ஆக்கிரமிப்புகளே தொடக்கம் என்றனர். நூப் (Nupe) இனத்தினை ஆய்ந்த நாடெல் (Nadel) என்பவரும் இக்கருத்தினைக் கொண்டவர்.

ஆப்பிரிக்காவில் ஆளூர் (Alur) என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கிடைத்த சான்றுகளின் அடிப்படையில் சில கருத்துகளைப் பரிந்துரைக்கிறேன். சில சூழல்களில் வெவ்வேறு சமூகக்கட்டமைப்பு களை உடைய இனக்குழுக்கள் ஒன்றிணைந்து பெரும் சமூகக் கூட்டமாகிறபோது அங்கு ஆண்டான், அடிமை என்ற சமூகப்படிநிலை உருவாகிறது. அப்போது, அங்கு அரசமைப்பு எழுகிறது. இவ்வியக்கம் புறநிலை ஆக்கிரமிப்பால் மட்டும் நிகழ்வது இல்லை. இதற்கு இரு சூழல்கள் சாதகமாக அமைவன. ஒன்று: கட்டமைப்பு (structure); இரண்டு பண்பாடு (culture). முதலாவதாக இரு இனக்குழு சிறு அளவில் அரசியல்ரீதியாக அமைப்பாக உருவாகும். சமூக ஒழுங்கு (order) மிகச்சிறிய அளவில் குழுக்களில் திணிக்கப்படும். குழுக்களிடையிலான முரண்பாடுகளால் எழும் வன்முறை இலகுவான சமநிலைப் படுத்தல் மூலம் குறைக்கப்படும். சமூகஅமைப்பில் இதனைக் கவனத்தில் கொள்ளவேண்டும். அருகிலுள்ள இனக்குழு பரவலான அளவில் தன் அரசியல் அமைப்பினை உருவாக்கும். தொடர்ந்து பெரிய அளவில் அரசு அமைப்பினை உருவாக்கும். இங்கு, ஓரளவு அமைதியும் சமூக ஒழுங்கும் பாதுகாப்பாக இருக்கும். இது வட்டார அளவிலும் எண்ணிக்கை அளவிலும் சிறிதாகக் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கும். இரண்டாவதாக, ஒரு சமூகம் பிறிதொரு சமூகத்தின் ஆளுமைமிக்கத் தலைவர்களுக்கு சிலவற்றை பரிசாகத் தரும். இதனைப் புரிந்துகொள்வதற்கு மாக்ஸ் வெபர் (Max Weber)ரிடம் இருந்து (routinization) வழக்கமாக நிகழ்வது என்ற கருத்தினை எடுத்துக் கொள்கிறேன். பரம்பரையான ஆளுமைகொண்ட தலைவர்களை இவ்வாய்விற்குப் பொருத்தமாக எடுத்துக்கொள்ளலாம். சடங்குநிலைத் தலைவர்கள் (sacral chiefship) பற்றி பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால், இவர்கள் வேபேரியன் (Weberian) கொள்கைகளின் முக்கியத்துவத்தினை உணரவில்லை. ஆனால், மழைதருவிப்போர் (rainmakers), நீதிமான்கள் (arbitrators), அமைதிப்பேச்சாளர் (enforces of peace), என்ற நிலையில் ஆளூர் சமூகத்தலைவர்களை விளிம்புநிலையில் உள்ள சமூகத்தினை வரவேற்றனர். இது ஒருபுறம் இருக்க பிறிதொருநிலையில் ஆளூர் இனத்தலைவர்கள் அரசியல்விதிகளை நிர்ணயிப்பவர்களாகவும் மாறிவரும் மரபு சூழலுக்கு ஏற்ப ஆன்மிகப்பணியில் இறங்கினரென்றும் அறியப் பட்டது. இது ஒரு வகைமாதிரியாக (sanctioned pattern) அமைகிறது. விளிம்புநிலைகளில் இருந்து எழுந்த தலைவர்கள் போதுமான ஆளுமை கொண்டவர்களாக இல்லை. இருந்தபோதும் இத்தலைவரின் நிலை வழமைபோல் அமைந்தது. ஆளூர் தலைவர்கள் தூய ஆளுமைகொண்டவர்களாகவே விளிம்புநிலை குழுக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். இவரது ஆளுமை பரம்பரையான ஆளுமைகுணத்தால் (hereditary charisma) அமைந்தது என்று கருதப் படுகிறது. இருந்தபோதும் இத்தலைவரின்நிலை வழமைபோல் அமைந்தது.

வேபேரியன் (Weberian) கருத்துப்படி அரசன் ஒரு போர்த்தலைவன் என்பதை என்னால் ஏற்க முடியவில்லை. அரசனுக்கு போர் அதிகாரம் பெறுவதற்கான ஏதுவான வடிவங்களில் ஒன்றாக இருக்கலாம். பண்டைய வரலாற்றில் தலைமைத் தொடர்ச்சியே (hereditary) அரசன். அவன் இரட்டைத் தன்மை (dual) கொண்ட தலைவன் என்ற அவரின் கருத்திற்கும் முரண்படுகிறேன்; இன்னொரு நிலையில் போர், வேட்டை, மந்திரவாதி, ஆளுமைத் தலைவன் (charismatic leader), மழைதருவிப்போன், மருத்துவன். எனவே, அவன் சமயத்தலைவன், மருத்துவன் இறுதியாக வலியோன் (arbiter). பிறிதொருநிலையில் அரசன் தந்தைவழிக் குடும்பத் தலைவன் (patriarchal head of the family) அல்லது குழந்தை குட்டிகளுக்குத் தலைவன்.

ஆளூர் சமூகத்திலுள்ள லெண்டு (Lendu) என்ற குழுவின் தலைவன் போரினைத்தடுக்கும் அதிகாரம் காரணமாக பெரிதும் மதிக்கப்படுபவன். சடங்குகளின் மூலம் மழையினை வருவிக்கவும், தடுக்கவும் ஆன அவனின் திறன் மக்கள்மனத்தில் பெரிதும் நிலைபெற்றுள்ளது. அதிகாரத்தினை திரட்டி பணிய மறுப்பவர்களை நசுக்குவதன்மூலம் இவன் மதிக்கப் படவில்லை. இக்குழுத்தலைவனின் ஆளுமை பிற இனக்குழுக்களின் அதிகார அலகுகளை தம் வலைக்குள் கொண்டுவந்திருக்க இயலாது. இதனால், இனக் குழுவில் நிறுவனமயப்பட்ட உறவுகள் உருவானது. இச்சடங்குநிலை அதிகாரங்கள் இவனை மத்தியஸ்தன் என்ற ஆளுமைக்கு உயர்த்தியது. இவ்வுறவு மழை தருவித்தல், மத்தியஸ்தம் செய்தல், புகலிடம் அளித்தல் என்பதன் அடிப்படையில் அமைகிறது. தலைவரால் சுழற்சிமுறை வேளாண்உற்பத்தியினை

(cycles of production) அறிமுகப்படுத்துவதாலும் அனைவருக்கும் உணவு என்பதாலும் அமையும். குழுவிற்குள் முரணுருவாகும்போது படையணி மூலம் சரிசெய்யவும் அங்கு வாய்ப்பு அமைந்தது. பல குழுக்களுக்கிடையிலான முரண்அரசியல் அதிகாரம் பற்றி குறிப்பான விளக்கங்களை அளிப்பதற்கு வழிவகுத்தது. இதுபோன்ற அரசியல் அமைப்பில்/கட்டமைப்பில் நுழையும் குழுக்கள் கீழ்நிலை, உயர்நிலை அரசியல் அமைப்புக்கூறுகளை பரிமாறிக்கொண்டன. பல விழுமியங்களை பகிர்ந்தன. இயற்கை பேரிடர்களில் (பஞ்சம்/பருவகாலம்) பாதிக்கப்பட்ட குழுக்கள் ஒருங்கிணைந்தன. உள்ளூர்த் தட்பவெப்பம்-நிலக்கிடப்பினை (ecology) தம் கட்டுக்குள் வைத்திருக்கும் ஆளுமையான குழுவுடன் (dominant group) இவர்கள் கூட்டணி அமைத்தனர்.

ஆனால், இதுபோன்ற ஆளும்குழு ஆளூர் இனத்தில் அமைந்திருந்தது புதிதன்று. இதுபோன்று குழுக்களிடையேயான பண்பாட்டுநிலைகள், கட்டமைப்புகள் பரவலாகக் காணப்படுவன. இது போன்று பலகுழுக்கள் ஒருங்கிணையும்போது ஒரு குழுமட்டும் தலைதூக்கினால் அதனை குழுக்களுக்குள் நிகழ்ந்த உள்வேறுபாடுகள் என்றும் அல்லது வெளியிலிருந்துவந்த ஆக்கிரமிப்பின் விளைவு என்றும் கருதலாம்.

கோட்பாட்டுரீதியாக அரசு, கூறாக்க அமைப்பு இரண்டிற்கும் இடையிலான வேறுபாடு இருந்தது கருதத்தக்கது. இவ்விரண்டிற்கும் இடையில் உள்ள அமைப்பினை தனித்து வகைப்படுத்தப்பட வேண்டியதில்லை. ஆனால், எந்தவகையாக இருந்தாலும் அதற்குப் பொருத்தமான தக்க சான்றுகள் தேவை. அவற்றிலுள்ள வலு, அமைப்பு, காலத்தொடர்ச்சி முக்கியமாக மதிக்கப்படவேண்டும். புறக்கட்டமைப்பு மாறும்நிலையில் இருந்தால் உள்கட்டமைப்பிலுள்ள இயக்கம் மாறும் என்ற அவசியமில்லை.

இவ்விவாதம் அரசு பற்றிய விளக்கத்தின்மேல் திரும்புகிறது. இது தொடர்பாக நாடெல் (Nadel) என்பவரின் கருத்து தெளிவாக உள்ளது. அரசு பற்றிய இவர் முன்மொழிந்த கூறுகள் சுருக்கமாக: இறையாண்மையுடைய நிலப்பரப்பு, மைய அரசு, சிறப்புநிலை ஆட்சி அலுவலர், அதிகாரம் பெற்ற படையணி (territorial sovereignty, centralised government, specialised administrative staff, monopoly of the use of legitimate force). மாக்ஸ் வெபர் (Max Weber) இது மாதிரி அரசு ஒன்றினை குறித்துள்ளார்; பிற அறிஞர்களும் வேறு வேறு மாதிரிகளை எழுதியுள்ளனர். அரசு பற்றி பொதுவான கருத்தமைவில் சமூக மானிடவியலாரான நாடெல் (Nadel) அரசியல் அறிஞரான லஸ்கி (Luski) இருவருக்கும் குறிப்பிடும்படியான வேற்றுமைகள் இல்லை.

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஓர்அரசு இயங்குமானால் அங்கு ஓரிரு கூறுகளே அரசியல் கொள்கைகளை பிரதிபலிப்பனவாக இருக்கும் என்று நாடெல் (Nadel) கூறுகிறார். இதில் சில கூறுகள் விடுபடும் வாய்ப்பு உள்ளது.

நாடெல் என்பவரின் கூற்றுப்படி அரசு மாறும் நிலையில் (transistory) உள்ளபோது ஒன்று அல்லது இரு அரசியல் கொள்கைகள் தெளிவாகப் புலப்படும்; மற்றவை விடுபடும். மிக முக்கியமான கூறுகள்கூட விடுபடலாம். இங்கு நான் மிகச்சுருக்கமாக இடம், காலம் பொறுத்து கூறாக்க அரசுபற்றி வாதிக்கப் போகிறேன். அது மேலே சொல்லப்பட்டது போன்ற கூறுகளை உடையதாக இருக்காது.

கூறாக்க அரசின் கூறுகளை கீழே தருகிறேன்

1. நிலப்பரப்பியலுக்கான இறையாண்மை உண்டு; ஆனால், வரன்முறை உண்டு. அது மையத்திலிருந்து விளிம்புநோக்கிச் செல்லச் செல்ல தொடர்ச்சியான பல வட்டாரங்களைக் கொண்டிருக்கும். இறையாண்மை மையத்திலிருந்து விளிம்பு நோக்கி செல்லச் செல்ல அதிகாரம் தேயும். அது, மெல்ல சடங்குநிலை அதிகாரத்தில் முடியும்.
2. மைய அரசு உண்டு. பல விளிம்புநிலை நிலப்பகுதிகளின் (foci) ஆட்சி அலகுகளின் மேல் மைய அரசின் அதிகார ஆளுமை குறையும்.
3. மையத்தில் சிறப்பு ஆட்சிஅலுவலர்கள் (specialised administrative staff) இருந்தனர். ஆனால், இதன் படிநிலையமைப்பு விளிம்பு நிலைப்பகுதிகளில் (foci in peripheral) அடர்த்தியற்று இருந்தது.
4. ஆட்சியாளர்கள் மட்டுமே கொண்டிருந்த படையணி வரையறைக்குட்பட்ட நிலப்பரப்பியலில் செயற்பட்டது. எல்லா விளிம்புநிலை அலகுகளிலும் (foci) தனித்தனி படையணியினர் இருந்தனர்.
5. இடைநிலை (foci) ஆட்சி அலகுகளிடையே வேறுபாடு இருந்தது. தரைத்தளத்திலிருந்து கோபுர உச்சி (pyramidal) போன்று படிநிலை கொண்ட அமைப்பாக அது அமைந்தது. மைய நிலை அதிகார அமைப்பும், விளிம்பு நிலை அதிகார அமைப்பும் ஒரே மாதிரியில் அமைந்திருந்தது. ஆனால், பின்னது வடிவில் சிறிது. ஒரே மாதிரியான அதிகாரம் ஒவ் வொரு அளவிலும் இயங்கியது. அதிகாரம் கொண்ட ஒவ்வொருவரும் அடுத்தடுத்து தமக்குக்கீழ் இருப்போர் மேல் அதிகாரம் செலுத்தினர். அவர்களிடையே மோதல்களும் இருந்தன.

6. விளிம்பிலுள்ள அதிகார மையம் பிறிதொரு மைய அதிகாரத்துடன் கூட்டணி அமைப் பதற்கு வாய்ப்பு அமைகிறது. எனவே, கூறாக்க அரசு நெகிழும் தன்மையுடையது; அடிக்கடி மாறும் தன்மையுடையது. விளிம்புநிலை அதிகார அலகுகள் அரசியல் நிலை எடுப்பதால் அவற்றுக் கிடையே ஒரு சங்கிலி பிணைப்பு உருவாகிறது.

துர்க்கைம் கூறாக்கநிலை என்ற சொல்லை ஒரு சமூகக்குழுவில் கிளை வழிக் குழுக்களைச் சுட்டு வதற்குப் பயன்படுத்துகிறார். அவரின் கூற்றுப்படி இயந்திரத்தனமான ஒருங்கிணைவிற்கு இது உதவும். ஆனால், தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட மானிடவியல் களஆய்வு பல தளங்களைக் கொண்ட கோபுர அமைப்பு (pyramidal) சமூகக் கட்டமைப்பினையே வெளிப்படுத்தியது.

வரலாற்றுக்காலத்தில் எந்தவொரு நாகரிகச் சமூகமும் கவனமான வரலாற்று ஆய்விற்கு ஆர்வ மேற்படுத்தும். இந்த ஆர்வம்கூட நாகரிகத்தின் தோற்றம் பற்றி அறியவேண்டும் என்ற ஆசையால் விளைவது. இது அரசியல் முறையை அறிந்து கொள்ள இட்டுச்செல்கிறது. அரசியல்முறைதான் எல்லா இடங்களிலும் இயங்கியுள்ளது. வரலாற்றுக் காலத்தில் பெரும் பேரரசுகள் அவற்றின் உச்சகட்ட அதிகாரத்தில் இயங்கியபோது அவை எந்த வகையு மற்ற அரசியல்முறையாக இருந்தது. சமூகவியலின் பின்னணியில் அரசியல் கட்டமைப்பினை ஆயும் போது குழப்பமான அல்லது சிதைவுறும் கால கட்டங் களில் பெரிதாக ஒன்றும் வழக்கத்திற்கு மாறாக நிகழ வில்லை. நறுக்கு தெறித்தாற்போல் அலெச்சாண்டரின் பேரரசு, ரோமானிய, பைசாண்டிய பேரரசு, சார்லமாங்கேவின் பேரரசு, இஸ்லாமிய-முகலாய அரசுகள்,கிழக்கு ஐரோப்பிய அரசுகள் அனைத்தும் ஒரு முடிவினைத் தருகின்றன (empires of the Ancient East, of Alexander in the Near East and of Asoka in India of Rome and Byzantium, of Charlemangne of Islam and Moghuls, and of all the nations of Western Europe). அது ஒன்றே ஒன்றுதான். அது கூறாக்கநிலை அரசு; ஒற்றை அரசு அன்று.

மேற்சொல்லப்பட்ட இவ்விருவகை அரசமைப் புக்கும் இடையில் உள்ள வேறுபாட்டினை சுட்டிக் காட்டியுள்ளனர். ஒரு நாட்டின் அரசியல் பிரிவுகள் கூறாக்க அமைப்புகளின் தன்னாட்சியை வரையறை செய்கிறது. ஒரு நாட்டில், அரசியல் பிரிவுகளில் மையத்துடன் இணையாத வட்டார குழுக்கள் கூறாக்க அமைப்புகளின் தன்னாட்சியை வலுப்படுத்தும். இதுபோன்ற அரசியல் அமைப்புமுறை சொசி (zozi) இனக்குழு அமைப்பில் கொடுக்கல்-வாங்கல் (bilateral) என்ற நிலையில் வலிமையாக அமைந்துள்ளது. இரு வெவ்வேறு இனக்குழுவிற்குள் இது ஒன்றுடன் ஒன்று இணைந்தது. ஆங்லோ-சாக்ஸன் அரசு அண்மைக் காலம் வரையில் கூறாக்க அரசு வகைப் பட்டதாக இருந்தது. ஆங்லோ-சாக்ஸன் இனக்குழு கொடுக்கல்-வாங்கல் உறவுமுறையினைக் கொண்டது.

ரோமானிய ஆக்கிரமிப்பாளர்கள் ஐரோப் பாவின் வடமேற்கு ஜெர்மனியில் ஆட்சிப்பிரிவுகள் (provinces), பழங்குடிப்பிரிவுகள் (subdivisions of tribe) தன்னாட்சிமுறையினை நோக்கி நகர்வதனைக் கண்டனர். அப்போது அங்கு அனைவருக்கும் பொதுவான ஆட்சியாளர்கள் இல்லை. ஆனால், பலவட்டாரங்களின் இளவரசர்கள், மாவட்டங்களின் இளவரசர்கள் (princes of different nations and districts) அந்தந்த மக்களுக்கு நீதி வழங்கினர்; மக்களிடை யிலான சச்சரவுகளைத் தீர்த்தனர். காலம் செல்ல ரோமனிய ஆக்கிரமிப்பு வலுவடைந்தபோது பழங் குடிகள் மகாகூட்டணி ஒன்றினை உருவாக்கினர். அதன்மூலம் வலுவான மையப்படுத்தப்பட்ட அரசினை உருவாக்கினர்.

ஆங்லோ-சாக்ஸன் இங்கிலாந்தில் இன்றும்கூட கூறாக்க அரசகூறுகளின் அடிப்படையில் அரசு அமைப்பு இயங்குவதனைக் காணலாம். ஆனால், இங்கு அரசியல் சமூக ஒழுங்கு சுயமாக உள்ளது. மையப்படுத்தப்பட்ட அதிகாரத்தில் இல்லை. இங்குள்ள படையணியினை அரசன் இயக்கும்பாணி ஆளூர் தலைவனின் இயக்கத்தினை ஒத்துள்ளது.

சண்டைக்குமுன் எதிரியின்முன் சாக்ஸானியர் நீதி கேட்பார். நீதி மறுக்கப்பட்டால் எதிரி ஏழு நாட்கள் முற்றுகையிடப்படுவார்; சரணடைந்துவிட்டால் முப்பது நாட்கள் பாதுகாப்பில் வைக்கப்படுவார். இதற்குள் அவரின் உறவினர்களுக்கு செய்தி அனுப்பப் பட்டு தண்டப்பணம் (mulct) கட்டவேண்டும். ஏழு நாட்களுக்குள் அவர் சரணடையாவிட்டால் என்ன நடக்கும். முப்பது நாட்களுக்குள் தண்டப்பணம் கட்டப்படவில்லையெனில் என்ன நடக்கும். அது பற்றி செய்தி இல்லை. இதில் தொக்கி நிற்கும் செய்தி என்னவெனில் தண்டப்பணம் கட்டப்படவில்லை யெனில் எதிரி இரக்கமின்றிக் கொல்லப்படுவார்.

நீதி வேண்டும் இந்நபர் முற்றுகையிடும் அளவிற்கு பலம் பொருந்தியவரிடம் அல்லது ஒரு நிலப்பிரபுவிடம் உதவி நாடுவார். இயலவில்லை யெனில் அரசனின் சமரச முயற்சியினை எதிர் பார்ப்பார். இவையெல்லாம் தம் எதிரியுடன் சண்டையிடும்முன் எடுக்கப்படும் முயற்சி.

ஒரு மனிதன் ஒரு நிலப்பிரபுவுடன் தம் இரத்தவுற வினருடன் இரத்தம் சிந்தாமல் சண்டையிட இயலாது. தம் மனைவியை, சகோதரியை, தாயை ஒருவன் பாலியல் சீண்டல் செய்தால் அவன்மேல் சட்டபூர்வமாக போர் தொடுக்கலாம். பங்காளிச் சண்டை, கைபலம் (first right) போன்ற உணர்வுகள்

இன்றைய நாடாளுமன்ற உறுப்பினரின் மனத்தில் இடம் பெற்றுள்ளது. தவறுகளை நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் சரிசெய்வது கருத்தியல். ஆனால், தனிப்பட்ட முறையில் சண்டையிட்டுக் கொள்வது சாக்ஸானிய உலகில் அனுமதிக்கப்பட்டு உள்ளது. அரசர் தனக்கான குறுகிய அதிகார வட்டத் திற்குள் மட்டுமே இதனை நடைமுறைப்படுத்த முடியும்.

அரசியல் அதிகாரம், அரசர்கள், சிற்றரசர்கள், பிரபுக்கள், குறுநிலமன்னர்கள், (kings, lords, under kings, earldorman) குரிசில்களிடையே எவ்வாறு பகிரப்பட்டுள்ளது என்பதனை ஜாலிடெ (Jollitee) என்பவர் விளக்கியுள்ளார். நீதிமன்றமுறை எவ்வாறு மத்தியிலும், பண்ணை வீட்டாரிடமும், மக்கள் மன்றத்தினையும் சார்ந்திருந்தன என்பதனையும் விளக்கியுள்ளார். இவரின் கூற்றுப்படி, அரசனுக்கு என்று நிலவட்டம் இல்லை; ஆனால் மக்கள் கூட்டத்திற்கு உண்டு; வட்டாரங்களுக்கு இடையே தெளிவான எல்லைகள் இல்லை. மத்தியப்பட்ட அதிகாரம் கொண்ட படையணி இல்லை. சமூக ஒழுங்கு (order) உள்ளூர், மற்றும் இரத்த உறவுகளின் அடிப்படையில் அமைந்த கூட்டுமுயற்சியால் மேற்கொள்ளப்படும். இதே போன்றதொரு அரசியல் தன்மைகள் (political specialization) ஆளூர் இனத்தில் வழக்கில் இருந்ததனை இங்குச் சொல்லவேண்டிய தில்லை.

பதினோராம் நூற்றாண்டின் பிரஞ்சு நிலமானிய அரசியலில்கூட கூறாக்க அரசுநிலையைக் காணலாம். காபெடியன் (capetian) அரசர்கள் பேருக்கு இறை யாண்மை கொண்டிருந்தனர். இருந்தாலும், அவர் கேள்வி கேட்கப்படவில்லை. இவ்வரசியல் முறையில் நிலமானிய தலைவர்கள் அரசர்களுக்குத் தேவையான படையுதவியினை நிறைவேற்றுவர். ஆனால் எதிர்க்கும் அளவு அவர்கள் பலம் கொண்டவர் இல்லை; அவர்களின் வட்டாரத்திலுள்ள நீதி பரிபாலனங்களை செய்வதே அவர்களுக்கு போதுமானதாக இருக்கும். ஆனால், அரசர் சட்டம் ஒழுங்கினை நிலைநாட்ட முயற்சி எடுக்கமாட்டார். இரத்தம் சிந்துவதைத் தவிர்ப்பார். நிலமானிய குரிசில்தலைவர்களின் குத்தகைதாரர்களின் (fief) உரிமையினை காப்பார். ஆண்டைகள் (counts) அவர்களுக்குள் சண்டையிடு வார்கள். ஒருவரை ஒருவர் நில ஆக்கிரமிப்பு செய்வர். அவர்களை மேலிருந்து கட்டுப்படுத்த இயலாது. குத்தகைதாரர் இடையில் இதுபோன்று நிகழும். பிரான்சின் பலபகுதிகளிலும் அரசியல் கூறாக்கநிலை மும்முரமாக நிலவியது.

இடைக்காலத்து ஐரோப்பாவில் நெதர்லாந்து, சீலாந்து போன்ற நாடுகளின் பலம்மிக்க நிலவுடைமை மாநிலங்களின் (flanders) நிலங்கள் கோட்டை-கொத்தளங்களைப் பராமரிக்கும் படைத்தலைவர் களுக்கு பங்கிட்டுத் தரப்பட்டன. இவர்கள் பரம் பரையாக இவ்வுரிமையினைப் பெற முயன்றனர். இந்த நிலவுடைமை மாநிலங்களின் (powerful medieval principality), தலைவர்கள் (counts) பிரான்ஸ், சீலாந்து போன்ற நாடுகளின் அரசர்களுக்கு குரிசில் தலைவர்களாக இருந்தனர். பேரரசர்களுக்கு அஞ்சலி செலுத்தும் உரிமை இவர்களுக்கு உண்டு. ஆனால் உண்மையில் இந்த பிலாண்டர்கள் (flanders) முழுமை யான சுதந்திரம் உடையவர்கள். பிரான்சின் சம்பங்கே (champange) பகுதியிலுள்ள குரிசில் தலைவர் களிடையே ஒற்றுமையில்லை என்று சொல்லப் படுவது உண்டு. பர்கண்டி (Burgundy) பகுதியில் நிலப்பிரபுக்கள் கொள்கையளவில் பெருநிலப்பகுதி களுக்கு தலைவர்கள் என்று அறியப்பட்டிருந்தனர். ஆனால், அவர்களின் ஆளுகைக்குள் இருந்த பெரும் நிலப்பரப்பு கைநழுவி (slip) அவர்களின்கீழ் இயங்கிய ஓரளவு சுதந்திரத்துடன் இயங்கிய சிறு குரிசில் தலைவர்களுக்குச் சென்றன. பர்கண்டி அரசு (Kingdom of Burgandy) பெரும் நிலப்பகுதிகளை தொடர்ச்சி யாக தம் ஆளுகைக்குள் கொண்டிருந்தது. ஆனால், அவற்றுக்குள் ஒற்றுமை இல்லை. ஒன்றுக்கொன்று அரசியல் புரிந்துணர்வு இல்லை. எனவே, அவற்றின் மேலான அரசனின் அதிகாரம் என்பது ஒரு மாயையே (illussory).

எனவே அக்காலத்தின் நிலமானிய பிரான்சில் ஒருங்கிணைந்த ஓர் ஒற்றை அரசு (unitary state) இருந்தது என்று சொல்வதற்கில்லை. இறையாண்மை அரசு (sovereign state) என்ற கோட்பாட்டின் அடிப் படையில் பிரஞ்சு அரசினை ஆராய முடியுமா என்பது பொருளற்றது. அரசியல் கட்டமைப்பு எதிர் எதிர் தன்மைகள் கொண்ட கூறுகளால் உருவாக்கப் பட்ட கோபுரமாகும். மையப்படுத்தப்பட்ட ஒரு வலிமையான அதிகாரத்தால் இக்கோபுர கட்டமைப்பு உருவாக்கப்பட்டது என்று சொல்ல இயலாது.

கிபி ஏழாம் நூற்றாண்டு வரைக்கும் லம்பார்ட் (Lombard) பகுதியில் நிலவுடைமை நிலவியது. அரசர்களும், குரிசில் தலைவர்களும் ஒருவருக் கொருவர் மோதிக்கொள்கையில் அங்கு அரசியல் முறை கூறாக்கத்தின் கொள்கையில் இருந்தது என்பது உண்மை. நிலப்பிரபுக்கள் (dukes) பெரும்பாலும் பரம்பரை வாரிசுரிமையின் அடிப்படையில் அதிகாரத்தினைப் பெற்றனர். தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் தம் தம் அதிகாரத்தினை செலுத்தினர். அதேபோல் அரசர் தம் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் தம் அதிகாரத்தினை செலுத்தினார். அரசர் நிலப்பிரபுக்களை நியமிக்கும் உரிமை உடையவர். அவர்களை தம் அலுவலராகவும் அமர்த்திக்கொள்வார்.

கூறாக்க அரசமைப்பிலிருந்து ஒற்றைமுறை (unitary type) ஆட்சியமைப்பாக மாறிவரும் கட்டத்தின் சில கூறுகளை நான் கூறவிழைகிறேன். ஆனால் இவ்விரண்டுக்கும் இடையிலான சில கோட்பாட்டுக் கூறுகளையும் நாம் கவனத்திற் கொள்ளவேண்டும். கூறாக்க அரசு, ஓர் அரசு ஒற்றை அரசாக மாறிவரும் சூழலில் உருவானதன்று. ஒற்றை அரசு என்ற கருத்தாக்கம் நவீனகால முயற்சியில் உலக அளவிலான அரசு அமைப்புகளோடு தொடர்புபடுத்திப் பார்க்கப் படவேண்டிய ஒன்று. இதனை தேசியஅரசு என்ற கோட்பாட்டோடு பொருத்தலாம்; முழுமையான இறையாண்மையோடு பொருத்தமுடியாது.

ஒற்றையரசு என்பது ஒரு கூட்டமைப்பு. அதில் மையப்படுத்தப்பட்ட அரசு அதிகாரம் உண்டு. இதனை ஒரு வரையறைக்கு உட்பட்ட நிலவட்டத் திற்கும் செயல்படுத்துவது சிறப்பு ஆட்சியலுவலராவர் (specialised staff). கூறாக்க அரசு என்பதும் ஒரு கூட்டமைப்புதான். இதில், அதிகாரத்தினை செயல் படுத்துவோர் கோபுர கட்டமைப்புகளிடையேயான பிணைப்பினால் செயல்படுத்துவர். அக்கட்டமைப்பி லுள்ள ஒவ்வொரு தளத்திலும் இருக்கும் கூறாக்க அதிகாரங்களிடையேயும் பிணைப்பு இருக்கும்; வெடிப்பும் இருக்கும். ஆனால், அவர்களின் ஆட்சி வட்டத்திற்கு வெளியில் இருக்கக்கூடிய பிற குழுக் களை எதிர்க்கும்போது ஒன்றிணைவர்.

கூறாக்க அரசுகள் நெகிழும்தன்மை கொண்ட நொடியும் கட்டமைப்பு. ஆனால், இதேநிலையில் இக்கட்டமைப்பு நீண்டகாலம் இயங்கும். அவை, பிறகு ஒற்றை அரசாக வளரும். மீண்டும் கூறாக்க பூசலுக்கும் திரும்பலாம்.

கூறாக்க அமைப்பிலிருந்து ஒற்றை அமைப்பிற்கு மாறுகையில் இக்கூறுகள் தொழிற்படும். அப்போது, சடங்குநிலை அதிகாரம் தேயும், நிலமானியபூசல் ஒழியும், வரியிடும் முறை, அரச குடும்பத்தின் நிலவுடைமை, அலுவலக விரிவாக்க அமைப்பு என்பன வாரிசுரிமை நிலையிலிருந்து பொதுவான அரசியல் கட்டமைப்பாக மாறும். அதிகாரம் அலுவலர்களுக்கு மாற்றித்தரப்படும். ஆனால், அது வரையறைக்கு உட்பட்டதாகவும் தெளிவாகவும் இருக்கும்.

அரசியல் அதிகாரம் இல்லாத இடத்தில் சடங்கு நிலை மேலாண்மை ஏற்றுக்கொள்ளப்படும். கூறாக்க அரசுகள் சடங்குரீதியாக மையப்படுத்தப் பட்டுள்ளது; அரசியல்ரீதியாக அன்று. அரசியல் அதிகாரம் வலிமையாக செயல்படுத்தப்படுகையில் சடங்குமீதான மதிப்பு முக்கியத்துவம் பெறாது. மைய அதிகாரம் அடுத்தடுத்த நிலையிலுள்ள அதிகாரத்தில் உள்ளவர்களோடு இணைந்து நிலமானிய தேவைகளை வரையறுத்தால் மைய அதிகாரம் அரசியல் தளத்தில் அறிந்தேற்பினைப் பெற்றது என்று பொருள். இதுவே ஒற்றைஅரசு எழுவதற்கான முதன்மை/அடிப்படைக் கூறு. நிலவுடைமை அதிகாரம் தவறுகளை சரிசெய்யும் சட்டபூர்வ இயக்க மானால் அங்கு மைய அதிகாரம் முடங்கியுள்ளது என்று பொருள். அரசியல் அதிகாரம் அடுத்தகட்ட நிலையிலுள்ள கூறாக்க அமைப்புகளில் இருந்தன என்றும் பொருள். கூறாக்க அமைப்புகள் எப்போதுமே தம் அதிகாரத்தின் இரத்த உறவுக் கொள்கை (kinship principles) அடிப்படையில் அமைந்திருக்கும். அது இரத்த உறவுக்கருத்தியலோடு (kinship ideology) தொடர்புடையது. நிலவுடைமை ஒழிக்கப்படுவது ஒழுங்கமைக்கப்பட்ட நீதிமன்றங்களை நிறுவும். இது கூறாக்கநிலை ஒடுங்கியதனைக் காட்டும். தொடர்ந்து இது உள்ளூர் நிலையிலிருந்து நடுவன் நீதிமன்றத்திற்கு (central justice) இட்டுச்செல்கிறது.

நிலமானியமுறையில்கூட பல அரசுகள் கூறாக்க நிலையில் இருந்தன. அண்மைக்காலம்வரை மைய அதிகாரம் ஒரு சராசரி மனிதனால் தனிப்பட்ட பாதுகாப்பிற்கு உறுதி செய்யும் பொருட்டு தன் திறனை காட்டவேண்டியிருந்தது. இங்கு ஒரு மனிதனின் இரத்த உறவுடனோ மரபுரீதியான ஒரு உள்ளூர் அமைப்புடனோ (traditional local units) தம்மை இணைத்துக்கொள்ளவேண்டும். நிலமானிய அதிகாரமையங்களிலும் அதிகாரம் இரத்த உறவால் பகிரப்பட்டது. இதுவே, கூறாக்கநிலை எனலாம்.

வரியிடுதல் மைய அதிகாரத்திற்கு காரணமாகவும், தாக்கமாகவும் அமையும். இது அடுத்தடுத்த கட்டத்தி லுள்ள கூறாக்கநிலை அதிகாரத்திலிருப்பவர்கள் பொருளியல் சுதந்திரம், வளமையின் அடிப்படையில் அமைகிறது. இது நிலமானிய அமைப்புகளின் வெற்றியால் மட்டும் அமைவதில்லை. மைய அதிகாரம் நிலமானியத் தலைவர்களின் உதவி யினைச் சார்ந்து இருப்பதால் அவர்களின் அரசியல் தேவையை இவர்கள் பூர்த்தி செய்வதால் நிலப் பிரபுக்கள் இயல்பாகவே தங்களின் அதிகாரத்தினை வலுப்படுத்தி மையத்தின் அதிகாரத்தலைமையினை கைவிடுவர். இச்சேவை பணத்தினை மையப்படுத்தி அமைந்திருந்தால், மையஅதிகாரம் உடனடியாக ஆட்சிஅலுவலர் வழியே பணத்தினை கைப்பற்று வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அதன் மூலம் கூறாக்க அதிகார மையங்களுக்கு எதிரான அலுவலர்களை இயக்கும்.

கூறாக்கநிலையில் கப்பம் சடங்கு மூலமும் சட்ட சேவை மூலமும் பெறப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட தொடர்ந்து வரிகேட்கும் உரிமை இல்லை. இது மாதிரியான கப்பம் தேவையானதைவிட கூடுதலான அதிகாரத்தினை மையத்திலிருப்பவர்களுக்கு வழங்கியது. வரிவாங்குவது கோபுரத்தள அதிகார

முறையில் எப்படி ஒன்றன் கீழ் ஒன்றாக தமக்குள் அமைந்துகொள்கிறது என்பதனை பகுப்பாய்வு செய்ய வேண்டும். இதனை மையஅரசு கட்டுப்படுத்த முடியாது. கூறாக்க அமைப்புகள் வலுவிழக்கும் போது மைய அமைப்பின் பொருளியல்நிலை சீராக அமையும். அப்போது, ஒற்றை அரசு எழும். இந்த ஒற்றை அரசு மையப்படுதப்பட்ட வரிமுறையினை சார்ந்து இருந்தது. இதில் துணைப்படைதிட்டம் விலக்கப்பட்டது. நீதித்துறை உள்ளூர்த்தளத்தில் இருந்து மையம்வரை தொடர்ந்து பிணைக்கப்பட்டு வளர்ந்தது.

நிலவுடைமை அதிகார மையத்தின் முகமாக உள்ளது. வழக்கமாகவும் வாரிசு அடிப்படையிலும் உள்ள நிலவுடைமை இரத்த உறவு அடிப்படையில் அமைவது. இது கூறாக்க அரசின் தனித்த கூறு. அடித்தளத்தில் நிலவுடைமை மாறாதிருந்தாலும் மேல்நிலையில் புதியவகை நிலவுரிமை குத்தகை (fief) அறிமுகப்படுத்தப்பட்டது. மைய அதிகாரத்தின் நிலம் தொடர்பான சடங்குநிலை உறவுகள் பொருளியல், அரசியல் உரிமைகளுக்கு விரிவாக்கப்படும்போது நேரடியாகவோ, மறைமுகமாகவோ அரசின் நம்பிக்கைக்கு உரியவர்களுக்கு ஆட்சி அலுவலர் களுக்கு பாதுகாப்பும் பட்டமும் கிடைக்கிறது. மைய ஆட்சியின் அலுவலர்கள் பாதுகாப்பாக இயங்குவதற்கு வாய்ப்பு கிட்டுகிறது. ஆனால், ஆளூர் சமூகத்தில் இது சாத்தியமில்லை. ஏனெனில், அங்கு நிலத்திற்கான பொருளியல் மதிப்பு இல்லை. அங்கு நிலம் பெருமளவு உணவுஉற்பத்திக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டது; அரசியல், சடங்கு களுக்கும் கூட பயன்படுத்தபட்டது.

இங்கிலாந்தில் நார்மன்களின் ஆட்சிக்காலத்தில் அரசன் நிலமானிய முறையிலுள்ள நிலவுரிமை யினை பிறருக்கும் பிரித்தளிக்கும் உரிமையினைப் பெற்றிருந்தான். நாட்டில் பல்வேறுபகுதியிலும் இருக்கும் குரிசில்களுக்கு (vassal) நிலவுடைமை யினை வழங்கினான். இதன் மூலம் கூறாக்க அதிகாரத்தினை மட்டுப்படுத்தினான். சார்லமாங்கே பேரரசு (Charlamangne empire) முழுக்க நிலவுரிமை கொண்டிருந்ததால் பொருளாதார அடித்தளத்தில் தம் அரச கட்டமைப் பிற்கு நன்கு பயன்படுத்தினார்.

இதே போன்று, புகண்டாவில் (Buganda) மரபு முறையில் அரசு பரவலான நிலத்தினை பயன்படுத்தி யதன் மூலம் எப்படிக் கூறாக்க அரசு வாரிசுரிமையின் அடிப்படையில் அமைந்த சுதந்திரமான அதிகார மையங்கள் அரசிற்குள் இணைந்தன என்பதைப் புரிந்துகொள்வதற்கு போதுமான சான்றுகள் உள. இவ்வொற்றை அரசில் அரசரின் கீழிருந்த தலை வர்கள் அரசரால் மாறி மாறி வெவ்வேறு இடத்திற்கு நியமிக்கப்பட்டனர்.

அரசு மாற்றம் பற்றி மேற்சொல்லப்பட்ட கூறுகள் பொதுவாக சொல்வதானால் வளர்ந்து விரியும் அலுவல் அமைப்பிற்கு (bureaucratic element) சாதகமான ஒன்று எனலாம். இந்தவகை அலுவலமைப்பு வாரிசுரிமையற்றது. மைய அதிகாரத்தினைக் கூறாக்க வட்டார எல்லைக் குள்ளிருந்து வெளியேற்றுகிறது. இது தெளிவான நீதிபரிபாலனம் மூலமாகவும் ஒற்றை அதிகாரக் கட்டமைப்பு மூலமும் உருவாக்கப்பட்டது.

**Works consulted by Aidan W.Southall**


1. Cox, H.H. *The Growth and Expansion of the Buganda* in **The Uganda Journal**, Vol.14:2.
2. Durkhiem, E.1947. The Division of Labour in Society, tr.by G.Simpson.
3. Gerth and C.Wright Mills, 1947. From Max Weber.
4. Gluckman, M.1951. *The Lozi of Barotsland* in **The Seven Tribes of British Central Africa**.
5. Halphen, L.1922. The Cambridge Medieval History, Vol.III.
6. Hodgkin, T.1948. The Political History of England, Vol.I.
7. Nadel, SF.1942. A Black Byzantium.
8. Oberg, K and Maz Gluckman, African Political Systems.
9. Vinogradoff, P.1913. The Cambridge Medieval History, Vol.II.





**வாசகர்களுக்கு**

**2019**

**புத்தாண்டு**


**மற்றும்**

**பொங்கல் நல்வாழ்த்துகளை**

**'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்'**

**தெரிவித்துக் கொள்கிறது**

# எஸ்.வி.ராஜதுரையின் இரண்டு புதிய நூல்கள்




எஸ்.வி.ராஜதுரை தமது கட்டுரைகளினூடாக இந்திய, அல்ஜீரிய, ஆங்கில, பிரெஞ்சு, இத்தாலிய, தென்னமெரிக்க கலை இலக்கியப் படைப்பாளிகளுடன் நம்மை உறவாட வைக்கிறார். இந்தோனீஷாவின் மாபெரும் இலக்கியப் படைப்பாளி ப்ரமோதியா ஆனந்த தூர் பற்றிய விரிவான அறிமுகம் தமிழ் வாசகர்களுக்கு முதன்முறையாகக் கிடைக்கச் செய்கிறார். மதவாத, சாதிய, பாலின, வர்க்கப் பிரச்சினைகளை மார்க்ஸிய - அம்பேத்கரிய - பெரியாரிய வெளிச்சத்தில் ஆழமான பகுப்பாய்வுக்கு உட்படுத்துகிறார். காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்வைப் பெரியார் தமக்கே உரிய அசாதாரணமான மனிதநேய, சாதி - எதிர்ப்புக் கண்ணோட்டத்திலிருந்து விளக்கியதைக் கோடிட்டுக் காட்டுகிறார்.





கார்ல் மார்க்ஸின் அழகியல், அறவியல், அரசியல் பரிமாணங்களைக் கூறும் கட்டுரைகள்; உலகப் புகழ்பெற்ற இலக்கிய ஆளுமைகளான ஆன்டன் செகோவ், ஆல்பெர் காம்யு, எலினா ஃபெரரான்ட்டெ, மேரி ஷெல்லி, பெர்டோல்ட் ஃப்ரெஹ்ட், உம்பர்த்தொ எக்கோ, அரபு இலக்கிய உலகில் தனி முத்திரை பதித்துள்ள அஹ்மெத் ஸாடவி ஆகியோரின் படைப்புகளைப் பற்றிய விரிவான மதிப்பீடுகள்; ‘சர்வதேச’ கீதத்தின் வரலாற்றுப் பின்னணி; இனவாதத்திற்கும் ஆணாதிக்கத்திற்கும் வர்க்கச் சுரண்டலுக்கும் எதிராகப் போராடிய ஆளுமைகளைப் பற்றிய குறிப்புகள்; பெரியாரின் மேதைமை குறித்த தகவல்கள் என இருபது கட்டுரைகள்.

## சாகித்திய அகாதெமி

443, குணா வளாகம், 2ம் தளம் அண்ணா சாலை
தேனாம்பேட்டை சென்னை - 600 018
போன்: 044 - 2435 4815/2431 1741




என் தலைமாட்டில்...
₹ 170/-



ஓடை
₹ 260/-




சிறுபான்மை சமூகக் கதைகள் - இஸ்லாம்
₹ 200/-




இணைந்த மனம்
₹ 395/-




சா. சோவின் தேர்ந்தெடுத்த சிறுகதைகள்
₹ 195/-




ஸ்ரீ இராமானுசர்
₹ 50/-



தமிழ் இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகள்
₹ 255/-




கன்னட தலித் இலக்கியம்
₹ 260/-




இராமகிருஷ்ண பரமஹம்சர்
₹ 50/-



பிரேம்சந்த்
₹ 50/-



ஞானதேவர்
₹ 50/-



அகிலன்
₹ 50/-

e-mail: chennaioffice@sahitya-akademi.gov.in



# ஆளுமைகளை உருவாக்கிய ஆளுமை

இரா.அறவேந்தன்

புதுச்சேரி முத்தியால்பேட்டையில் அழகிய பெரிய வீடு. வாசல் அருகே தலையில் தொப்பி, தடித்த பேண்ட் சட்டையுடன் ஓர் உருவம் நின்று கொண்டு இருந்தது. கடந்து சென்ற கிராமத்து இளைஞனின் மனம் வாட்சுமேனாக அர்த்தப்படுத்திக் கொண்டது. அடுத்தநாள் அதே உருவம் வகுப்பறையில் நுழைகின்றது. சிறு கடிகாரத்தை அருகில் உள்ள நாற்காலியில் வைத்து, கரகரத்த குரலில் பேசுகிறது 'நீங்க தமிழ்ல பேசுங்க இல்ல ஆங்கிலத்ல பேசுங்க இரண்டையும் கலந்து பேசாதிங்க' என்ற அறிவுறுத்தலின் ஊடே டார்வின் என்றது. மனிதக் குரங்கு, நியாண்டர்தல், அமிபா, ஒரு செல் உயிர், நாம் வந்தவழி என விளக்கங்களுடன் அன்றைய வகுப்பு நிறைவு பெற்றது. மனித இனங்கள் என்ற புத்தகம் அளிக்கப்பெற்றது. ஒன்றும் புரியவில்லை. இவர் யார்? எதற்கு வகுப்பிற்கு வந்தார்? என்ன பேசுகிறார்? எதற்காகப் பேசுகிறார்? என்ற வினாக்கள் அடுக்கடுக்காக எழுந்தன அந்த இளைஞனுக்குள். எனினும், பேச்சில் ஒரு தெளிவு உள்ளதே, என்ன செய்வது என்று அவன் மனம் அலசிற்று. அடுத்த நாள் தெரிந்தது அவர் எடுத்த பாடம் 'தமிழக வரலாறும் பண்பாடும்' என்று. இப்பாடத்தை இரண்டாகப் பகுத்துக்கொண்டார். ஒரு செல் உயிரின் தோற்றம் முதல் மனித இன வகைப்பாடு வரை உள்ள வரலாற்றை அவரே நடத்தினார். கே.கே.பிள்ளையின் 'தமிழக வரலாறும் பண்பாடும்' என்ற நூலைப் படித்துத் தேர்வு எழுதுமாறு பணித்தார். ஆம், புதுவைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மாணவர்களுக்குச் செவ்வாய், வியாழன் தோறும் முதல் ஒரு மணி நேரம் தேர்வு நிகழும். மாத இறுதியில் மூன்றுமணி நேரத் தேர்வு ஒருவாரம் தொடர்ந்து நிகழும். ஆசிரியர்கள் விடைத் தாள்களை எழுத்தெண்ணித் திருத்துவர். மதிப்பீடு செய்வதைத் தவிர்ப்பர். மதிப்பெண்கள் தகவல் பலகையில் ஒருவாரகாலத்திற்குள் காட்சி பெறும்; உயர் மதிப்பெண்கள் ரோஜா நிற மையால் வட்டமிடப்பெற்றுப் பெருமிதம் பேசும். ஆம், தகவல் பலகையை அவர் அறிவிப்புப் பலகையாக மட்டுமின்றி ஊக்க மொழிபேசும் மௌன மனிதனாக மாற்றி இருந்தார்.

வகுப்புகளைத் தொடர்ந்து புதன் கிழமை மாலை எல்லோரும் மாடி கீற்றுக் கொட்டகையில் கூடினர். மாணாக்கம் என்றனர். ஆய்வாளர் ஒருவர் தலைமை தாங்கினார். ஆய்வாளர், எம்.பில் ஆய்வாளர் என இருவர் கட்டுரை வாசித்தனர். பார்வையாளர் பகுதியில் 30,40 பேர். வினாக்கள் கடுமையாக இருந்தன. விடைகளும் அளிக்கப் பெற்றன. அடுத்த நாள் வியாழக்கிழமை மாலையும் அதேபோல் கூடினர். இக்கூட்டத்தை அறிவரங்கம் என்றனர்.

இதில் ஆசிரியர் தலைமை தாங்கினார். ஆய்வாளரும் ஆசிரியரும் கட்டுரை வாசித்தனர். மாணாக்கம், அறிவரங்கம் இரண்டிலும் வரவேற்புரை, நன்றியுரை எனும் சம்பிர்தாயங்கள் இருந்தன. இதே போன்ற மாலை நேரத்தில் திங்கள்கிழமை என்றால் ஆங்கிலம் கற்பித்தல். அடுத்தடுத்த நாள்களில் நற்றமிழ் நடைப் பயிற்சி என்று ஒரு புதிய வாரக் கூட்டம் முளைத்தது. நற்றமிழ் அளிப்பில் அவரே பயிற்றுநராக இருந்தார். ஆனால் ஒரு வேறுபாடு. வகுப்பறை அறிவு அளிக்கும் அறிவுறுத்தலாக அமைய, நற்றமிழ்ப் பயிற்சி கண் திறக்கும் தாய்மைத்துவமாக அமைந்தது. எப்படி ஒருவரே இப்படி என்று மீண்டும் குழம்பிப் போனான் அந்த கிராமத்து இளைஞன். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. பாடம் நடத்துவதை விட்டு விட்டுக் காலையில் தேர்வு, மாலையில் கூட்டம் இது என்ன வினோதம் என்று குழம்பினான். கல்வி என்பது நான் உணர்வைத் தவிர்த்து, நாம் உணர்வை அளிக்க வேண்டும்; பரந்துபட்ட புரிதலை வழங்க வேண்டும். பாடத்திட்ட அரங்கேற்றம் மட்டுமன்று கல்வி என்ற தெளிவுபெறச் சில மாதங்கள் ஆகிற்று அந்த இளைஞனுக்கு.

ஒருவார காலத்தில் ‘இந்த வகுப்பறைச் சாவிய நீங்க வச்சுக்கலாம், எப்ப வேணாலும் வரலாம், படிக்கலாம், நீங்க ஒரு தகரப் பெட்டியில பாடத் திட்டம் தொடர்பான புத்தகங்கள நூலகத்ல இருந்து எடுத்து வச்சுக்குங்க, நீங்களே சுழற்சி முறையில படிக்கப் பயன்படுத்துங்க’ என்று அவர் பேசிக் கொண்டே சென்றார். மீண்டும் குழம்பினான் இளைஞன். இது வீடா? துறையா? ஆம்,போதிய இருக்கை, மின்சார வசதி இல்லாச் சூழலில் வாழும் மாணவர்க்குப் பயிலும் நிறுவனங்கள்தாம் வீடு, தெரு விளக்கு.

சமுகவியல், மானுடவியல், உளவியல், இலக்கியம் கற்பிக்கும் நெறிமுறைகள், கணினியியல், தமிழ்ச் சுருக்கெழுத்து எனப் பல்துறை அறிவுடன் இலக்கிய இலக்கணங்களைக் கற்பதற்கு ஏற்ற பாடத்திட்டம் வகுக்கப்பெற்று இருந்தது. ஒவ்வொரு பருவ இறுதியிலும் மாணவரிடம் பெறப்பட்ட மந்தன அறிக்கை அடிப்படையில் பாடத்திட்டம் உடனடியாக மாற்றி அமைக்கப்பெற்றது. பிற மொழி இலக்கிய வரலாறு எனும் தாள் 30 மொழிகள், 15 மொழிகள், 7 மொழிகள் என இளைத்து வந்ததற்கு மாணாக்கரின் கருத்தே அடிப்படை. ஒரு கட்டத்தில் கணினியியல் கைவிடப் பெற்றுப் பொருளதிகாரம் வழக்குப் பெற்றது. எனினும் வழக்கமான கற்றல் கற்பித்தல் முறையிலிருந்து மாறுபட்ட அணுகுமுறைகள் தொடர்ந்தன. திரைப்படத் திறனாய்வும், இதழ்த் திறனாய்வும் சிறப்பு அறிஞர்கள் வழிக் கற்பிக்கப் பெற்றன. ஆளுமை மேம்பாட்டிற்காக எண்ணற்ற வாழ்க்கை வரலாறுகள் அறிமுகம் செய்யப்பெற்றன. எம்.எஸ். உதயமூர்த்தி முதலானவர் நூல்கள் படிக்க வைக்கப்பெற்றன. முதுகலை மாணவர்களுக்கான வகுப்புக் கருத்தரங்கமும், திட்டக்கட்டுரை அளிப்பும் மிகுந்த கவனத்துடன் நடைமுறைப்படுத்தப் பெற்றன.

ஆர்வத்தோடு பயிலும் மாணவர் தனி அடை யாளம் காணப்பெற்றனர். தேடல், முடியும் என ஆய்வாளர் எழுத்துரைகள் நூல் வடிவம் பெறு கையில், ஆசிரியர் மாணவர் எனும் கூட்டு முயற்சியும், கூட்டு அங்கீகாரமும் வழக்குப்படுத்தப் பெற்றன. இதனால் நூலாக்கம் எனும் விதை ஆய்வாளர் மனத்துள் வேர்விட்டது; கணினி அச்சு வழக்குப் பெறா அந்தக் காலத்திலேயே ஆய்வாளர்கள் எல்லாம் நூலாசிரியர் ஆயினர்.

வாசிப்பது, எழுதுவது, நூலாக்குவது எனும் நேர்கோட்டுச் செயல் திட்டம், பாடத்திட்டம் இல்லாப் பாடமாக்கப் பெற்றிருந்தது. தமிழாசிரியர் என்றால் மேடையில் பேசுவர், கவிதை எழுதுவர் என்ற புரிதல் கொண்ட அந்த இளைஞனுக்குள் மீண்டும் குழப்பம் உருவாயிற்று. இது என்ன தமிழ் மாணவர்களை ஆங்கில நூல் வாசிக்கச்சொல்வது என்ற வினாவும் எழுந்தது. இவற்றுக்கான விடை வாயில்கள் திறக்கப்பெற்றன நண்பர்கள்வழி.

பாதையாகும் பாறைகள் என்றொரு புத்தகம். அதில், ஓர் ஏழையின் பணக்காரப் பயணம் என்றொரு கட்டுரை. இதனை வாசித்தபோது அவரது நடை உடை பாவனைகளுக்கான, செயல் திட்டங்களுக்கான பின்புலத்தை அறிய முடிந்தது அந்த இளைஞனால். மேலும், ஒற்றைக் காசு இல்லாதவரும் தம் அறிவார்ந்த கடும் உழைப்பால் அயல் நாட்டு அறிஞரின் இரத்தினக் கம்பள வரவேற்பைப் பெற இயலும் என்ற தெளிவையும் தந்தது. அவன் மெல்லமெல்ல மற்றொரு உலகிற்குப் பயணிக்கத் தொடங்கினான்.

பண்பாட்டுப் படையெடுப்புகள், அற்றைநாட் காதலும் வீரமும், பாம்பு வழிபாடு, மரவழிபாடு என அவர்தம் நூல்கள் ஒவ்வொன்றாக அந்த இளைஞனுக்கு அறிமுகமாயின. வாசிக்கின்றான் புரியவில்லை. ஆனால் வாசிக்காமல் இருக்கவும் முடியவில்லை. அவர்தம் வகுப்பறைச் சொற்கள், ஊக்கமொழிகள் அவனை விரட்டுகின்றன; விழிக்க வைக்கின்றன; தூங்கவிடவில்லை. காலை 8 முதல் இரவு 8 வரை துறையில் இருத்தல், படித்தல், விடுமுறை நாட்களை வேலை நாட்களாக்கிக் கொள்ளுதல் எனும் அவர்தம் வாழ்வியல் முறைகள் அவனுள் மெல்லமெல்லக் கரையத் தொடங்கின.

ஆப்பிரிக்க - தமிழ்ச்சமூகங்களுக்கிடையிலான உறவைக் கண்டறிந்தவர் தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியத்தையும் மானுடவியல் நோக்கில் ஆராய்ந்தவர். சமண அறிஞர் தமிழ்ப்பணியைக் கவனப்படுத்தியவர். நாட்டுப்புறவியல், அறிவியல் தமிழ்த் துறைகளில் நூல்களை வெளியிட்டுத் தொடங்கியவர் என்ற அவர்தம் அறிவார்ந்த முயற்சிகள் எல்லாம் மெல்லமெல்ல அந்த இளஞனுக்குள் கால்கொள்ளத் தொடங்கின. இவற்றால் அவனையும் அறியாமல் அவன் மனத்துள் புதிய கடவுள் தன்மை ஒன்று உருவாகிவருவதை உணர முடிந்தது. அதன் உடன் நிகழ்வாக அவனுள் விழுதுவிட்டு இருந்த மரபுசார் கடவுள் தன்மையின் வேர் செல்லரிக்கத் தொடங்கிற்று. இது பிற்காலத்தில் தமிழ் வழி திருமணத்தில் கொண்டு வந்து நிறுத்திற்று.

அவரிடம் பேச வேண்டும், நெருங்கிப் பழக வேண்டும் என்று விரும்பிற்று இளைஞனின் மனம். ஆனால் அவர்தம் கம்பீரமும், வகுப்பறை இல்லாச் சூழலில் அவரது மௌன மொழியும் அவனை அவரிடம் இருந்து விலக்கியே வைத்தன. காலம் உருண்டோடிற்று. மொழி கற்பித்தல், ஆய்வுக் கொத்து எனும் நூல்கள் அவனுக்குக் கிடைத்தன. இரண்டிலும் அவர் பதிவிட்டிருந்த கருத்துகள் அவர் எதிர்கொண்ட பச்சையப்பன், இலயோலா கல்லூரிப் பணிக்காலச் சூழலை அறிய வைத்தன. கிருத்துவ நிறுவனம் அரசு ஊதியத்துடன் கூடுதல் ஊதியம் அளித்து அவரை அரவணைத்துக்கொண்ட பாங்கு இளைஞனுக்குள் கிளர்ச்சியை உருவாக்கிற்று. சமயங்களைவிடச் சான்றோர் அணுகுமுறைகளே முதன்மை என்ற தெளிவை அவனுள் எழுப்பிற்று.

மேலும் மேலும் காலம் உருண்டோட அவருடன் பயணிக்கும் அரிய வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது. அவருடன் பழக எவை எல்லாம் தடையாக அமைந்தனவோ, அவற்றின் மாற்று வடிவங்களான காக்கி வேட்டி, எளிமை, அன்பு மொழி, அக்கறை உணர்வு அவர்தம் அடிப்படை களாக அமைந்துள்ளதை அவன் காலப்போக்கில் கண்டு கொண்டான். தவறுகளைக் குத்திக்காட்டாத அவர்தம் இயல்பு அவனை வெகுவாகக் கவர்ந்தது. கடனில் வீழ்ந்து கிடந்த இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தை மீட்டெடுத்து அடுத்த கட்டத்திற்குக் கொண்டு சென்றபோது மூத்த அறிஞர் களோடு அவர் மேற்கொண்ட தொடர்பு, மன்றத்தில் நிதி சேர்ந்ததும் உழைப்பவர் மன்றத்தில் புறக்கணிக்கப் பெற்றபோது ஆர் அமைப்பை உருவாக்கியது, திருவள்ளுவம் நூல் தொடர்பான சர்ச்சையை அறமுறையில் எதிர்கொண்டது எனப் பலவற்றை அருகிருந்து கண்ட அவ்விளைஞனின் மனவெளி அதிகரித்தது; நீரே நெருப்பானாலும் நிமிர்ந்து நிற்றல் வேண்டும் என்ற அவர்தம் நாட்குறிப்புமொழி அவனுக்கு நாள் வேதமாயிற்று. துணைவேந்தர் பணிக்காலத்தில் மனோ கல்லூரிகள், சமுதாயக் கல்லூரிகள், சிறைக் கைதிகளுக்குத் தனிக் கல்வி வசதி, பல்கலைக்கழகம் பெரிய அளவில் புத்தகக் கண்காட்சி நடத்தியது, கல்லூரி ஆசிரியர்களையும் ஆய்வரங்குகளில் பங்கேற்க ஆய்வரங்கம் அமைத்தது என அவர்தம் செயல்திட்டம் அமைந்தபோதும் அவர்க்குக் கடும் எதிர்ப்பும் இருந்தது. ஆனால் எதிர்க்கப் பெற்றவை சில ஆண்டு காலத்தில் அங்கீகரிக்கப் பெற்றதையும் அந்த இளைஞன் ஒருங்கே கண்டான். மனோ கல்லூரிகள் அன்று எதிர்க்கப் பெற்றன. பின்னர்ப் பெரு வரவேற்பைப் பெற்றுள்ளன. புதுவைத் தமிழ்த்துறையில் சிலர் சில காரணங்களுக்காக அவரை எதிர்த்தனர் அன்று. இன்று அதே தமிழ்த்துறை அறிவரங்கம் நூல்வழி அங்கீகரித்துப் போற்றுகின்றது. இவை நிர்வாகம் என்பது சமகாலத் தேவைக்கு மட்டுமன்று; தொலை நோக்குப் பார்வையுடன் கூடியது. பொருள் ஈட்டுவது மட்டுமன்று; கடைநிலை மனிதனையும் கவனத்தில் கொண்டது என்ற புரிதலையும் இளைஞனுக்குள் உருவாக்கின. அவர் மாணாக்கப் பருவத்தில் இந்தி எதிர்ப்பில் தீவிரமாகப் பணியாற்றியதன் கனல், துணைவேந்தர் பணிக்காலத்தில் ஈழத்தமிழர்களுக்காக அறிக்கையும், கட்டுரையும் எழுத வைத்தது.

விருப்ப ஓய்வுக்குப் பின்னர் எழுத்துப்பணி செயல் திட்டமாக அற இலக்கியக்களஞ்சிய உருவாக்கமும், தமிழ் மக்கள் வரலாற்றுத் தொகுதிகளை வெளியிடுதலும் அமைந்தன. பள்ளிப் பருவம் முதல் நூலகத்திற்குச் சென்று வாசிக்கத் தொடங்கியவர்; சுமார் ஒரு இலட்சம் நூல்களுக்குமேல் வாசித்தவர், விலை கொடுத்து வாங்கி வாசித்த நூல்கள் 15 ஆயிரத்தைக் கனடா நாட்டு நூலகத்திற்கு அளித்தவர், 50 ஆண்டு கால எல்லையில் 114 நூல்களை எழுதியவர் என்பன எல்லாம் இன்று சரித்திரம் ஆகிவிட்டன. கடைக் கோடி கிராமத்தில் சிறு தேநீர்க் கடை வியாபாரியின் எட்டாவது மகனாகப் பிறந்து, சென்னைப் பெரு நகரத்தில் வாசிக்க வாங்க, சிந்திக்க வாங்க என்று கூவிக்கூவி அழைத்து, அறிஞர்களை அழைத்து விருது வழங்கிச் சிறப்பித்து வாழ்ந்தவரின் இறுதிப் பயணமும் மாணவர்-நண்பர்-உறவினர் எனும் நேர் கோட்டிலேயே அமைந்தது. ஆம், அவர் நல்ல ஆசிரியர்களால் உருவாக்கப்பெற்ற நல்ல மாணவர். நல்ல மாணவர்களை உருவாக்கிய நல்ல ஆசிரியர். வரலாற்றை முயன்று படித்தவர், தமிழ் மக்கள் வரலாற்றை எழுதியவர், இன்று வரலாறாகிவிட்டார் க.ப.அறவாணன் (1941 - 2018). ●



# நூலகம் இன்றும்... இனியும்...

சுகுமாரன்

இன்று மக்களின் புறக்கணிப்புக்கு அதிகம் உள்ளாகி இருக்கும் இடம் எதுவென்று கேட்டால் அது பொது நூலகம் என்றுதான் பதிலளிக்க முடியும். நூலகத்தைத் தேடி மக்கள் போகாவிட்டாலும் மக்களைத் தேடி நூலகம் போகும் என்று தமிழ் நாட்டின் 32 மாவட்டங்களுக்கு 'நடமாடும் நூலகம்' என்ற திட்டத்தை கல்விஅமைச்சர் அறிவித்திருக்கிறார். இது நல்ல செய்தியே!

நூலகத்தின் அமைவிடம் முக்கியம் என்று தோன்றுகிறது, மக்கள் அதிகமாகப் புழங்குமிடத்தில் நூலகம் அமைந்தால் அது அவர்கள் செல்வதற்கு வசதியாக இருக்கும். அமெரிக்காவில் பெரும்பாலும் நூலகம், குழந்தைகள் அதிகம் வரும் பூங்கா, விளையாடுமிடம் ஆகியவற்றின் அருகில் அமைந் துள்ளது. காரணம் அவர்கள் நூலகத்தை குழந்தை களுக்குரியதாகக் கருதுகிறார்கள்.

நூலகம் குழந்தைகளுக்குரியது என்ற எண்ணமே நமக்கு இல்லை என்று நினைக்கிறேன். நம்முடைய பொது நூலகங்களில் சிறுவர் பகுதி என்ற ஒன்று இல்லை என்பதிலிருந்தே இதைப் புரிந்துகொள்ள முடியும். தமிழ்நாடு முழுவதற்கும் சிறுவர் பகுதி உள்ள நூலகமாக 50 வருடங்களுக்கு முன் ஒன்றே ஒன்று அண்ணா சாலையிலுள்ள தேவநேயப் பாவாணர் நூலகம் (மத்திய நூலகம்) இருந்தது. ஆனால் இன்று இல்லை. கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகம் சிறுவர் பகுதி உள்ள நூலகமாக இருக்கிறது. அது என்னவோ, சிறுவர் பகுதி உள்ள நூலகமாக ஒன்றே ஒன்றுதான் இருக்க வேண்டுமென்று யாராவது சாபம் போட்டிருக்கிறார்களா என்பது தெரியவில்லை!

பொது நூலகத்தில் சிறுவர் பகுதிதான் இல்லையே தவிர சிறுவர் நூல்கள் இருக்கின்றன. குழந்தை இலக்கிய நூல் தடை சொல்லப்படாமல் வாங்கப்பட வேண்டுமென்ற விதி நூலகத் துறைக்கு இருப்பதால் குழந்தை இலக்கியத்திற்கு தகுதி யில்லாத நூல்கள் நிறைய இருக்கின்றன.

மேலும், நூலகரின் அக்கறையைப் பொறுத்து தான் சிறுவர் நூல்கள் தனி அலமாரிகளில் அடுக்கப் பட்டிருக்கும். இல்லையென்றால் அவியல் மாதிரி பெரியவர்களுக்கான நூல்களோடு கலந்து கிடக்கும்.

நமது வருங்காலமாக விளங்குகிற குழந்தைகளே நமது செல்வமாகும். அவர்கள் அறிவும் திறமையும் பெற்று விளங்கிட அறிவுக் கோவிலாக இருக்கின்ற நூலகமே உதவிட முடியும். அதனால் நமது பொது நூலகம் இன்றுள்ள நிலைமையில் தொடர்ந்திட முடியாது. அதில் மாற்றங்களைக் கொண்டு வருவது அவசியமாகயிருக்கிறது.

நூலகத்தில் சிறுவர் பகுதி ஏற்படுத்துவதின் மூலம் நிறைய மாற்றங்களைக் கொண்டு வர முடியும். அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் சிறுவர் பகுதி சிறப்பாக உள்ளது. அப்பகுதிக்கென்று தனி நூலகர் இருக்கிறார். குறைந்தபட்சம் முதலில் மாவட்ட நூலகங்களிலாவது சிறுவர் பகுதி ஏற்படுத்தி தனி நூலகர் போட வேண்டும். தொடர்ந்து முழு நேர கிளை நூலகங்கள், பகுதி நேர நூலகங்களில் சிறுவர் பகுதி ஏற்படுத்த வேண்டும்.

வண்டுகளை வரவழைக்க மலர்கள் கூட பல வண்ணங்களில் மணங்களில் இருக்கின்றன. இது இயற்கை. நாம் ஏன் இயற்கையை மீற வேண்டும்? சிறுவர் பகுதி வாண்டுகளான குழந்தைகளைக் கவரும் விதத்தில் இருக்க வேண்டும். 3 முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகள் மழலைகள். அவர்களைக் கவரும் விதத்தில் பலவித அலங்காரங்கள், இருக்கை வசதிகள், அலமாரி வசதிகள் இருக்க வேண்டும்.

இன்று நமது நூலகங்களில் இடவசதி, புத்தகங்களை அடுக்குவதற்கான வசதிகள் இல்லை. மாட்டுக் கொட்டகையில் மாடுகளை அடைப்பது போல் புத்தகங்களைத் திணித்து வைத்திருக்கிறோம். மழலையர்களுக்கான புத்தகங்கள் கெட்டி அட்டையுடன் பெரிய அளவுகளில் வெளியிடப்படுகின்றன. அம்மாதிரி புத்தகங்களை நேராக வைக்கக்கூட நமது நூலக புத்தக அலமாரி இடந்தரவில்லை. படுக்க வைக்கப்படுகின்றன. அப்புத்தகங்கள் நிம்மதியாகத் தூங்குகின்றன.

குழந்தைகளை நூலகத்திற்கு வரவழைப்பது என்பதும், வந்த குழந்தைகள் நூல்களைப் பயன்படுத்துவது என்பதும் முக்கியமான விஷயம்.

புத்தகங்கள் வாங்குவதும் வாங்கிய புத்தகங்களை இரவல் கொடுத்து வாங்கி வைப்பதும் மட்டுமே நூலகரின் வேலை என்று நினைத்தால் தயவு செய்து அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்.

நூலகத்தை உயிரோட்டமாக வைத்திருக்க வேண்டிய கடமை நூலகருக்கே! அவர் பேசும் புத்தகங்களை ஊமையாக்கி விடக்கூடாது.

வளரும் தலைமுறையினர் குழந்தைகள், அவர்களுக்கு முறையான நூல்களை அறிமுகப்படுத்த வேண்டும். புத்தகக் கடலில் குழந்தைகளை தள்ளி விடலாம். அவர்கள் நீந்துவதற்கு பயிற்சிகள் வேண்டும் அல்லவா!

புத்தகங்களை கதை, பாடல், கட்டுரை, நாவல், நாடகம் என்று பிரிவு வாரியாக கண்டிப்பாக அடுக்கி வைக்கப்பட வேண்டும். இன்று திக்குத் தெரியாத காட்டிற்குள் நுழைந்தது போல் நூலகம் இருக்கிறது.

சிறந்த புத்தகங்களின் அறிமுகம் குழந்தைகளுக்கு அவசியம். அவற்றைத் தனியாக அடுக்கி வைக்கலாம். புதிய புத்தகங்களின் வரவை எப்படித் தெரிந்து கொள்வது? அவற்றைத் தனித் தட்டுகளில் வைக்கலாம்.

அமெரிக்க நூலகங்களில் இம்மாத எழுத்தாளர் என்று எழுத்தாளரின் புகைப்படத்துடன் அவர் எழுதிய புத்தகங்கள் தனி மேசையில் அடுக்கி வைக்கப்படுகிறது. இதை ஒவ்வொரு மாதமும் செய்கிறார்கள். குழந்தைகள் இம்மாதம் படிக்க வேண்டிய புத்தகங்கள் என்று சிறு வெளியீடு நூலகங்களில் பார்வைக்கு இருக்கிறது. அதுவும் வயது வாரியாக அவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நம் ஊர் நூலகங்களில் குழந்தைகளின் கைகளுக்கு எட்டாத உயரத்தில் புத்தகங்களை அடுக்கி வைத்திருக்கிறோம். புத்தகங்களை குழந்தைகளோடு உறவாடவிட வேண்டும். புத்தகம் தொடர்பான நிகழ்ச்சிகளை நடத்துவதின் மூலம் இந்த உறவை ஏற்படுத்த முடியும்.

நூலகங்களில் குழந்தைகளுக்காகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய கதை நேரம் (Story Time) உறவுப் பாலமாகும். கதை நேரம் என்பது குழந்தைகளுக்குக் கதை சொல்லும் நிகழ்ச்சி (Story Telling) ஆகும். குழந்தைகளை நூலகத்திற்கு வரவழைப்பதற்கும் புத்தகங்களோடு அவர்களுக்கு உறவை ஏற்படுத்துவதற்கும் இதைவிடச் சிறந்த உத்தி வேறெதுவும் இருக்க முடியாது. அமெரிக்க நூலகங்களில் கதை நேரம் வெகு சிறப்பாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. நமக்கும் குழந்தைகளுக்கு நூலகங்களில் கதை சொல்லுதல் பற்றிய விழிப்புணர்ச்சி சமீப காலமாக ஏற்பட்டிருக்கிறது.

அண்ணா நூற்றாண்டு நூலக சிறுவர் பகுதியில் கதை சொல்லுதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. சென்னையிலுள்ள குறிப்பிட்ட சில கிளை நூலகங்களில் நூலகத் துறை ஏற்பாட்டின் பேரில் கதை சொல்லுதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இது தமிழ்நாடு முழுவதும் விரிவுபெற வேண்டும்.

புத்தக வாசிப்பு (Book Reading) எனும் நிகழ்ச்சி குழந்தைகளை வாசிப்புக்கு பயிற்றுவிக்கிறது.

எழுத்தாளர் சந்திப்பு என்ற நிகழ்ச்சி அமெரிக்க நூலகங்களில் நடைபெறுகிறது. நம்மூர் நூலகங்களிலும் எழுத்தாளர்கள் விழாக்களுக்கு அழைக்கப்படுகிறார்கள். வாசகர் வட்ட நிகழ்ச்சிக்கோ அல்லது உலக புத்தகத் தின விழாவிற்கோ வருகிறார்கள்.

சிறுவர் பகுதியில் நடைபெறும் குழந்தை எழுத்தாளர் சந்திப்பு பற்றியே நான் குறிப்பிடுகிறேன்.

குழந்தை எழுத்தாளர் தன்னுடைய படைப்பு களைப் பற்றி குழந்தைகளிடம் உரையாடுவது என்பது இருவருக்கும் பயனளிக்கும் விஷயமாகும்.

மழலைக் கவிஞர் குழ.கதிரேசன் அவர்கள் சாகித்ய அகடமியின் பால புரஸ்கார் விருது பெற்ற போது அவரைக் கூப்பிட்டு குன்றத்தூர் நூலகத்தில் (காஞ்சிபுரம் மாவட்டம்) குழந்தைகளுக்கு மத்தியில் அவரைப் பாராட்டினோம். அது அவரைப் பெரிதும் உற்சாகப்படுத்தியது. தன்னுடைய பாடல்களை குழந்தைகளுக்கு பாடிக் காட்டினார். படைப்பாளரிட மிருந்து பாடக் கேட்ட பெரும்பேறை குழந்தைகள் அனுபவித்தனர். இந்த அரிய நிகழ்வுக்குக் காரண மாக அமைந்தது குன்றத்தூர் நூலகத்தில் இருந்த சிறுவர் பகுதிதான்.

நூலகத்தில் அமையும் சிறுவர் பகுதி என்பது நூலகத்தின் இன்றைய முகத்தை மாற்றி அமைக்கிறது.

நூலகத்திற்கும் குழந்தைகளுக்கும் தொடர்பை ஏற்படுத்துவதற்காக அரசுப் பள்ளி மாணவர்களை நூலக உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டுமென்று உத்தரவு இடுகிறது. நூலகத்தின் செயல்பாடுகள் மாற்றியமைக்கப்படாமல் உத்தரவுகளால் என்ன பயன் விளைய முடியும்? அரசின் உத்தரவை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக நூலகர் ஒரு கொடை வள்ளலைப் பிடித்து மாணவர்களை வெறும் சந்தாதாரர்களாக்கி விடுவார். உத்தரவு நிறைவேற்றப்பட்டது. ஆமென்!

ஆகா! நூலகத்திலுள்ள ஒவ்வொரு புத்தகமும் ஓர் உயிர் அல்லவா! வாழ்க்கையின் ஆயிரம் கதை களைப் பேசும் ஜீவனுள்ளவை அவை. ஒரு புத்தகம் என்பது படைப்பாளியின் ரத்தமும் சதையும் ஆன உணர்வின் உருவம் என்று மதிக்கப்படும் போதே சம்பிரதாயங்கள் அகலும்.

புத்தகம் பற்றிய உயரிய மதிப்பீட்டை குழந்தை களிடம் உருவாக்க வேண்டும். அத்தகைய மதிப்பீட்டை ஏற்படுத்தக்கூடிய செயல்பாடுகள் நூலகத்தில் வேண்டும். கல்வி அல்லது அறிவின் நோக்கம் குழந்தைகளிடம் படைப்பாற்றலை வளர்ப்பதுதான். குழந்தைகளிடம் படைப்பாற்றலை உருவாக்கும் திறன் புத்தகங்களிடமே உள்ளது.

இந்த நேரத்தில் புத்தகங்களைப் பற்றி குறிப்பிட வேண்டும். புத்தகங்கள் குழந்தைகளைப் படிக்கத் தூண்டும் வகையில் அவர்களைக் கவர்வதாக இருக்க வேண்டும். நூலக அலமாரிகளில் வெறுங் குப்பைகளை நிரப்பி விடக்கூடாது. பதிப்பகங்கள் தங்கள் பொறுப்பை உணர வேண்டும்.

வளர்ந்த நாடுகளில் கற்றல், கற்பித்தல் நிகழ்வுக்கு குழந்தை இலக்கிய நூல்கள் பெரிதும் பயன்படுகின்றன. ஆங்கிலத்தில் வெளிவரும் சிறுவர் நூல்களைப் (Children Literature) பார்த்தாலே இது புரியும்.

நூலகத்தோடு தொடர்பு இல்லாமல் ஆசிரியர் தன்னுடைய பணியில் சிறப்புப் பெற முடியாது. ஒவ்வோர் ஆசிரியரும் உள்ளூர் நூலகத்தோடு தொடர்பில் இருக்க வேண்டும். இன்று அவ்வாறு இருக்கிறார்களா என்று கேட்டால் பதில் உங்களுக்கே தெரியும். மாணவர்களைத்தான் படி, படி என்று ஆசிரியர்கள் கூறுவார்களே தவிர அவர்கள் படிக்க மாட்டார்கள் என்ற பழிச்சொல் இருக்கிறது. தொடக்கப் பள்ளிகளில் இன்று நூலகம் இல்லாத நிலையில் குழந்தைகள் உள்ளூர் நூலகங்களைப் பயன்படுத்த ஆசிரியர் வழிகாட்ட வேண்டும். உறுதுணையாக இருக்க வேண்டும்.

நூலகத்தைப் புறக்கணித்து விட்ட பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை எங்கே நூலகங்களுக்கு அழைத்து வருவார்கள் என்றே நான் கருதி இருந்தேன்.

குன்றத்தூர் நூலகத்தில் சிறுவர் பகுதி ஆரம்பித்து ஒவ்வொரு மாதமும் முதல் வாரம் ஞாயிற்றுக்கிழமை கதை சொல்லும் நிகழ்ச்சி நடை பெற்றது. முதலில் குழந்தைகள் சரியாக வரவில்லை. நாளடைவில் நிலைமை மாறியது. இன்று முப்பதுக்கும் குறையாமல் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை கதை நேரத்துக்கு அழைத்து வருகிறார்கள். அது மட்டுமல்ல, பூவிருந்தவல்லி, மாங்காடு, மலையம் பாக்கம் நூலகங்களிலும் சிறுவர் பகுதி செயல் படுகிறது.

நூலகத்தைக் குழந்தைகளுக்குரியதாக மாற்றும் பொறுப்பை நூலகர் என்ற ஒருவர் தலையில் மட்டும் சுமத்திவிட முடியாது. அதற்கு ஆசிரியர், பெற்றோர் ஆகியோரும் பொறுப்பேற்க வேண்டும்.

நூலகத் தந்தை திரு.ரங்கநாதனை தந்த பெருமையுடையது நம் நூலகத்துறை. நூலகத்தில் நூல்களைப் பகுத்து அடுக்கி வைக்கும் முறைக்கு வித்திட்டவர் அவர். அத்தகைய பெருமைக்குரிய நம் நூலகத்துறை, நூலகங்களில் சிறுவர் பகுதியை ஏற்படுத்தி நூலகத்தை குழந்தைகளுக்குரியதாக்கும் சீரிய பணிக்கு துணை நிற்கும் என்று நம்புவோம். ●

# சென்னை புத்தகக் கண்காட்சி சிறப்பு வெளியீடுகள்




## நான் செய்வதைச் செய்கிறேன்

சீர்திருத்தம், சொல்லாட்சி, செயலுறுதி ஆகியன பற்றி

ரகுராம் ஜி. ராஜன்

தமிழில் :
ச. வின்சென்ட்

ரூ : 399




## வரலாற்றில் பிராமண நீக்கம்

இந்தியச் சமூகத்தில் ஆதிக்கமும் எதிர்ப்பும்

ப்ரஜ் ரஞ்சன் மணி

தமிழில் :
க. பூரணச்சந்திரன்

ரூ : 550




## அரசியலின் இலக்கணம்

ஹெரால்டு ஜே. லாஸ்கி

தமிழில் :
க. பூரணச்சந்திரன்

ரூ : 570





## எங்கே செல்கிறது இந்தியா

டியானோ கஃபே
டீன் ஸ்பியர்ஸ்

தமிழில் : செ. நடேசன்

ரூ : 350




## பாஜக எப்படி வெல்கிறது?

இந்தியாவின் சிறப்புமிக்க வாக்கு இயந்திரத்துனுள் ஒருபார்வை

பிரசாந்த் ஜா

தமிழில் : சசிகலா பாபு

ரூ : 250

**அரங்கு எண் :**
**387, 388**
**431, 432**

எமது வெளியீடுகள் தமிழகத்தில் அனைத்து முன்னணி புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்

எதிர் வெளியீடு

# எதிர் வெளியீடு

96, நியூ ஸ்கீம் ரோடு, பொள்ளாச்சி - 642 002.
04259 - 226012 | 99425 11302
Email : ethirveliyedu@gmail.com
இணையம் வழி வாங்க : www.ethirveliyedu.in

# சென்னை புத்தகக் கண்காட்சி சிறப்பு வெளியீடுகள்




**கசார்களின் அகராதி**
ஆண்பிரதி

மிலோராத் பாவிச்

தமிழில் :
ஸ்ரீதர் ரங்கராஜ்

ரூ : 500




**கசார்களின் அகராதி**
பெண்பிரதி

மிலோராத் பாவிச்

தமிழில் :
ஸ்ரீதர் ரங்கராஜ்

ரூ : 500




**ஆரிஜின்**

டான் பிரவுன்

ரூ : 599




**புலிப்பானி ஜோதிடர்**

காலபைரவன்

ரூ : 150

எமது வெளியீடுகள்
தமிழகத்தில்
அனைத்து முன்னணி
புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.

**அரங்கு எண் :**
**387, 388**
**431, 432**

எதிர் வெளியீடு

# எதிர் வெளியீடு

96, நியூ ஸ்கீம் ரோடு, பொள்ளாச்சி - 642 002.
04259 - 226012 | 99425 11302
**Email : ethirveliyedu@gmail.com**
இணையம் வழி வாங்க : **www.ethirveliyedu.in**

# சென்னை புத்தகக் கண்காட்சி சிறப்பு வெளியீடுகள்




**அன்புள்ள ஏவாளுக்கு**

ஆலிஸ் வாக்கர்

தமிழில் :
ஷஹிதா

ரூ : 350



**தலித் இலக்கிய வரலாறு**

முனைவர்
பா. செல்வகுமார்

ரூ : 350




**சூன்யப் புள்ளியில் பெண்**

நவல் எல் சாதவி

தமிழில் :
சசிகலா பாபு

ரூ : 160




**துண்டிக்கப்பட்ட தலையின் கதை**

உலகச் சிறுகதைகள்

தொகுப்பும்
மொழியாக்கமும் :
கார்த்திகைப் பாண்டியன்

ரூ : 180

எமது வெளியீடுகள்
தமிழகத்தில்
அனைத்து முன்னணி
புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.

**அரங்கு எண் :**
**387, 388**
**431, 432**

எதிர் வெளியீடு

## எதிர் வெளியீடு

96, நியூ ஸ்கீம் ரோடு, பொள்ளாச்சி - 642 002.
04259 - 226012 | 99425 11302
Email : ethirveliyedu@gmail.com
இணையம் வழி வாங்க : www.ethirveliyedu.in

# சிலப்பதிகாரமும் - மணிமேகலையும் மகத்தான மக்கள் காப்பியங்கள்

## த.ஸ்டாலின் குணசேகரன்





23-12-2018 அன்று ராஜபாளையம் மணிமேகலை மன்றத்தின் 60ஆம் ஆண்டு மணி விழா நடைபெற்றது. மணிமேகலை மன்றத்தின் தலைவர் குறிஞ்சி செல்வர் கொ.மா.கோதண்டம் அவர்கள் முன்னின்று நடத்திய இந்நிகழ்வில் ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் கலந்துகொண்டு ‘மணிமேகலை சிந்தனைகள்’ என்ற தலைப்பில் உரையாற்றினார்.

அவரது உரையில் ‘மணிமேகலை’ காப்பியத்தின் முக்கியத்துவத்தையும் தனித்துவத்தையும் பல ஆதாரங்களையும் எடுத்துக்காட்டுகளையும் முன்வைத்து விரிவாக விளக்கிப் பேசினார். சிலப்பதிகாரம் - மணிமேகலை ஆகிய இரட்டைக் காப்பியங்களின் கதைத் தொடர்ச்சி பற்றியும் இரண்டு காப்பியங்களும் அழுத்தமாக எடுத்துச் சொல்லும் சமூகக் கருத்துக்கள் குறித்தும் ஆய்வு நோக்கில் எடுத்துரைத்தார்.

மன்னர்களையும் கடவுளர்களையும் கதைத் தலைவர்களாகக் கொண்டு காப்பியங்கள் எழுதப்பட்ட காலத்தில் குடிமக்களைக் காப்பிய நாயகர்களாகக் கொண்டாடி எழுதப்பட்ட சிலப்பதிகாரமும் மணிமேகலையும் மகத்தான மக்கள் காப்பியங்களாகத் திகழ்கின்றன என்றும் அவரது உரையில் விரிவாக விளக்கிப் பேசினார்.

இந்நிகழ்வில் ராஜபாளையம் நகரின் முக்கியப் பிரமுகர்கள் பலரும் பங்கேற்றதோடு ஏராளமான இலக்கியச் சுவைஞர்களும் சமூக ஆர்வலர்களும் கலந்துகொண்டனர்.


தமிழ்மண் பதிப்பகம்
முதுமுனைவர் இரா. இளங்குமரனார்
எழுதிய நூல்கள்
நெடுங்கால உழைப்பின் நிலைத்த பணி. தமிழ்நூல் பதிப்பு வரலாற்றில், தமிழகம் இதுவரை கண்டிராத முத்திரைப் பதிப்புகள். தமிழர் இல்லந்தோறும் பாதுகாத்து வைக்க வேண்டிய தமிழின் அறிவுச் செல்வங்கள்.
விலை: உரு.170/-
விலை: உரு.185/-
விலை: உரு.230/-
விலை: உரு.200/-
விலை: உரு.635/-
விலை: உரு.185/-
விலை: உரு.225/-
விலை: உரு.255/-
விலை: உரு.315/-
விலை: உரு.545/-
விலை: உரு.155/-
விலை: உரு.155/-
விலை: உரு.270/-
விலை: உரு.270/-
மூன்று நூல்கள் விலை: உரு. 565/-
ஐந்து நூல்கள் விலை: உரு.1190/-
சுவடிக்கலை
விலை: உரு.320/-
விலை: உரு.180/-
இலக்கண வரலாறு
விலை: உரு.425/-
விலை: உரு.305/-
பாவாணர் வரலாறு
விலை: உரு.260/-
விலை: உரு.240/-
விலை: உரு.245/-
விலை: உரு.315/-
பாரத வெண்பா
விலை: உரு.405/-
செந்தமிழ்
விலை: உரு.200/-
விலை: உரு.365/-
விலை: உரு.200/-
மொத்தப் பக்கங்கள் 9,548
மொத்த நூல்கள் 28
மொத்த விலை 9,010
மொத்த நூல்கள் சலுகை விலை 6,300/-
எழுத்து – சொல் – பொருள் எனும் முப்பெரும் பிரிவுகளில் தமிழினத்தின்
வாழ்வையும் வரலாற்றையும் காட்டும் பண்பாட்டுச் செல்வங்கள்.
தமிழின் பல்லாயிரமாண்டு மொழி வளத்தைக் காட்டும் அரும்பெரும் நூல்கள்.
தமிழர்களே! வாங்கிப் பயனடைய வேண்டுகிறோம்.
நூல் வேண்டுவோர் :-
தமிழ்மண் பதிப்பகம் பெயரில்
வரைவோலை (D.D.) எடுத்துக் கீழ்க்கண்ட
முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்
அனுப்பும் செலவு தனி (காசோலை தவிர்க்கவும்)
மின்வழிப் பணம் அனுப்பும் வழிமுறை
THAMIZHMANN PATHIPPAGAM
Oriental Bank of Commerce,
T.Nagar, Chennai - 600 017
IFSC : ORBC 0100928.
Current A/c No.: 09281131000355.
2 சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர், சென்னை - 600 017. பேசி.044-24339030 - செல்.+91-94444 10654
மின்னஞ்சல்: elavazhagantm@gmail.com


தமிழ்மண் பதிப்பகம்
முன்புதை வுண்டஎம்
முத்தமிழ்ச் சிறப்பினை !
மன்பதைக் குணர்த்தல்எம்
மன்னுயிர் வாழ்க்கை !
தொல்காப்பிய உரைத்தொகை
எழுத்து சொல் பொருள்
மொத்தப்பக்கங்கள் 8648
மொத்த நூல்கள் 19
மொத்த விலை 13,480/-
சலுகை விலை 8,000/-
மறைமலையம் (மறைமலையடிகள்)
மொத்தப்பக்கங்கள் 11,472
மொத்த நூல்கள் 54
மொத்தத் தொகுதிகள் 34
மொத்தவிலை 14,260/-
சலுகை விலை 8,500/-
சலுகை விலை
31.01.2019 வரை மட்டுமே
அப்பாத்துரையம் (கா. அப்பாத்துரையார்)
மொத்தப்பக்கங்கள் 15,532
மொத்த நூல்கள் 98
மொத்தத் தொகுதிகள் 48
மொத்த விலை 19,430/-
சலுகை விலை 9,700/-
மாணிக்க விழுமியங்கள் (வ.சுப. மாணிக்கனார்)
மொத்தப்பக்கங்கள் 6480
மொத்த நூல்கள் 34
மொத்தத் தொகுதிகள் 18
மொத்தவிலை 6,080/-
சலுகை விலை 4,000/-
கிடைத்தற்கரிதான தமிழ்நூற்செல்வங்கள் அனைவருக்கும் கிடைப்பதற்காகப் பல திசையிலும் தேடி எடுத்து இந்நூல்களை வெளியிட்டுள்ளோம். தமிழர்கள் அனைவரும் இத்தொகுப்புகளை வாங்கி எம் தமிழ்ப்பணிக்கு வலிமை சேர்க்க வேண்டுகிறோம்.
நூல் வேண்டுவோர் :-
தமிழ்மண் பதிப்பகம் பெயரில்
வரைவோலை (D.D.) எடுத்துக் கீழ்க்கண்ட
முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்
அனுப்பும் செலவு தனி (காசோலை தவிர்க்கவும்)
மின்வழிப் பணம் அனுப்பும் வழிமுறை
THAMIZHMANN PATHIPPAGAM
Oriental Bank of Commerce,
T.Nagar, Chennai - 600 017
IFSC : ORBC 0100928.
Current A/c No.: 09281131000355.
2 சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர், சென்னை - 600 017. பேசி.044-24339030 - செல்.+91-94444 10654
மின்னஞ்சல்: elavazhagantm@gmail.com

# அஞ்சலி



நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பாவை பப்ளிகேஷன்ஸ்
ஆகிய நிறுவனங்களின் முன்னாள் முதன்மைப் பதிப்பாசிரியர்,
'உங்கள் நூலகம்' மாத இதழின் முன்னாள் ஆசிரியர்,
தென்னக ஆய்வு மைய முன்னாள் அறங்காவலர்,
அகில இந்திய ரிசர்வ் வங்கி ஊழியர் சங்க முன்னோடி,
அமரர் திரு.ஆர்.பார்த்தசாரதி (ஆர்.பி.எஸ்.) அவர்களின்
வாழ்க்கைத் துணைவியார் திருமதி.பா.இராஜேஸ்வரி அம்மாள் (வயது 81) அவர்கள்
21-11-2018 அன்று இயற்கை எய்தினார்.
அன்னாரது மறைவுக்கு 'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்'
அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.



# மானிடவியல் நோக்கில் சாதியும் பெண்களும்

தீ.ஹேமமாலினி

**பெ**ண் என்பவள் சமூதாயத்தில் ஆணுக்கு நிகரான உரிமை பெற்றவள். இவள் பெற்ற தாயாகவும், பூமியாகவும், நதியாகவும், மொழியாகவும், விளை நிலமாகவும் பாவிக்கப்படுகிறாள். இவளே ஆதிப் பொதுவுடமைச் சமூகத்தில் தலைமைப் பொறுப் பேற்று வழி நடத்திச் சென்றாள் என்பது மானிடவிய லாளர்களின் கருத்தாகவும் உள்ளது. இவ்வாறாக சுதந்திரமாக இருந்த பெண் சமுதாயம் காலப் போக்கில் கற்பு, அகமணம் என்ற கருத்தாக்க நிலையில் உருவகப்படுத்தியும் பெண்களின் விடுதலை பறிக்கப்பட்டுள்ளது. மேலும் 'சாதி' என்னும் போர்வையில் பெண்ணின் உடைமையும் உரிமையும் மூடி மறைக்கப்பட்டும் நசுக்கப்பட்டும் வருகிறது. இவற்றை எல்லாம் சுருக்கமாக மானிடவியல் நோக்கில் ஆராய விரும்புகிறது இக்கட்டுரை.

ஆதிப்பொதுவுடமைச் சமூகமானது வேட்டைச் சமூகமாகவும் உற்பத்திமுறை இல்லாத காலமாகவும் இருந்தது. கிடைத்த பொருளை பகுத்துண்டு கூடி வாழ்ந்தனர். பெண் உறவும் தாயன்பும் பெண்ணுக்கு முதலிடம் தந்தன. கூட்டுக்கிளையே பெண்ணால் பரவிற்று.

தாய்வழிச் சமூகத்தைப் பற்றி ஆராய்ந்தவர்களுள் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவர்களுள் ஒருவர் ஆங்கிலேய மானிடவியலாளர் எட்வர்ட் பர்னட் டைலர் ஆவார். இவரின் கூற்றுப்படி, வேட்டையாடி உணவு சேகரிக்கும் நிலை தொடங்கி இறுதி நிலையான நாகரிகம் வரையில் பல படிநிலைகளில் மாற்றங்கள் காணப்படுகின்றன. நீண்ட படிநிலை வரிசையானது கடந்த காலப் படிநிலைகளை அறிவதற்கு உதவும் நிகழ்கால வடிவம் என்று டைலர் கருதினார். அதாவது பழங்கற்காலப் பண்பாட்டிற்குப் பிறகு தோன்றிய வேட்டுவச் சமூகம் தொடங்கிப் பழம்பெரும் நாகரிகங்கள் தோன்றியது வரையிலான படிமலர்ச்சியை இன்றைய நிகழ்காலப் படிநிலைகளைக் கொண்டு ஒப்பிடமுடியும் என்று டைலர் கருதினார். மேற்கூறிய அணுகுமுறையைக் கொண்டு டைலர் பேறுகாலத்தனிமை, சேய்வழி அழைத்தல் ஆகிய இரண்டு கூறுகளின் வழி

*தாய்வழிச் சமூகமே முதலில் தோன்றிய சமூகம் என்பதை நிறுவுகிறார் (பக்தவத்சலபாரதி 2008: 02).*

*சங்க காலத்தில் கணச் சமூகத்துக்குத் தாயே தலைமை பெற்றிருந்தாள். தாய்வழியாகவே வம்சாவளி குறிக்கப்பட்டது. இத்தகைய கணச்சமூகத்தில் தாயே அவளுடைய வம்சத்திற்குத் தலைமை ஏற்றிருந்ததைப் பின்வரும் சங்கப்பாடல்கள் காட்டுகின்றன. புறம். 270, 276, 277 (மேலது: 06). போன்ற பாடல்கள் மூலம் தாய்வழிச் சமூகம் இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. இவற்றின் மூலம் டைலர் குறிப்பிடும் தாய்வழிச் சமூகமானது தமிழ்ச்சமூகத்திற்குப் பொருந்தி வருவதைப் பார்க்க முடிகிறது.*

*தாய்வழிச் சமூகத்தைப் பற்றி ஆய்வு செய்த மானிடவியல் அறிஞர்களைப் பற்றிக் காண்போம். இந்தியாவில் 'தாய் உரிமை' (1941) என்னும் பொருளில் ஆய்வு செய்த யூ.ஆர்.எரன்ஃபெல்ஸ் பழந்தமிழகத்தில் தாய் உரிமை முறை இருந்தது என்கிறார். மேலும் தாய்த் தலைமைப் பண்பானது இந்திய பண்பாட்டில் குறிப்பாகத் திராவிடப் பண்பாட்டில் ஓங்கியிருக்கிறது என ஸ்கிமிட், காப்பர்ஸ் ஆகிய இனவியலர்கள் சுட்டுவதையும் எரன்ஃபெல்ஸ் குறிப்பிடுகிறார். 'இந்தியாவில் சாதி' (1961) என்னும் நூலை எழுதிய ஹட்டன் என்பாரும் பழந்தமிழகத்தில் தாய்த் தாயகம் இருந்திருக்க வேண்டும் என்கிறார் (மேலது :15). இந்தக் குறிப்புகள் அனைத்தும் பழந்தமிழகத்தில் தாய்ச் சமூகம் இருந்ததை வலுசேர்க்கும் விதமாக அமைந்துள்ளன.*

*அடுத்ததாக சங்க இலக்கியத்தில் பெண்களின் திருமணம் பல்வேறு நிலைகளில் நிகழ்ந்துள்ளது என்பதை சங்க இலக்கிய பாடல்கள் மூலம் அறியமுடிகிறது. அவை கற்பு மணம், களவு மணம், உடன்போக்கு மணம், பொருள் மணம், சேவை மணம், ஏறுதழுவல் மணம், மடல் மணம், திணைக் கலப்பு மணம், பலதார மணம், பரத்தை மணம், கடத்தல் மணம் போன்ற மணங்கள் நிகழ்ந்ததை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளது. இம்மணங்களைப் பார்க்கும் போது திருமணத்தின் வகைகளும் பல வகையாக இருந்துள்ளன என்பது புலப்படும். இவற்றைப் பார்க்கும் போது பெண்களின் சுதந்திரம் சில பகுதிகளில் உடைக்கப்பட்டும் சில பகுதிகளில் சுதந்திரமாக இருந்ததையும் காணமுடிகிறது.*

*ஆதிப்பொதுவுடமைச் சமூகத்தின் எச்சமாக களவு மணமும், திணைக்கலப்பு மணமும் தொடர்ந்து நிகழ்ந்துள்ளது. பெற்றோர் அறியாமல் தலைவனும் தலைவியும் கண்டு இணைவது களவு மணம் ஆகும். பிறர் அறியாமல் ஆணும் பெண்ணும் மணந்து கொள் வதாகிய களவு மணத்தை 'ஒன்று மணம்' என்று குறிப்பிடுகிறார் (மனோன்மணி சண்முகதாஸ் 2007:27). அவர்கள் வாழும் சூழலுக்கேற்பச் சிந்திக்கின்ற இடம் மாறுபடும். திணைப்புனத்திலோ நீர்ச்சுனைகளிலோ கடற்கரைச் சோலைகளிலோ கண்டு கூடினர். இயற்கை வளம் நிறைந்த குறிஞ்சியைப் புணர்ச்சிக்குரிய நிலமாகக் கொண்டனர். களவுக் காதலும் கற்புக் காதலும் எல்லா நிலத்திலும் நிகழ்வது உலக வழக்கமாகும் (வ.சுப.மாணிக்கம் 2007:38).*

யாயும் ஞாயும் யாரா கியரோ ?<br>
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்<br>
யானும் நீயும் எவ்வழி அறிதும்<br>
செம்புலப் பெயனீர் போல<br>
........................ (குறுந். 40)

*எனும் பாடல் வழி அறியலாம்.*

*களவு மணம் போல திணைக்கலப்பு மணம் நிகழ்ந்துள்ளது. தலைவனும் தலைவியும் வெவ் வேறு நிலத்தவர்கள். இத்திணைக் கலப்பு மணத்தைப் புறமணத்திற்குச் சான்றாகக் கொள்ளலாம். இதனையே,*

இதற்கிது மாண்ட தென்னா ததற்பட்டு<br>
ஆண் டொழிந்தன்றே (குறுந்.184:3–4)

*என்ற பாடலின் மூலம் குலத்தகுதி பார்க்காமல் காதல் ஏற்பட்டதை அறிய முடிகிறது.*

*இவ்வகையான திருமணங்கள் இன்று மறுக்கப் பட்டும் எதிர்க்கப்பட்டும் வருகின்றன. ஒவ்வொரு சமூகத்தாரும் அவர்களுக்குள்ளே பெண் எடுத்து பெண் கொடுக்கும் அகமண முறை வழக்கில் இருந்து வருகிறது. இதிலிருந்து பெண்களின் திருமண விருப்பம் முடக்கப்பட்டு உள்ளது. மாறாக இன்றும் பெண் விருப்பமுறை மணம் பழங்குடி பெண்களிடம் காணமுடிகிறது. உதாரணமாக நீலகிரிப் படகர் இனத் திருமணங்களில் இந்த வழக்கம் நிலவுகிறது. 'பொன்னைக் கொடுத்தோம், பெண்ணைக் கூட்டிச் செல்கிறோம்' என்று மணமகன் வீட்டுக்குப் பெண்ணை அழைத்துச் செல்வர். அவள் அங்கே கருத்தரித்த பின்னரே, அவளது குழந்தைக்குத் தகப்பன், அவளுக்கு தாலி கட்டும் சடங்கு நிகழும். அப்படி அவள் தாயாகும் நிலை ஏற்படவில்லை யெனில் அவள் மீண்டும் தாய் வீட்டுக்கே திரும்பி விடுவாள். 'பெண்ணைக் கொண்டு விட்டு விட்டோம். நாங்கள் கொடுத்த பொருளைத் தாருங்கள்' என்று திரும்பப் பெற்று இன்னொரு பெண்ணைத் தேடிச் செல்வார்கள். ஒரு குடும்பத்தில் இருந்து திரும்பி வந்தாலும் வேறு குடும்பத்தினர் பொன் கொண்டு வந்து பெண் கேட்கும் வழக்கம் உண்டு (ராஜம் கிருஷ்ணன் 1994: 57). இந்த இடைநிலைக் காலத்திலும் கற்புக் கொள்கை பெண்ணைப் பிணைத்திருக்கவில்லை.*

தமிழ்ச் சமூகங்களில் தாய்வழிச் சமூகம் இருந்ததை ஏற்கெனவே பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக இன்றும் பல சமூகங்கள் இருந்து வருகின்றன என்பதை பல்வேறு மானுடவியல் அறிஞர்களின் கூற்று மூலம் அறியமுடிகிறது. இவர்கள் தமிழகத்தின் பல பகுதிகளில் இன்றும் உள்ளனர். கோட்டைப் பிள்ளைமார், நாங்குடி வேளாளர், நாஞ்சில் நாட்டு வேளாளர், அரும்புக்கட்டி வேளாளர், இல்லத்துப் பிள்ளைமார், ஆப்பநேரி மறவர், அஞ்சு கொத்து மறவர், கிருத்துவ மறவர் போன்றவர்களிடம் தாய்வழிச் சமூகம் இருப்பதைக் காணமுடியும் (பக்தவத்சல பாரதி 2008: 15-29).

இந்தியாவில் மக்கள் (People of India) என்னும் மாபெரும் ஆய்வுத் திட்டத்தை 1985இல் மேற் கொண்ட இந்திய மானிடவியல் மதிப்பாய்வகம் (Anthropological survey of India) தமிழகத்தின் 364 சமூகங்களையும் பற்றிய விவரங்களை இத்திட்டத்தின் 40ஆவது தொகுதியாக வெளியிட்டது. இத்தொகுதி மூன்று பகுதிகளைக் கொண்டது. இந்நூல் வரிசை களுக்கு முன்னுரை எழுதிய மதிப்பாய்வகத்தின் தலைமை இயக்குநராக இருந்த கே.எஸ்.சிங் தென்னிந்தியச் சமூகங்களில் மிகவும் பரவலாகக் காணப்படும் மூன்று தாய்வழி எச்சக் கூறுகளைக் குறிப்பிடுகிறார். முதலாவது பெண்கள் தங்கள் தலைப்பிரசவத்தை தாய் வீட்டில் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எச்சக்கூறு. அதோடு சில சமூகங் களில் தலைப்பிரசவம் மட்டுமல்லாமல் முதலிரண்டு பிரசவங்களையும் தாய் வீட்டிலேயே நிகழ்த்த வேண்டும் என்றும் விரும்புகின்றனர். இனச் சந்ததியின் தோற்றமும் தொடர்ச்சியும் தாய்வழித் தாயகத்தில் நிகழ வேண்டும் என்பது தாய்வழி மனப்பான்மையாகும். தாய்வழி என்பது தன் தாயாதிகளின் வீடாகக் கொள்வது ஆதிகாலத் தாய்வழிச் சமூக மரபாகும் என்பார் சிங். அவ்வாறே திருமணமான தம்பதியினருக்குச் செய்யப்படும் 'சாந்தி முகூர்த்தம்' மணப்பெண்ணின் தாயகத்தில் நிகழ வேண்டும் என்பது மேற்கூறிய கருத்தாக்கத்தின் தொடர்ச்சியேயாகும் என்கிறார். தென்னிந்தியச் சமூகங்களில் பெண் குழந்தைகளுக்கு மொட்டை யடித்தலும் மேற்படி ஆய்வுத்திட்டத்தின் மூலம் பரவலாகக் கிடைத்த தரவாகும் என்கிறார் சிங் (1997 : xxxx).

அடுத்த நிலையில் பெண் நிலத்தோடு பிணைந் திருப்பதை காலந்தோறும் காணமுடிகிறது. ஆதி சமூதாயத்தில் ஆண்கள் வேட்டைக்குச் சென்றும் பெண்கள் விவசாயம் தொடர்பான தொழிலில் ஈடுபட்டும் வந்தனர். குறிப்பாக விதை விதைத்தல், நாற்று நடுதல், களை பறித்தல், அறுவடை செய்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். இன்றும் சில பழங்குடியினரிடையே விதைப்பு சடங்கானது பலியிட்ட மறியின் குருதியில் விதையைத் தேய்த்து விதைக்கின்றனர். இரத்தம் உயிர்ச் சக்தியின் அறிகுறி. இரத்தத்தில் விதை நனைக்கப்பட்டால் வளரும் என்பது அக்கால நம்பிக்கையாகும். இதனை பழங் குடியினத்தவர் கோயர்களிடமும் காணமுடிகிறது (சுப்பிரமணியன் 2011: 22). ஆண் சமூகம் தலைமைப் பொறுப்பேற்றபோது விவசாயமும் பெண்களின் கையில் இருந்து ஆண்களிடம் மாறியது. இவர்கள் நிலவுடமையாளர், மிராசுதார் என்றும் அழைக்கப் பட்டார்கள். ஆனால் பெண்களை நிலவுடைமை யாளர்களாக எங்கும் குறிப்பிடப்படுவதில்லை.

ஆதிகாலம் முதல் பெண் தலைமைப் பொறுப் பேற்றவளாக உள்ளதால் பெண் ஆனவள் தெய்வமாக வழிபடப்பட்டாள். இவளைத் தாயாகவும் கன்னி யாகவும் உருவகப்படுத்திக் கூறுவது மிகப் பழங்காலத்திலிருந்தே மரபாகவும் உள்ளது. சங்க இலக்கியங்களில் தாய்த் தெய்வம் காட்டில் உறை பவளாகவே கூறப்பட்டுள்ளது மிகவும் முக்கியமான செய்தியாகும். 'மாயோன் மேய காடுறை உலகமும்' என்று தொல்காப்பியர் கூறினும் மாயோனுக்கு முன்னுரை காடுறை கடவுளாகத் தாய்த் தெய்வமே இருந்திருக்கிறாள். இதனையே,

> '............... ஓங்கு புகழ்
> கானமர் செல்வி அருளலின் வெண்காற்
> பல்படைப் புரவி எய்திய தொல்லிசை (அகம்:.345)

இப்பாடல் கானமர் செல்வி என்ற தாய்த் தெய்வத்தைக் கூறுகிறது. மேலும் இவள் தொன் மூதாட்டி, முது மூதாட்டி, முதியாள் என்று கூறப் படுவதைக் காணலாம். செல்வம் என்றாலே செழிப்பு என்ற பொருள் தோன்றுகிறது. தாய்த் தெய்வங்கள் செழிப்புத் தெய்வங்களாகும். படைப்புச் சக்தியைக் கொண்ட தெய்வங்களாகும் (சாமி 2011: 04).

பழையர் போன்ற பழங்குடிகளின் கடவுளே பழயோள் என்பதைக் கவனிக்க வேண்டும். இலை யுடையணிந்து தொழும் வழக்கம் சங்க காலத்திலும் இருந்தது தெளிவாகிறது. மற்றும் 'நக்னசபரி' என்ற பெயரில் இந்தத் தெய்வத்தை இந்துக்களும் தொழுதனர். ஆடையற்ற பெண் தெய்வம் என்பது இதன் பொருள் (மேலது: 13). இதைத் தவிர விலங்குகளிலும் பெண் விலங்குகளை வணங்குகின்றனர். எடுத்துக்காட்டாக பசுவை புனித விலங்காகவும், தெய்வமாகவும் இந்துக்கள் வழிபடுகின்றனர். இதற்கு முக்கிய காரணம் பசு தன்னுடைய இனப்பெருக்கத்திற்காகவும், பால் உற்பத்தி முறை என்பது மனித இனத்திற்கு இன்றி யமையாததாக இருந்ததால் பசுவை வணங்கினர்.



பழங்காலச் சமூதாயத்தில் தேவராட்டி (மந்திரப் பூசாரிணி) புகழ் நிறைந்து விளங்கியதற்குக் காரணம் தொல் சமூகமே ஆகும். திருமுருகாற்றுப்படையில் 'குறமகள் வெறியாட்டு' நிகழ்த்துதல் கூறப்பட்டு உள்ளது. சிலப்பதிகாரம் கொற்றவை வழிபாட்டைச் சாலினி நடத்துவதாகச் சித்திரிக்கிறது. கொற்றவையாகக் கோலம் கொண்டதும் எயினர் குலக்குமரியே ஆவாள். 'படிமத்தாள்' முன்னும் கூறுதலை அகநானூறு உணர்த்தும். 'அகவன் மகள்' குறிசொல்லுதலைக் குறுந்தொகை சுட்டிக்காட்டுகிறது. 'கட்டுவிச்சி' கழங்கு கொண்டு குறிசொல்வதை அகநானூறு உணர்த்துகிறது. இவ்வாறு பெண் என்பவள் தெய்வமாக மட்டும் போற்றப்படாமல் பூசாரி யாகவும் இருந்துள்ளனர் என்பதும் புலப்படும்.

சுதந்திரமாக இருந்த பெண் சமூகம் சாதியம் உருவான காலத்தில் கீழ்நிலையில் தள்ளப்பட்டாள். பெண்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்று மனுதர்மம் சில சுலோகங்கள் மூலம் வெளிப்படையாக விவரிக்கிறது. இவை,

V.*152*. கணவனைத் தவிர வேறொருவர் மூலம் ஒருத்தி பெறும் குழந்தை அவளுடையதல்ல. வேறொருவனுடைய மனைவி மூலம் பெறும் குழந்தை பெற்றவனுக்குரியதில்லை. கற்புடைய பெண்ணின் இரண்டாவது கணவனுக்குப் பிறக்கும் குழந்தை அவளுக்குரியதல்ல.

*1X.86*. கணவனைப் பிரிந்த பெண், தந்தை, மகன், சகோதரன், மாமியார் அல்லது தனது மாமா ஆகியோரைப் பிரிந்து வாழக்கூடாது. அவ்வாறு இல்லையெனில் தண்டைக்கு உள்ளாவாள்.

*1X.88*. உரிய வயதை அடையாவிட்டாலும் அதாவது பருவமடையாவிட்டாலும் தந்தை தன் மகளை விதிமுறைகளுக்கேற்ப சமமான சாதியைச் சேர்ந்த சிறப்பான ஒருவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

V.*161*. குழந்தைகளைப் பெற வேண்டும் என்ற விருப்பத்தில் மறுமணம் செய்து கொள்ளும் ஒரு பெண் தன் கணவனை அவமதிப்பதோடு தனக்குத் தானே இழிவையுந் தேடிக் கொள்கிறாள். அவள் சொர்க்கத்திலிருந்து விலக்கி வைக்கப்படுவாள்.

*9:18*. பெண்களுக்கும் வேதங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

அடுத்ததாக மனு குறிப்பிடும் அனுலோம, பிரதிலோம எனும் கலப்பு மணமுறையாகும். அனுலோம என்பது உயர்குல ஆணுக்கும் தாழ்ந்த குலப் பெண்ணுக்கும் பிறக்கும் குழந்தை. இக்குழந்தை தந்தையின் வருணமாகவே கருதப்படுவர். அதே போல் உயர்குல தாய்க்கும் தாழ்ந்த குல ஆணுக்கும் பிறக்கும் குழந்தை பிரதிலோம முறையாகும். இவர் களுக்குப் பிறக்கும் குழந்தை வருணத்தில் சேர்க்கப் படாமல் தனித்தே நிற்கும். இவற்றை ஒட்டு மொத்த மாகக் காணும் போது பெண் என்பவள் தனித்து இருக்கக் கூடாது என்றும் காலம் முழுவதும் யாரேனும் ஒருவரோடு சார்ந்து வாழ வேண்டும்,

என்றும் தன்னுடைய சாதி ஆண்களை மணக்க வேண்டும் என்றும் இன்னும் பல விதிகளை பெண்களின் மீது சுமத்துகிறது. ஆனால் ஆண் என்பவன் சமூதாயத்தில் தன் விருப்பம் போல வாழ உரிமை அளிக்கும் மனு பெண்களின் சுதந்திரத்தைப் பறிப்பது எந்தவிதத்தில் நியாயம்?

பெண்ணியம் பற்றி பலர் பேசி இருந்தாலும் இக்கட்டுரை குறிப்பாக இரண்டு அறிஞர்களான அம்பேத்கர், பெரியார் பார்வையில் சில கருத்துகளை முன்வைக்க விழைகிறது. அம்பேத்கர் கூற்றுப்படி, 'இந்து சமூதாயம் என்பது பரஸ்பரம் தனித்தனியே இயங்கும் அலகுகளின் கூட்டமைப்பாக மட்டும் இருக்குமேயானால் இப்பிரச்சினை எளிதாகவே இருக்கும். ஆனால், சாதியோ ஏற்கெனவே ஓரியல்பாய் இருப்பதைப் பிணைத்திருப்பதாய் இருக்கிறது'. எனவே, சாதியத்தின் தோற்றத்தை விளக்குவது என்பது இந்தப் பிணைத்திருக்கும் நிகழ்வுப் போக்கை விளக்குவதாகும்.

அகமணம் கொள்பவையாக உள்ள இச்சமூகங்கள், ஏறத்தாழ இடம் பெயர்க்கப்பட்ட இடங்களிலேயே தங்கள் உறைவிடங்கள் அமைத்துக் கொண்டவையும் ஒன்றுக்கொன்று ஒரு சிறிதும் தொடர்பில்லாதவையுமாக ஆகியிருப்பதைக் கண்கூடாகக் காணலாம். ஆகவே சாதி என்பது இன்னமும் புதுமையான இயல்பு கொண்டதாகிறது. இப்புதிய இயல்பு இரத்த உறவுள்ள அகமணச் சமூக அல்லது கணவழியிலான குழுக்களை மட்டுமே கருதி மேற்கொள்ளப்பட்ட நிலைபாடுகளில் காணப்படாதது ஆகும். அகமண வழக்கம் வாயிலாக மக்களைக் குறிப்பிட்டதும் வரை யறுக்கப்பட்டதுமான தனித்தனி அலகுகளாக்கி, எந்தவொரு அலகும் மற்ற வேறு எந்தவொரு அலகோடும் பிணைவதிலிருந்து தந்திரமாகத் தடுப்பதே சாதி என்பதன் பொருளாகும். ஆகவே அகமணமே, சாதிக்கு உரிய தனித்தன்மையான ஒரே இயல்பு என்பது தவிர்க்க முடியாத முடிவாகப் பெறப்படுகிறது (அம்பேத்கர் 1990: 05). இவர் குறிப்பிடும் அகமண முறை என்பது பெண்ணைச் சார்ந்தே உள்ளதே தவிர ஆண் சமூகத்தைச் சார்ந்து இருப்பதில்லை. அகமணம் உடைந்தால் பெண் விருப்பத்திற்கு ஏற்ப வெளியே திருமணம் செய்து கொள்ளமுடியும். ஆகவே இங்கு அகமணம் என்பது உடைக்கப்பட வேண்டிய ஒன்றாகவே இருக்கிறது.

பெரியாரின் பார்வையில் பெண்ணியம் பற்றி சற்று தொட்டுச் செல்வோம். இவர் சாதி ஒழிப்பிற்கு சாதிக் கலப்புத் திருமணம் செய்வதே சிறந்த வழி என்று குறிப்பிடுகிறார். மேலும் இவர் கூறுவது, சாதாரணமாகவே இன்றைய கற்பு, விபச்சாரம் என்னும் வார்த்தைகள் சுதந்திரம், சமத்துவம் கொண்ட வாழ்க்கைக்குச் சிறிதும் தேவையில்லாததே யாகும். மனித சுபாவங்களுக்கு இவ்விரண்டு வார்த்தைகளும் பொறுத்தமற்றதேயாகும். வாழ்க்கை ஒப்பந்தப் போதிலும் அவை இயற்கைக்கு முரணானது என்பதை யாவரும் ஒப்புக் கொண்டு தானாக வேண்டும். அதற்கு ஆதாரம் என்னவென்றால், மேலே சொல்லப்பட்டது போலவே அவ்விரண்டு வார்த்தையின் தத்துவங்களும் பெண்கள் மீது சுமத்தப்பட்டு ஆண்களின் மீது சுமத்தப்பட்டாலும், ஆண்கள் அதற்காகப் பயப்படவோ அவமானப் படவோ கட்டுப்பட்டிருக்கவோ இல்லாமல் இருப்பதும் அதைப் பற்றி லட்சியம் செய்யாமையாகும். கற்பு, விபச்சாரம் என்னும் வார்த்தைகள் வெறும் புரட்டு என்பதும் மற்றவர்களை அடிமையாக்கவும், கட்டுப்படுத்தவும் உண்டாக்கப்பட்ட சுயநலச் சூழ்ச்சி நிறைந்த தன்மை கொண்டது என்பதும் தானாகவே விளங்கிவிடும் (பெரியார் 2010: 39).

இவர்கள் இருவரும் குறிப்பிட்டு பேசும் சாதியமைப்பு என்பது பெண்களை மையப்படுத்தி உள்ளது. பெண்கள் இல்லாமல் சாதி இல்லை, சாதி இல்லாமல் பெண்கள் இல்லை என்கிற முடிவுக்கு வரமுடிகிறது. எனவே சாதியமைப்பு ஒழிந்தால்தான் பெண் விடுதலை சாத்தியம்.

தொகுப்பாக, இதுவரை தமிழ்ச் சமூகமானது இன்றும் சில இடங்களில் தாய்வழிச் சமூகத்தின் எச்சம் இருந்து வருகிறது என்பது தெளிவாகிறது. பெண் என்பவள் நதியாகவும், நிலமாகவும், மொழி யாகவும், நாடாகவும், கல்வியாகவும், செல்வத்தின் குறியீடாகவும், வளமையின் குறியீடாகவும் இன்னும் பல படிநிலைகளில் காட்டப்பட்டாலும், ஆண் சமூக மானது பெண்ணை தனக்குக் கீழ் கொண்டு வரும் போது மேலே கூறப்படும் பெண்ணின் பெருமைகள் எல்லாம் ஆண், பெண்ணை அடையும் பொழுது அவன் கையிலேயே ஒட்டு மொத்தமும் அடங்குகிறது. பெண் உடைமைப் பொருளாகவும், சொத்தாகவும் தான் பார்க்கப்படுகிறாள். இன்றும் பெண் என்பவள் அகமணம், கற்பு என்ற கருத்தாக்கத்தில் இருந்து வெளிவர முடியவில்லை. ஒரு காலத்தில் நிலத்திற்கு உரிமையாக இருந்த பெண் இன்று நிலத்தில் இருந்து விலகி இரண்டறக் காணப்படுகிறாள்.

பெண் தெய்வ வழிபாடு பரவலாகக் காணப் பட்டாலும் இன்று பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக இயற்கையாக வழிபட்ட முறையில் இருந்து மாறி வைதீக வழிபாட்டு முறையில் பல மாற்றங்கள் தோன்றின. மூதாதையரின் பெயரில்

இருந்தவை எல்லாம் வடமொழிப் பெயர்கள் பல புகுத்தப்பட்டன. சிறிய நடுகல் வழிபாட்டில் இருந்து உருவ வழிபாடு முறை தோன்றியது. ஒரு காலத்தில் கோயில் பூசாரியாக இருந்தவள் காலப்போக்கில் சில கோயில்களில் நுழைவதற்கு தடை ஏற்படுத்துவது எந்தவிதத்தில் நியாயமாகும்?

மனுதர்மம் பெண்ணை கீழ்நிலையிலேயே வைத்துள்ளது. பெண்கள் வேதம் கற்கக் கூடாது, ஆண்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்பதோடு இன்னும் பிற கீழ்நிலைகளில் வைத் துள்ளது. பெண் என்பவள் கணவனைத் தவிர மற்ற ஆண்களுடன் பழகக் கூடாது போன்ற விதிகளையும் வகுத்துள்ளது. மனுவின் மொத்த நோக்கத்தைக் கவனிக்கும் போது பெண் என்பவள் ஆண் சமூகத்தின் குலம், வருணத்தைப் பாதுகாக்க பெண் கற்புடன் வாழ்க்கை நடத்த வேண்டும் என்கிறது. சாதி உருவானதில் ஆண்களின் பங்கே மிக அதிகம் ஏனெனில் பிரம்மாவின் உடலில் இருந்து பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வருணங்கள் தோன்றின. இவ்வருணங்கள் எல்லாம் ஆண்களாகவே சித்திரிக்கப்படுகின்றனவே தவிர பெண் வருணங்கள் ஏதும் சித்திரிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பெண்ணே குடும்பத்தில் உள்ள அனைத்து நிகழ்வுகளுக்கும் பொறுப்பு ஆகின்றாள். குடும்பத்தில் நிகழும் சடங்கு முறையான பிறப்பு முதல் இறப்பு வரையிலான அனைத்தும் சாதிய முறையில் நிகழ்வதால் பெண்ணானவள் முழு பொறுப்பேற்கிறாள். சாதியமானது சடங்குகளின் மூலம் இவளை காலம் காலமாக தொடர்ந்து துரத்தி வருகிறது. பெண்ணும் சாதியும் இரண்டறக் கலந்தே நிற்கிறது. அடுத்ததாக ‘கௌரவக் கொலைகள்’ என்ற பெயரில் பல மனித உயிர்கள் பறிக்கப்பட்டு வருகிறது. இதில் ஒவ்வொரு சமூகமும் தங்கள் சாதிப் பெருமையை காப்பாற்றிக் கொள்வதாக நினைத்துக் கொள்கின்றனர். ஒரு சாதி தன்னை விட கீழ்சாதியில் திருமணம் செய்து கொள்ள விரும்பாத சாதி தன்னை விட மேல்சாதியில் திருமணம் செய்து கொள்வதை பெருமையாக நினைக்கின்றனர். இதில் பெண் காதலித்து வேறு கீழ்சாதியில் திருமணம் செய்ய முற்படும் போது அவள் கொலை செய்ய காரணம் அவள் கற்பு மூலம் தன்னுடைய குலத்தகுதி இழக்கப்படுகிறாள் என்பதே காரணம். ஆகவே சாதி முறை ஒழிந்தால்தான் பெண் விடுதலையும் சாத்தியமாகும்.

பெண் விடுதலைக்காகவும், உரிமைக்காகவும் பல சீர்திருத்த அமைப்புகள் தோன்றின. அரசின் சமூக சட்டங்கள் பல தோன்றின. 18,19ஆம் நூற்றாண்டில் பெண்கல்வி அறிமுகம், பெண்கள் வேலைவாய்ப்பு களில் பங்கேற்கத் தொடங்கினர். விஞ்ஞான வளர்ச்சி அடைந்த காலத்தில் பெண்கள் பாதுகாப்புக்கு பல சட்டங்கள் இயற்றிய போதும் ஆங்காங்கே பெண்களின் வளர்ச்சி ஏதோ ஒரு காரணத்திற்காக முடக்கப்பட்டும் நசுக்கப்பட்டும் வருகின்றது. இந்த முடக்கம் என்பது குறிப்பிட்ட சாதிப் பெண்களுக்கு என்று இல்லாமல் மேல்சாதி பிராமணப் பெண்கள் முதல் அடித்தட்டு வரையில் உள்ள சூத்திரப் பெண்கள் வரையும் அடங்கியுள்ளனர். நவீன சமூகத்தில் பெண்கள் சுதந்திரம் பற்றிப் பேசப்பட்டு வந்தாலும் சமூகக் கட்டமைப்பு என்னும் விதி பெண்ணை இறுக்கியே பிடித்திருக்கிறது எனலாம். இதற்கு மாறாக சொத்துடமை, கல்வியறிவு இல்லாத பழங்குடி சமூகத்தில் இன்றும் பெண்கள் தங்களுடைய முழு சுதந்திரத்தை எவ்வித தடையுமின்றி அனுபவித்து வருகிறாள். ஆண்களும் பெண்களும் சமமாக வாழ்கின்றனர். ஆண்கள் பெண்களுக்கு எந்த விதமான தடையும் ஏற்படுத்துவதில்லை. சமகால மனித சமூதாயம் பேசும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், பெண் விடுதலை, பெண் உரிமை, பாலின சமத்துவம் பேசும் நவீன சமூதாயம் அதற்கான பல கூறுகளை தக்க வைத்திருக்கும் பழங்குடி சமூகத்தி லிருந்து இவையெல்லாம் கற்றுக் கொள்ள வேண்டியது மிக அவசியம்.

**துணைநூற் பட்டியல்**


அம்பேத்கர். 1990. இந்தியாவில் சாதிகள். மதுரை: கார்முகில் பதிப்பகம்.

ஐயங்கார். 2013. டாக்டர் அம்பேத்கர். சென்னை: வ.உ.சி.நூலகம்.

சசிவல்லி, வி.சி. 2010. தமிழர் திருமணம். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

சாமி, பி.எல். 2011. தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

சுப்பிரமணி, கா. 2011. சங்க காலச் சமூதாயம். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

தந்தை பெரியார். 2010. பெண் ஏன் அடிமையானாள்?. சென்னை: பாரதி புத்தகாலயம்.

பக்தவத்சல பாரதி. 2008. தமிழர் மானிடவியல். திருச்சி: புத்தாநத்தம்.

மாணிக்கம், வ.சுப. 2002 (1962). தமிழ்க் காதல். சென்னை: பாரி நிலையம்.

மனோன்மணி சண்முகதாஸ். 2007. சங்ககாலத் திருமண நடைமுறைகள். கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம்.

ராஜம் கிருஷ்ணன். 1994. காலந்தோறும் பெண்கள். புது டெல்லி: நேஷனல் புக் டிரஸ்ட்.

லெஸ்லி, சி. ஒர். (தமிழில்: வி. நடராஜன்). 2005. தமிழகக் கல்வெட்டுகளில் பெண்கள். கோயம்புத்தூர். விடியல் பதிப்பகம்.

வீரமணி, கி. 2009 (2004). அசல் மனுதரும சாஸ்திரம். சென்னை: திராவிடர் கழக வெளியீடு.



எங்களது பயனுள்ள வெளியீடுகளில் சில...
திருக்குறள் உரைக் களஞ்சியம்
ரூ.990
பாரதியார் கவிதைகள்
ரூ.990
சித்தர் பாடல்கள்
ரூ.750
நீதி நூல் களஞ்சியம்
ரூ.880
எது தர்மம்?
ரூ.85
மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்
ரூ.130
சிந்தனை விருந்து
ரூ.65
வானமே நம் எல்லை
ரூ.95
உன்னைச் செதுக்கி உயர்வு பெறு
ரூ.130
திருமந்திரம்
ரூ.900
திருவாசகம்
ரூ.230
கற்பகம் புத்தகாலயம்
சென்னை
பெரிய புராணம்
ரூ.250
சித்தர் களஞ்சியம்
ரூ.280
STALL NO
36-37
கற்பகம் புத்தகாலயம்
4/2, சுந்தரம் தெரு, தியாகராய நகர், சென்னை-17,
தொலைபேசி: 044-24314347/9600063554
www.karpagamputhakalayam.com/ karpagamputhakalayam@gmail.com


# உலகத் தமிழ்க் களஞ்சியம்

முதன் முதலாக

தமிழ்- தமிழர்- தமிழ்நாடு- பற்றி முழுமையாக விளக்கும் அறிவுத்திரட்டு.

ஒரே நூல் ஒரு நூலகம்

## விலை: ரூ2700




தமிழின் வல்லமையைத் தமிழர் உணர வழிகாட்டும் அறிவுக்களஞ்சியம்

தமிழின் சொத்து மதிப்பை வரையறுத்துக் காட்டுகிற ஆவணம்

பற்பல இடங்களில் தேடவேண்டியவை அனைத்தும் ஒரே இடத்தில்!

3 தொகுதிகள்
2000 க்கும் மேற்பட்ட பக்கங்கள்
16,000 க்கும் மேற்பட்ட செய்திகள்.

ரிதம் நூல் பகிர்வாளர்
Rhythm Book Distributors

Old 4, New 93 Jeenis Road, Saidapet, (Near Saidapet Railway Station),
Chennai - 600 015. Ph : 044 2436 0888 / 2436 1801,
senthil@rhythmbooks.in

கிடைக்குமிடம்:

உலகத் தமிழ்க் களஞ்சியம் ஸ்டால் எண்: 479
ரிதம் நூல் பகிர்வாளர் ஸ்டால் எண்: 175, 176, 267, 268
Info Maps Stall Nos.: 553, 554, 641, 642



# மாமனிதரைப் போற்றுதும்...

**பேரா. ச.சு. இராமர் இளங்கோ**

**நா**ன் பாரதிதாசனைப் பற்றி முனைவர் பட்ட ஆய்வு செய்துகொண்டிருந்தபோது காஞ்சிபுரத்தில் உள்ள பச்சையப்பன் கல்லூரியில் ஆங்கிலத்துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த பேராசிரியர் மணவாளன் அவர்களைச் சந்தித்தேன். பாரதிதாசனைப் பற்றி நான் ஆய்வு செய்வதாகக் கூறினேன். பேராசிரியர் மனம் மகிழ்ந்து Convention and revolt என்னும் நூலை நூலகத்திலிருந்து எடுத்துக் கொடுத்து இந்நூலை உங்கள் ஆய்வுக்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்றார். முன்பின் தெரியாத எனக்கு அவருடைய செயல் வியப்பூட்டியது. புத்தகத்தை எப்போது திருப்பித் தரவேண்டும் என்று கேட்டேன். உங்கள் ஆய்வு முடித்தபிறகு தாருங்கள் என்றார் பேராசிரியர்.

என் ஆய்வை முடித்தபின் அந்நூலைப் பேராசிரியரிடம் திரும்ப ஒப்படைத்தேன். தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமைமிக்க ஒருவரை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தேடிக் கொண்டிருந்தபோது பேராசிரியர் மணவாளன் அவர்கள் அந்நிறுவனத்தின் பார்வையில் பட்டார்.

பேராசிரியர் அவர்கள் கோவை பேரூர் கல்லூரியில் புலவர் பட்டமும், திருச்சி சமால் முகமது கல்லூரியில் முதுகலை ஆங்கில இலக்கியமும், முதுகலைத்தமிழ் இலக்கியத்தைத் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்திலும், முனைவர் பட்டத்தை சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலத் துறையிலும் பெற்றவர். பேராசிரியர் அவர்கள் ஒரு பன்மொழிப்புலவர். தமிழ், ஆங்கிலம், தெலுங்கு,

இந்தி முதலிய மொழிகளில் பேசவும் எழுதவும் வல்லவர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் மொழித் துறையில் விரிவுரையாளராகவும், இணைப்பேராசிரியராகவும், பேராசிரியராகவும், துறைத் தலைவராகவும் 1978 - 1996 ஆம் ஆண்டுகளில் பணிபுரிந்தவர்.

நான் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராகப் பணியமர்த்தம் செய்யப்பட்டபின் முதுநிலைப் பேராசிரியர் மணவாளன் ஐயாவைப் பார்க்கச் சென்றேன். மகிழ்ச்சி தெரிவித்துக் கை குலுக்கினார். நல்லது செய்வதற்கு இடதுபக்கம் போகக் கூடாது என விதியிருந்தால் அதை மீறுங்கள் என்று கூறினார். அறிவுடைமையும் துணையுடைமையும் கொண்ட பேராசிரியர் எனக்கு வழங்கிய அறிவுரை.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நான் இயக்குநராக இருந்தபோது பேராசிரியர் அவர்களைப் பதிப்புக்குழுவில் உறுப்பினராகப் பணியமர்த்தம் செய்தேன். நிறுவனத்தில் ஆய்வுத் திட்டப்பணிகளை எழுதும் தகைசால் பேராசிரியராகவும் அவர் தெரிவு செய்யப்பட்டார். உடன் அவர் என்னிடம் வந்து ஒருவர் இரு பதவிகளில் இருக்கக்கூடாது. எனவே பதிப்புக் குழுவிலிருந்து நான் விலகிக் கொள்கிறேன் என்று கடிதம் எழுதித் தந்துவிட்டார்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழக அரசின் ஆய்வுத் திட்டத்தின் ஒரு பகுதியான உலகத் தமிழ் இலக்கிய வரலாறு (901 முதல் 1300 வரை) என்னும் பகுதியை எழுதியுள்ளார். அந்நூலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பதிப்பித்து வெளியிட்டு உள்ளது. தொல் காப்பியப் பொருளதிகாரத்தை அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்தார். புகழ் பெற்ற அம்மொழி பெயர்ப்பு நூலுக்குப் பேராசிரியர் வ.ஐ.சுப்பிரமணியம் நடத்துகின்ற DLA விருது கிடைத்தது. தமிழக அரசின் கபிலர் விருது பெற்று உள்ளார். இராம காதையும் இராமாயணங்களும் (2005) என்னும் நூலுக்குப் பிர்லா அறக்கட்டளையின் சரஸ்வதி சம்மான் விருது பெற்றுள்ளார். தமிழகத்தில் சரஸ்வதி சம்மான் விருது இருவர்தான் பெற்றனர். ஒருவர் இந்திரா பார்த்த சாரதி, பிறிதொருவர் நம் மனதில் வாழும் பேராசிரியர் அ.அ.மணவாளன் அவர்கள் ஆவர். 1988-89 ஆம் ஆண்டில் புல்பிரைட் உதவித்தொகை பெற்று இந்தியானா, சிகாகோ, இவான்சுடன், கொலம்பியா, வாசிங்டன், நியூயார்க்குப் பல்கலைக்கழகங்களில் ஒப்பாய்வுத் துறையில் மதிப்புறு பேராசிரியராகப் பணியாற்றியவர்.

மில்டன் - கம்பனின் காப்பிய மாந்தரின் தலைமைப் பண்பு (1984), இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள் (1995), பக்தி இலக்கியம் (2004), இலக்கியப் பண்பாட்டு ஒப்பாய்வு (2010) போன்ற நூல்கள் இவரின் பெயர் சொல்லும் பெருமை மிக்க படைப்புகளாகும்.

Tamil Research in Journal Dr. Mu. Va.

Tholkappiyam – Porulathigaram of Tholkappiyar in English

Essays and Tribute in Thirukkural

Comparative Study in Literature and Culture

Translation of Thirukkural in English, 3 volumes (செம்மொழி வெளியீடு)

பொருள் புதிது (உலகத்தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு)

அரிஸ்டாட்டிலின் (poetries) கவிதையினைத் தமிழில் மொழிபெயர்த்த பெருமை இவருக்குண்டு.

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிடும் ‘உங்கள் நூலகம்’ என்னும் இதழுக்கு ஆசிரியராக விளங்கிய பெருமைக்குரியவர். புகழ் பூத்த பேராசிரியர் மணவாளன் அவர்கள் உடல்நலம் குன்றி வீட்டில் இருப்பதாக அறிந்தேன். பேராசிரியர் சுந்தரமூர்த்தி அவர்களிடம் மணவாளன் அவர்களைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலை எடுத்துரைத்தேன். அவரும் போகலாம் என்றார். அவரை மீண்டும் நான் சந்தித்தபோது பேராசிரியர் மணவாளனைக் காண வேண்டும் என்ற என்னுடைய கருத்தை நினைவு படுத்தினேன். அவரை இரண்டு நாட்களுக்கு முன் தான் நான் சந்தித்தேன். அவர் என்னிடம் தெலுங்கில் பேசினார் என்றார். நான் அவரிடம் கன்னடத்தில் பேசினால் என்ன? மலையாளத்தில் பேசினால் என்ன? யாருக்கும் புரியாத சமஸ்கிருதத்தில் பேசினால் என்ன? நான் அவரைக் காணவேண்டும் என்ற என் ஆவலை அவரிடம் வலியுறுத்தினேன்.

தொல்காப்பியம், பக்தி இலக்கியம், மொழி பெயர்ப்பு, இலக்கியக் கோட்பாடு, இலக்கிய ஒப்பாய்வு போன்ற துறையில் ஆழங்கால்பட்ட பேராசிரியர் மணவாளன் அவர்களை உயிரோடு இருக்கும்போதே சந்திக்கும் வாய்ப்பு கிட்டாமல் போயிற்று என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், அவரிடம் பயின்ற மாணவர்களுக்கும் ஆழ்ந்த வருத்தத்தைப் பதிவு செய்கிறேன். நாட்டில் அறிஞர்களைப் பார்ப்பது எளிது. ஆனால் நல்ல மனிதர்களைப் பார்ப்பது என்பது அரிது. பேராசிரியர் மணவாளன் அவர்கள் நல்ல மனிதராக - மாமனிதராக விளங்கினார். அந்த மாமனிதரின் புகழ் வாழ்க. ●

# சங்கர் பதிப்பகம்

15/21, டீச்சர்ஸ் கில்டு காலனி,

வில்லிவாக்கம், சென்னை-600 049


தொலைபேசி எண் : 044-26502086

## எங்கள் புதிய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| தமிழ்ச் சான்றோர்கள் | இரா.குழந்தை அருள் | 130.00 |
| இராமாயணம் போற்றும் வாழ்வியல் சிந்தனைகள் | ஆர்.கல்யாணமல்லி | 160.00 |
| மாவீரர் புலித்தேவர் | குன்றில் குமார் | 95.00 |
| மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை | ப.பாலசுப்பிரமணியன் | 100.00 |
| வீரபாண்டிய கட்டபொம்மன் | ப.பாலசுப்பிரமணியன் | 110.00 |
| 108 வைணவ திவ்ய தேசங்கள் | டாக்டர் பா.பெருமாள் | 600.00 |
| சீமந்தம் முதல் சஷ்டியப்த பூர்த்திவரை சடங்குகள் | வேணுசீனிவாசன் | 180.00 |
| முத்திரை யோகம் (விரல்களில் உருவாகும் விநோதக் கலை) | ” | 190.00 |
| சகல காரியசித்தி தரும் திருவிளக்கு பூஜை | ” | 135.00 |
| வியக்க வைக்கும் முன்னோர்களின் விமானங்கள் | ” | 150.00 |
| திருமுறைத் திருத்தலங்கள் (இரு பகுதிகள்) | ” | 700.00 |
| முக்காலம் தொடும் முத்தரையர் வரலாறு | ஆ.சவரிமுத்து | 225.00 |
| புழங்காலச் சோழர் வரலாறு | ” | 180.00 |
| குணக்கியலுக்குப் பயன்படும் எண்கள் | ” | 240.00 |
| சித்தர்கள் செய்த நவபாஷாண சிலகள் | கி.எஸ்.முருகேசன் | 165.00 |
| இலக்கிய இன்பம் | மு.சு.கன்னையா | 220.00 |

# மனித வாழ்க்கையை வளமாக்கும் காப்பியங்கள்

## சி.ஆர்.ரவீந்திரன்




**உலகக் காப்பியங்கள்**
இரா.காசிராசன்
*வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,*
*41- பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்*
*அம்பத்தூர், சென்னை - 600 098.*
*தொலைபேசி எண்: 044 - 26359906*
விலை : ₹ 360/-

**வ**ரலாற்றில் மனித வாழ்க்கை ஓயாமல் தொடர்ந்து இயங்கிக்கொண்டே இருக்கிறது. இயங்குவதோடு மாறிக்கொண்டும் வளர்ந்து கொண்டும் இருக்கிறது. கலை, இலக்கிய, பண்பாட்டு வடிவங்கள் வாயிலாக அவற்றை அறிந்துகொள்ள முடிகிறது. மனித வாழ்க்கையின் பரிணாம வளர்ச்சியில் அதன் மாறுபட்ட தனித்தன்மைகளை இனம் காண முடிகிறது. காடுகளில் விலங்குகளைப் போல சிதறுண்டு பரவலாக வாழத் தொடங்கிய மனித இனம் படிப்படியாக வளர்ந்து இன்று வியக்கத்தகுந்த வகையில் ஓர் உலக சமுதாயமாக வளர்ந்துள்ளது. இந்த வளர்ச்சி மனிதர்கள் ஒருங்கிணைந்த சமுதாயமாக வாழ வேண்டிய சூழல்களின் காரணமாகத் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

ஒவ்வொரு சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சியையும் தீர்மானிப்பதில் கலை இலக்கிய வடிவங்கள் முக்கியமான பங்கு வகிக்கின்றன. வாழ்க்கையிலிருந்து புதிய வடிவம் பெறுவதும், புதிய வடிவத்திலிருந்து வாழ்க்கை வளர்வதும் தவிர்க்க முடியாதவை. அவை, ஏதேனும் ஒருவிதத்தில் வாழ்க்கையை அடையாளப்படுத்துகின்றன. அந்த அடையாளம் வாழ்க்கையினூடே தொடர்ந்து மாறிக் கொண்டே இருப்பதோடு புதிய அடையாளத்தையும் காட்டுகிறது.

அந்த வகையில், உலக நாடுகள் முழுவதிலும் கலை, இலக்கிய, பண்பாட்டு, நாகரிக அடையாளங்கள் தனித்தன்மைகளோடு தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கின்றன. மனித வரலாற்றில் இந்த வாழ்வியல் இயக்கம் தொடர்ந்து நிலைபெற்று இயங்கி வருகிறது. நிறம், இனம், உருவம், மொழி, நடைமுறைச் செயல்கள், மனித உறவுகள் போன்றவற்றில் மாற்றங்களை உருவாக்கிக் கொண்டிருப்பது இயற்கை சார்ந்த வாழ்க்கை பொருளுற்பத்தி முறையும், பங்கீடும், அவற்றின் காரணமாக நிலைபெறும் உற்பத்தி உறவுகளும் அடங்கியவை. பழைய உற்பத்தி முறையிலிருந்து புதிய உற்பத்தி முறைக்கு மனித சமுதாயம் தொடர்ந்து மாறிக்கொண்டே இருப்பதை வரலாறு நமக்கு உணர்த்துகின்றது.

ஒவ்வொரு சமுதாய அமைப்பிலும் உற்பத்தி முறை சிறப்பாக நடைபெற ஒழுங்கான ஓர் ஒருங்கிணைப்பு இருக்க வேண்டும். அந்த ஒருங்கிணைப்பை வரலாறு நெடுகிலும் நிகழ்த்தி வருவது அறம் சார்ந்த கலை, கலாச்சாரப் பண்பாட்டு அடிப்படைகளே. அவையே பொருளுற்பத்திச் சமுதாயத்தை பாதுகாப்பவையாக உள்ளன. மனித உறவுகளை வளர்த்துச் செழுமைப்படுத்துகின்றன. இந்த அடிப்படையில்தான் உலகக் காப்பியங்கள் தோன்றிப் படிப்படியாக வளர்ந்து மனித வாழ்க்கையைப் பாதுகாப்பாக வைத்திருக்கின்றன.

ஓர் எடுத்துக்காட்டாக, முதலில் மகாபாரதத்தையும், இராமாயணத்தையும் எடுத்துக்கொண்டு ஆய்வு செய்தால் இந்த வரலாற்று இயக்கம் பற்றிய புரிதல் கூடுதலாகும். பலவகையான வேறுபாடுகளையும், ஏற்றத்தாழ்வுகளையும், வாழ்க்கை முறைகளையும் உள்ளடக்கியுள்ள இந்திய சமுதாயத்தை ஒழுங்கிணைப்பதில் இந்தியக் காப்பியங்கள் முக்கியமான பங்கு வகிக்கின்றன. பன்முகத் தன்மை கொண்ட இந்தியாவை ஒருங்கிணைப்பதில் இவை நன்மை, தீமைகளை அடையாளப்படுத்தி அறத்தை இனம் காட்டுகின்றன. அறத்தின் அடிப்படையிலான ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கையை இலட்சியக் கண்ணோட்டத்தோடு இவை முன் வைத்தவை 'செவ்வியல்' இலக்கியங்கள். முன் வைத்த இலட்சியக் கண்ணோட்டத்திற்கு மாறாக அறிவியல் கண்ணோட்ட அடிப்படையில் எதார்த்த இலக்கியங்கள் தோன்றி வளர்ந்தமை இருவகையான போக்குகளுமே மனித வாழ்க்கையில் அறவியல் நிலைநிறுத்தவே முனைந்தன.

இதுபோன்ற ஓர் அறவியல் கண்ணோட்டம் உலக இலக்கியங்கள் முழுவதுமே தொடர்ந்து வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு நாட்டுக்கும் அவற்றிற்கே உரிய வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட காப்பியங்கள் தோன்றி வளர்ந்தன. இந்த அடிப்படைக் கண்ணோட்டத்தில் உலக மொழிகளிலெல்லாம் காப்பியங்கள் தோன்றின. அவை தோன்றிய வரலாற்றுப் பின்னணியையும், வாழ்க்கையையும் அடையாளம் கண்டு வரலாற்று வளர்ச்சிக்கு உகந்த விதத்தில் கலை இலக்கியங்கள் தொடர்ந்து வளர்ந்து வருகின்றன. இது, மனித சமுதாயத்தின் வளர்ச்சியை இன்று வரை இனம் கண்டு கொள்ள உதவுகிறது.

இந்த அடிப்படையை உணர்த்தும் விதத்தில் இரா.காசிராசன் தன்னுடைய 'உலகக் காப்பியங்கள்' என்ற ஆய்வு நூலை வடிவமைத்திருக்கிறார். இது வரை, காணக்கிடைத்த உலகக் காப்பியங்களை அவைகளின் உள்ளடக்க அடிப்படையில் குறிப்பிட்டுத் தெளிவுபடுத்துகிறார். இது குறித்த தன்னுடைய முதன்மையான நோக்கத்தை இவர் தெளிவாகவே குறிப்பிடுகிறார்.

"தமிழ்க் காப்பிய ஆய்வாளர்களுக்கு ஒப்பீட்டுக் கல்விக்குப் பயன்படும் வகையில் ஓரளவு உலகக் காப்பியங்களைத் தொகுத்தளிக்கும் முயற்சியே இந்நூல். இதனை, 'உலகக் காப்பிய இலக்கிய வரலாறு' எனல் பொருந்தும். இருபத்து நான்கு உள் தலைப்புக்களில் அமையும் இந்நூலில் முதல் மூன்று தலைப்புக்களில் காப்பியத்தின் தன்மை, தோற்றம், வளர்ச்சி, வகை முதலானவை இடம் பெறுகின்றன. எஞ்சியவை அவ்வந்நாட்டு அல்லது மொழியில் எழுந்துள்ள காப்பியங்களின் தொகுப்புரையே. இங்குச் சில உலகச் சிறப்புமிக்க காப்பியங்களின் கதைப் பகுதியும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. காப்பியம் எழுந்துள்ள காலச்சூழல், ஆண்டு, ஆசிரியர் தொகுத்தார், தொகுப்பித்தார் பற்றிய விவரங்கள் காப்பியத்தின் முக்கிய நோக்கம் முதலானவும் இடம் பெறும்."

"இந்நூல், காப்பிய காலச் சிந்தனைப் போக்கு உலகக் காப்பியங்கள் அனைத்திற்கும் பொது என்ற உணர்வை வாசகர்கட்குத் தோற்றுவிக்கும் என்ற நம்பிக்கை உடையேன்."

தொடக்கத்திலேயே இவர் காப்பியக் கொள்கை குறித்த இவருடைய தெளிவை முன்வைத்துத் தனது கருத்துக்களை வெளியிடுகிறார்.

"காப்பியத்தைக் குறிக்கும் 'எபிக்' (Epic) என்ற சொல் 'எபோஸ்' (Epos) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து ஆக்கப்பட்டது. இக்கிரேக்கச் சொல்லின் பொருள் 'சொல்' அல்லது 'பாடல்' என்பதாகும். காலப்போக்கில் இதன் பொருள் விரிவடைந்து வீரயுகப் பண்பினைக் கருவாகக் கொண்ட நீண்ட கூற்றுவகைப் பாடலைக் குறிக்கப் பயன்பட்டது.

இவருடைய இந்தக் கருத்து, உலக இலக்கியங்களில் எவ்வாறு வளர்ச்சியடைந்து வந்துள்ளது என்பதை இந்த ஆய்வு நூல் மிகுந்த அக்கறையோடும், ஈடுபாட்டோடும் ஆழமாக விளக்கிக் காட்டித் தெளிவுபடுத்துகிறது.

காப்பியங்கள் வரலாற்றினூடாக எப்படிப் பலவிதத்திலும் மாறுபட்டு வளர்ந்துள்ளன என்பதை திறனாய்வாளர்களான சாட்விக், லூயிஸ், ஏ.எஸ். மெகன்ஸி, டி.ஏ.சிங்லர், எம். வின்டர்னிட்ஸ், சர்.ஜான்கிளர்க், சி.எம்.பௌரா போன்றவர்களின் மதிப்பீடுகளை முன்வைத்து காப்பியங்களின் தனித்தன்மைகளையும், பொதுத்தன்மைகளையும் விளக்குகிறார்: "தொல்லிலக்கிய வகையில் காப்பியம் தனிச்சிறப்புமிக்கது. உலக மொழிகள் அனைத்திலும் ஆதி இலக்கியம் காப்பியங்களாக அமையக் காணலாம். இவை பழங்கால மக்களின் நாகரிக பண்பாட்டுக் கருவூலமாக இன்றும் கருதப்பட்டு வருகின்றன. கற்பனை வளமும், சிந்தனைத் திறமை, சுவை உணர்வும், இலக்கிய நயமும் மிக்க ஓர் உன்னதப் படைப்பே காப்பியம். மனித சமுதாயமும், மனித வாழ்க்கையுமே இதன் அடிப்படை."

உலக அளவில், வரலாறு நெடுகிலும் முக்கியமான மொழிகளில் தோன்றிய காப்பியங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அவைகளைப் பற்றிய தனிச் சிறப்புக்களை விலாவாரியாக விளக்குகிறார்.

பாபிலோனிய சுமேரிய காப்பியம் முதலாக, பினீசியா, கிரேக்கம், கீப்ரு, இலத்தீன், ஆங்கிலம், அராபி, பாரசீகம், செர்மன் பிரஞ்சு, ஸ்காண்டிநேவியா, இத்தாலி, நெதர்லாந்து, ருசிய, ஸ்பானிய, போர்ச்சுக் கீசியம், தமிழ், வடமொழி, செர்பியா சுவிஸ், சீனம், சப்பானிய மொழிகளில் தோன்றிய மிகச் சிறந்த காப்பியங் களைப் பற்றிச் சுருக்கமாகவும், தெளிவாகவும், ஆழமாகவும் விளக்குவது இவரின் ஆழ்ந்த ஈடுபாட்டையும் அக்கறையையும் காட்டுகிறது.

காப்பியத்தின் தோற்றத்தை ஜான் கிளார்க் என்ற ஆய்வாளரின் கருத்தை முன்வைத்து இவர் கடவுளின் தோற்றத்தை விளக்குகிறார். "காப்பிய இலக்கியங்கள் இனமரபுக் குழுவினரின் கடவுள் வழிபாட்டிலிருந்து தான் தோன்றியிருக்க வேண்டும்" என்கிறார் அவர். இதனை அவர் மேலும் விளக்குவதைக் குறிப்பிடு கிறார், இவர். "மேலும், அவர் காப்பியம் என்பது தனிமனிதனின் மேன்மையைப் பற்றிப் புகழ்ந்து பாடும் ஒருவகை நாட்டுப்புறப் பாடலே" என்கிறார். இதனை அவர் மேலும் விளக்கிச் சொல்லுகிறார். "முற்கால மனிதன் ஒரு தனி மனிதனின் சின்னம் அல்ல. அவன் ஒரு குழுவினரின் ஒரு சிறிய அங்கம். அவன் சொல்லும், செயலும், எண்ணமும் அவனைச் சார்ந்தவர்களோடு இணைந்தே அமைந்தன. அவன் தன் இனத்திற்காகவும், இனத்தாரின் எதிர்காலத்திற் காகவும் அவர்தம் உயர்வுக்காகவுமே வாழ்ந்தான். தனிக்குழுவினரின் முன்னோன் என்ற நிலையில் அவ்வினத்தாரின் பாதுகாவலனாகவும், பிரதிநிதி யாகவும், வாழ்ந்தான். அதன் மேன்மைக்காகவும் அவன் அரும்பாடுபட்டான். இப்படிப்பட்ட ஒருவிதத் தலைவனே நாகரிகத் தொடக்க கால இனமரபுக் குழுவினரின் வழிபடு கடவுளாகக் காலப்போக்கில் கருதப்பட்டான்."

மனித வாழ்க்கையில் கடவுளர்களின் தோற்றங்கள் குறித்துத் தனது கருத்தை முன்வைத்த இவர் பழைய கிறிஸ்துவ காப்பியம் பற்றிய கருத்தையும் தெளிவு படுத்துகிறார். "மனித ஆன்மா பற்றிய முழுநிலை விளக்கமாக உலகச் சிறப்புடைய ஐந்து இலக்கியங் களில் ஒன்று 'யோபு'. இக்காப்பியம் கீப்ரு மொழியில் எழுதப்பட்டுள்ளது. மனித ஆன்மாவின் போராட்டங் களை எடுத்தியம்புவதால் இது அகவாழ்வியல் காப்பியமாக எண்ணப்படுகிறது."

"கி.மு.4-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்துள்ள இக்காப்பியம் முற்பட்ட காலப் பாடல்கள் பலவற்றை ஒழுங்கு திரட்டி உருவாக்கப் பட்டுள்ளது. 'பழைய ஏற்பாட்டில்' எகிப்திலிருந்து இஸ்ரேலியர் தொடர்ந்த பயணத்தைக் குறிக்கும் பகுதியே இக்காப்பியத்தின் கதைப் பொருள்."

காலம் தோறும் சமுதாயத்தின் தேவைக்குத் தகுந்தபடி காப்பியத்தின் முதல் வடிவம் படிப்படி யாகச் செழுமைப்படுத்தப்பட்டு வளர்ந்து வந்திருக்கிறது என்ற கருத்து இதிலிருந்து புலனாகிறது.

அடுத்து அரேபிய, பாரசீகக் காப்பியம் குறித்து விளக்கும்போது அதன் தனித்தன்மையை இனம் காட்டுகிறார். பாலைவனத்திலும் காப்பியம் தோன்றிய வரலாற்று உண்மையை விளக்குகிறார்.

"கரை காண முடியாத பாலை நிலத்தைக் கடக்கும் வணிகர் கூட்டம் தங்கள் ஒட்டகங்களில் சென்று கொண்டிருக்கும் போது வழித்துயர் நீங்கப் பல சிறுசிறு பாடல்களைப் பாடினர். இவர்களே அரேபிய மக்களுக்குப் பாடல்களைக் கற்றுக் கொடுத்தவர்கள். இப்பாலைவன வழிப்போக்கர் களால் பாடப்பட்ட பாடல்கள் மிகச் சிறியனவாக அமைந்ததால் இவை காப்பிய நிலையையும், தன்மையையும் பெறாது போயின. இப்பழங்காலப் பாடல்கள் இன்று அரேபியர்களிடம் இல்லை. கி.பி. 6-ஆம் நூற்றாண்டில், சிரியா நாட்டு மக்கள் அரேபியர்கட்கு எழுத்துக்களைக் கற்றுக் கொடுத்த பின்னர்தான் அவர்தம் பாடல்கள் எழுத்து வடிவம் பெற்றன. இக்காலக் கவிஞர்கள் ஞானிகளாகவும் மந்திர வாதிகளாகவும் மக்களால் கருதப்பட்டனர். இவர்தம் மந்திர உச்சரிப்புகள் எதிரிகளைத் தோற் கடிப்பதாக நம்பினர்."

"மிகப் பழங்காலத்து. முற்பட்ட இஸ்லாமியப் பாடல்கள் தங்க மையினால் எழுதப்பட்டு அவை 'மெக்கா'விலுள்ள 'காபா'வில் பூட்டி வைக்கப் பட்டதாகக் கருதப்படுகின்றன. இப்பாடல்கள் 'முத்துத் தொங்கல்' என அரேபியர்களால் அழைக்கப் படுகின்றன." இதுபோன்ற வியக்கத்தக்க செய்தி களை இனம் கண்டு தனது ஆய்வை இவர் நிகழ்த்தி யிருக்கிறார் என்பதை உணர முடிகிறது.

இதைப் போலவே, 'அமெரிக்கக் காவியம்' பற்றிய தனது ஆய்வு அடிப்படையிலான கருத்துக் களை முன்வைத்து அதன் தனித்தன்மையைப் புலப்படுத்துகிறார் இவர்.

"ஐரோப்பியர்கள் அமெரிக்காவைக் கண்டு பிடிப்பதற்கு முன்னர் அக்கண்டத்தில் பலதரப்பட்ட இந்திய மரபினர் வாழ்ந்து வந்தனர். இவர்கள் ஏறத்தாழ 600 வகை வேறுபட்ட மொழி அல்லது வட்டார வழக்கு மொழிகளைப் பேசி வந்தனர். ஆதிகால அமெரிக்கர் தம் சமயம், மரபு முதலான வற்றை அறிய முடியவில்லை. இவர்களிடையே வளமான நாட்டுப் பாடல் மரபு வளர்ந்து இயற்கை பற்றிய புராணக் கதைகளும், வீரர் பற்றிய கதைகளும் மரபு வழியாக ஒருவர்பின் ஒருவராக

வாய்மொழியாகவே கூறப்பட்டு வந்துள்ளன. இவர்கள் பலதரப்பட்ட ஆதிக்குடிகளாகக் காணப் பட்டனர். இக்குடிகள் பண்பாடு, நாகரிகமற்ற நிலையில் விலங்குத் தன்மையுடையவர்களாக வாழ்ந்தனர். எனவே, இவர்தம் புராணக் கதைப் பாடல்களும், நாட்டுப் பாடல்களும் இத்தன்மை யதாகவே அமைந்தன.''

ஒப்பீட்டுக் கண்ணோட்ட ஆய்வு முறையில் இவர் சைன, சப்பானியக் காப்பியங்களை மதிப்பிடு கிறார். மேற்கத்திய நாட்டுக் காப்பியங்களை முன் வைத்து அவற்றுடன் இவைகளை ஒப்பிடுகிறார்.

''ஐரோப்பிய நாடுகளில் காணப்படுவது போன்று சிறந்த காப்பியங்கள் சைன, சப்பானிய இலக்கியங்களில் காணப்படவில்லை. இதற்குப் பதிலாக முல்லை நிலத்து ஆயர் வாழ்வு பற்றிய பாடல்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. 'ஒயிட் ஆஷ்டர்' அல்லது கடமையுணர்வுடைய 'நங்கை சிரகிகுவின் கதை' என்னும் காதல் பாடல் இவ்விரு மொழி இலக்கியங்களிலும் காப்பியச் சிறப்பைப் பெற்றுள்ளது. பேராசிரியர் ஐனோவ் இதனைச் சைன மொழியில் கவிதை நடையில் எழுதினார். இதனைத் தழுவி நாபுமி ஒச்சியே என்பவர் சப்பான் மொழியில் எழுதியுள்ளார்.

தொடர்ந்து 'இந்தியக் காப்பியம்' குறித்த எனது ஆய்வை முன்வைத்து விரிவாகவும், தெளிவாகவும், ஆழமாகவும் விளக்குகிறார். குறிப்பாக, 'வட மொழிக் காப்பியமே இந்தியக் காப்பியத்தின் அடிப்படை' என்பதை இவர் நிறுவுகிறார்.

''இந்திய மொழிகளில் காலத்தால் முற்பட்டதும் இலக்கிய வளம் நிறைந்த மொழியும் சமஸ்கிருதமே. இந்தியப் பொது இதிகாசங்களும் 'பதினெண் புராணங் களும் முதன் முதல் எழுதப்பட்டது வடமொழியிலே தான்'. பல இந்தியக் காப்பியங்களும் இம் மொழியின் இதிகாச, புராண, மகா காவியங்களில் தழுவல்களாகவே அமைகின்றன. தமிழில் உள்ள பெருங்கதை, சிந்தாமணி, சூளாமணி, யசோதர காவியம், குண்டல கேசி, அரிச்சந்திரபுராணம் முதலானவும் வடமொழித் தழுவலாக அமைவனவே. தமிழ், மலையாளம், கன்னடம் முதலான மொழி களைத் தாய்மொழியாக உடைய பண்டிதர்களும் வடமொழி கற்று அம்மொழியில் பல எண்ணற்ற காப்பியங்களைப் படைத்துள்ளனர். இது இம் மொழிக்கமைந்தது ஒரு தனிச் சிறப்பாகும். இதிகாசங்கள், புராணங்கள், மகாகாவியங்கள், சம்பு, சந்தேச காவியங்கள் பிறமொழிகளில் எழ, வட மொழியே மூலமாக அமைந்துள்ளது. இக்காப்பியங் களின் இலக்கிய நூலும் முதல்முதல் வடமொழியில் தான் எழுதப்பட்டுள்ளது. இராமாயணமும், பாரதமும் இதிகாசங்களாக அமையினும் காப்பிய வகையில் அடங்குவனவே. மேனாட்டார் பகுப்பு முறைப்படி, இவை முன்முறைக் காப்பியங்களாக அமைவன. இவற்றில் காலத்தால் முற்பட்டது இராமாயணமே.''

தொடர்ந்து இவர் வரலாற்றுக் காவியங்கள் பற்றியும் குறிப்பிடுகிறார். ''இதிகாச புராணங்களி லிருந்தும், கல்வெட்டுக்களிலிருந்தும் வளர்ந்தனவே வரலாற்றுக் காப்பியங்கள். வரலாற்று வேந்தர்களின் வரலாறு சிலவும், தென்னாட்டு வேந்தர்களால் விஜயநகர வேந்தர், தஞ்சை நாயக்க, மகாராஷ்டிர மன்னர்கள் ஆகியவர் தம் வரலாறும் பல வடமொழிக் காப்பியப் பொருளாக அமைந்துள்ளன.''

வரலாற்றுக் காப்பியங்களுக்குத் தகுந்த எடுத்துக் காட்டுகளாக விளங்குபவை 'ஹர்ஸசரிதம்', 'கௌடவதம்', 'விக்கிரமாங்க தேவ சரிதம்', இராஜதரங்கிணி, விஜயநகர வரலாறு, தஞ்சை வரலாறு போன்றவற்றைக் குறிப்பிட்டு அவற்றில் மாறுபட்ட தன்மைகளையும் இவர் தெளிவுபடுத்து கிறார்.

தொடர்ந்து, அஸ்ஸாம், இந்தி, உருது, ஒரியா, காஷ்மீரி, குஜராத்தி, பஞ்சாபி, மராத்தி, வங்காளி, கன்னடம், தெலுங்கு, மலையாளம், தமிழ் போன்ற இந்திய மொழிகளில் காணப்படும் காப்பியங் களையும் அவற்றின் தனித்தன்மைகளையும் இவர் அடையாளப்படுத்துகிறார்.

'தமிழ்க் காப்பியங்கள்' குறித்துத் தனது மதிப்பீடுகளை முன்வைத்து அவற்றின் வகையினங் களை விவரிக்கிறார்.

''தமிழில் காப்பியங்களை இதிகாசம், புராணம், பெருங்காப்பியம், காப்பியம், கதைப் பாடல், சிற்றிலக்கியம் என வகைப்படுத்தலாம். இவற்றி டையே சில சிறுசிறு வேறுபாடுகள் காணப்படினும் இவற்றைக் காப்பியங்கள் என்றே கொள்கின்றனர். வடமொழியில் கவியால் எழுதப்படும் அனைத் தையும் 'காவியம்' என்ற சொல்லால் குறிக்கின்றனர்.''

தமிழில் எழுதப்பட்டுள்ள தற்காலக் காப்பியங் களையும் இனம் கண்டு அவற்றைக் குறித்த தனது தெளிவான கருத்தை முன்வைக்கிறார்.

''தற்காலக் காப்பியங்கள் பெரும்பான்மையும் கதைப்பாடல்களே. பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன், கவிமணி, முடியரசன், புலவர் குழந்தை, கவியோகி சுத்தானந்த பாரதியார் முதலானோர் தற்காலக் கதை, காப்பியங்கள் பாடியுள்ளனர். 'காவியம்' என்ற பெயரில் இவர்தம் கதைப் பாடல்கள் குறிக்கப்படுகின்றன.

இவற்றிற்கு முன்மாதிரியாகத் தமிழில் விளங்கி வந்த காப்பியங்களையும் இவர் குறிப்பிட்டு அவை குறித்த தனது கருத்துக்களை வலியுறுத்துகிறார். அவற்றில் பெருங்கதை, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, சூளாமணி, நீலகேசி, உதயண குமார காவியம் போன்றவை அடங்கும்.

அதே சமயம் மறைந்து போன தமிழ் காவியங் களைக் குறித்தும் தனது கருத்துக்களை முன் வைக்கிறார்.

“தமிழ் இலக்கிய வரலாற்றில் எண்ணற்ற நூற்கள் பெயரளவில் மட்டுமே நின்று நிலைபெறக் காண்கிறோம். உரையாசிரியர்களின் உரைக் குறிப்புக் களால் இவற்றை அறிகிறோம். அவர்களே சில நூல் களிலிருந்து பாடல்களை எடுத்து மேற்கோள் காட்டு கின்றபோது தாங்கள் பாடல்களை எடுத்தாண்ட நூலின் பெயரைக் காட்டாது விட்டு விடுகின்ற இடங் களும் உண்டு. இங்ஙனம் எடுத்தாண்ட பாடல்கள் பல இன்னும் எந்தெந்த நூற்களுக்கு உரியன என்று இன்றும் அறிய முடியாதவாறு இருந்து வருகின்றன. காப்பிய இலக்கியங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. பழைய நூற்களின் அழிவிற்குப் பல காரணங்கள் உண்டு. புதுவருடப் பிறப்பின் போது பழைய பொருட்களை ஆற்றில் வீசி எறியும் வழக்கத்தால் பல ஏடுகள் அழிந்ததாக மு.அருணாசலம் குறிப்பிடுவார். அதோடு சமயப் போராட்டங்களும், மக்களின் கவனக் குறைவும் இதற்கு அடிப்படைக் காரணம் எனலாம். இன்று கிடைத்துள்ள இலக்கியங்களினும் அழிந்துபட்ட நூற்களே மிகுதி. இன்றும் கூடப் பல நூற்கள் ஏட்டளவில் நின்று பதிப்பிக்கப்படாது அழிந்து கொண்டு வருகின்றன. இப்பகுதியில் பெயரளவில் அறியப்படும் காப்பியங்களையும், சில பாடல்கள் மட்டும் கிடைத்துள்ள காப்பியங்களையும் காணலாம்.”

ஆழ்ந்த ஈடுபாட்டுடனும், கடுமையான உழைப் புடனும் செயல்பட்டு விருப்பு வெறுப்பு இல்லாமல் தனது கருத்துக்களை தெளிவாகவும், துணிவாகவும் இரா.காசிராசன் விளக்கியுள்ளார். ஓர் ஆய்வு நூலை எழுதுவதற்கு இது ஒரு முன்மாதிரியாக அமைந் துள்ளது என்று பெருமைப்படும் விதத்தில் இந்த நூல் அமைந்துள்ளது.

கலை, இலக்கியம், வரலாறு, நாகரிகம், பண்பாடு குறித்த வரலாற்று உண்மைகளையும், வளர்ச்சியையும் தெரிந்து கொள்ள விரும்புவோர் கவனத்திற்கு உள்ளாக வேண்டிய ஓர் அருமையான ஆய்வுநூல் என்று இதைக் குறிப்பிடுவது மிகுதியல்ல. ●

# ஈரோட்டில் நியூ செஞ்சுரி புத்தகக் கண்காட்சி



நேஷனல் புக் டிரஸ்ட் மற்றும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் சார்பில்
ஈரோட்டில் அன்று 15.12.2018 புத்தகக் கண்காட்சி திறப்பு விழா நடைபெற்றது.
மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் தலைமையேற்க,
ஈரோடு மாநகராட்சி ஆணையர் மு.சீனி அஜ்மல்கான் திறந்து வைத்தார்.
நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மண்டல மேலாளர் அ.கணேசன் வரவேற்றார்.
ஈரோடு கிளை மேலாளர் சி.முத்துகிருஷ்ணன் நன்றி கூறினார்.

# JAC Departmental Store

Shri A.M.A. Jayaraman

Old No.15/1, New No.43, Gandhi Salai,

Thiruvarangam, Trichy - 620006

Phone No. 0431-2431532

0091-9677379114



வீட்டு உபயோகத்திற்கான

அனைத்து பொருட்களும் கிடைக்கும்

# நியூ செஞ்சுரியின் விற்பனை சாதனை நூல்கள்





**தமிழகத்தில் சாதி உருவாக்கமும் சமூக மாற்றமும்**
(பொ.ஆ.800-1500)
நொபொரு கராஷிமா, எ.சுப்பராயலு

₹ 70/-





**இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும்**
ந.முத்துமோகன்

₹ 370/-





**பிராமண போஜனமும் சட்டிச் சோறும்**
இடைக்காலத் தமிழகத்தில் வைதீகமும் சாதி உருவாக்கமும்
ஆ.சிவசுப்பிரமணியன்

₹ 75/-





**கார்ல் மார்க்ஸ் வாழ்வும் பணியும்**
தா.பாண்டியன்

₹ 140/-




**லெனின் என்னும் மனிதர்**
தொமாஸ் க்ரொவ்ஸ்
தமிழாக்கம் எஸ்.வி.ராஜதுரை

₹ 155/-




**சோமநாதர்**
வரலாற்றின் பல குரல்கள்
ரொமிலா தாப்பர்

₹ 300/-



# தமிழ்ப் பிரபஞ்சத்தைக் கவர்ந்த பிரபஞ்சன்

பா.வீரமணி

**வை**த்தியலிங்கம் என்ற இயற்பெயரைக் கொண்ட பிரபஞ்சன் புதுவையில் 27-04-1945-இல் பிறந்தவர். வைத்தியலிங்கம் என்ற பெயர், சிறந்த மருத்துவரைக் குறிப்பதாகும். ஆனால், அவர் பின்னாளில் தம் பெயரைப் பிரபஞ்சனாக மாற்றிக் கொண்டார். மக்களின் மனத்தை எழுத்துகளால் வெளுக்க வேண்டி பிரபஞ்சனாக மாறினார் போலும்! பிரபஞ்சனோடு பழகியவர்களுக்கு உடனடியாகத் தெரிவது அவரது கள்ளம் கபடமற்ற அன்பேயாகும். அவரது அடையாளமே அன்புதான். அந்த அன்பு சொல்லிலும் தெரியும்; முகத்திலும் தெரியும். அவரது முழு உடலே அந்த அன்பை வெளிகாட்டும். வயது வேற்றுமை கருதாது எல்லோரிடமும் அன்பு காட்டுபவர்தான் அவர். அதில் தலைமுறை இடைவெளியையே காண முடியாது.

அவரது வாழ்க்கையில் எத்தனையோ ஏமாற்றங்கள், அவமானங்கள்; போதாமைகள், கஷ்டங்கள்; நஷ்டங்கள், இவற்றிற்கிடையே அவ்வப்போது மதிப்புகளும், மரியாதைகளும், பாராட்டுகளும் அவருக்கு வந்த வண்ணம்தான் இருந்தன; எனினும் கஷ்டங்களே மிகுதி. தன் கஷ்டங்களையும் போதாமைகளையும் எவரிடமும் கூறிப் புலம்பியதில்லை; நண்பர்கள் கேட்டாலும் கூறியதில்லை. அப்போதும் புன்னகையையே விடையாக அளிப்பார். எந்தப் பேரலையையும் தாங்கும்

கற்பாறை போல் அவர் எதனையும் தாங்கி நின்றார். அதுதான் அவரது முழுபலம். பாரதியாரை அவ்வப் போது பெருமைப் படுத்திக் கூறும் அவர், பாரதியார் கூறியதற்கிணங்க

"விண்ணின் இடிமுன் விழுந்தாலும்
பான்மை தவறி நடுங்காதே
பயத்தா லேதும் பயனில்லை"

என்ற கவிதைக்கேற்ப நம்முன் வாழ்ந்தவர், அவரோடு பழகியவர், அவரைப் பார்த்தோர் யாரும், அவரை எளிதாக மறக்க முடியாது. அவரது உருவத்தை மறக்க முடியாது. ஆம், அவர் அப்படிப்பட்ட அழகிய தோற்றம்.

நீண்ட உயரம், சிவந்தமேனி; அகன்ற நெற்றி; கூரிய கண்கள்; பெரிய மூக்கு; பரந்த முகம்; சிரித்த பார்வை; நீண்ட பெரிய ஜிப்பா; தோளில் ஜோல்னா பை இவைதான் அவரது அடையாளம். இந்த அடையாளத்துடன் அவரைப் பார்க்கும் எவரும், அவரொரு முக்கியமான மனிதர் என்பதை உணர்ந்து விடுவர். அவர் தனது ஜிப்பாவைப் பெரும்பாலும் தரமான துணியில் அழகான வண்ணத்தில்தான் அணிந்திருப்பார். அந்த வண்ணமும் கடுவண்ண மாகவே (Thick and fast colour) இருக்கும். அவர் சுவையான காப்பியிலும், இசையிலும் எவ்வாறு மோகம் கொண்டிருந்தாரோ அப்படித்தான் ஆடையின் வண்ணத்திலும் பற்றுக் கொண்டிருந்தார். எப்போதும் பளிச்சென்று காட்சியளிப்பார். பெரும் பாலும் வெளியே கையில் சிகரெட்டுடன் இருப்பார். பலவற்றிலும் நேர்த்தியைக் கடைப்பிடித்த அவர், இந்தச் சிகரெட்டில் எப்படிக் கடைப்பிடிக்காது போனார் என்பது புரியவில்லை; இந்தப் புகைதான் அவருக்குப் பகையானது. அந்தப் புகைதான் அவரது உயிரைப் பறித்து நம்மிடையே இருந்து பிரித்து விட்டது. இது எல்லோர்க்கும் ஓர் எச்சரிக்கையாய் உள்ளது. எதிலும் சமரசத்திற்கு உட்படாதவர், சிகரெட்டுடன் சமரசமானதுதான் விந்தை.

பிரபஞ்சன் எதிலும் வெளிப்படையானவர். அதிகாரத்திற்கோ ஆசைக்கோ அடிபணியாதவர்; எதிலும் நிமிர்ந்து நின்றவர். எவர் முன்பும் குறுகி அடங்கிப் போகாதவர். நீதியில்லாத நியாயமில்லாத கருத்தை எந்நிலையிலும் ஏற்க மாட்டார். எத்துணைப் பெரியவரிடத்திலும் தம் நியாயத்தை அஞ்சாது கூறும் இயல்புடையவர். ஓர் உண்மையான எழுத்தாளர் எப்படியிருக்க வேண்டுமோ அப்படியிருந்தவர் அவர். இருபது ஆண்டுகளுக்கு முன்னர், தினமணியில் "கலைஞர் காண வேண்டிய களங்கள்" எனுந் தலைப்பில் ஓர் அரிய கட்டுரையை வரைந்திருந்தார். அதில் கலைஞர் வருங்காலத்தில் செய்ய வேண்டியன எவை எவை என்பதை வெளிப்படையாக நயமாக, ஆனால் உறுதியாக எழுதியிருந்தார். அதில் தம் அஞ்சாமையை நியாயத்தைப் புலப்படுத்தி இருந்தார். இதனைக் கலைஞர் ரசித்து வரவேற்றதாகக் கேள்வி.

பிரபஞ்சனுக்கும் மற்ற எழுத்தாளர்களுக்கும் சில வேறுபாடுகள் உண்டு; அவற்றில் ஒன்றை இங்குக் குறிப்பிடுவது முக்கியம். பண்டிதர்களுக்குப் படைப் பிலக்கியம் படைக்க வராது என்பது ஒரு கூற்று. உலக அளவிலும் அது உண்மைதான்; பண்டிதர்கள் பெரிதும் ஆராய்ச்சியில் இறங்கி விடுவதால் படைப்பதில் அவர்களுக்கு ஆர்வமும் முயற்சியும் குன்றிவிடுகின்றன. அதனால் அவர்களால் படைக்க முடிவதில்லை. வயது முதிர முதிர அழகு குன்றி விடுவது போல், ஆராய்ச்சி பெருகப் பெருகக் கற்பனை குன்றிவிடும் என்பார் மு.வ. இது பெரிதும் உண்மையேயாகும். உலக அளவில் டி.எஸ்.எலியட் போன்ற சிலரே ஆராய்ச்சியிலும், புதிதாகப் படைப்பதிலும் வல்லவராக இருந்துள்ளனர். இந்தியாவைப் பொருத்தவரை கன்னட உலகில் முனைவர் பைரவப்பா, சிவராம் காரந்து போன் றோரையே குறிப்பிட முடியும். தமிழ் உலகில் மு.வ.வும், நா.பார்த்தசாரதியும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் வரிசையில் காத்திரமாக விளங்குபவர் பிரபஞ்சன். அவர் தமிழை முறையாகக் கற்றவர்; கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் பெரும்புலவர்களிடம் பாடங்கேட்டுப் புலவர் பட்டம் பெற்றவர். பாரதி, பாரதிதாசன் ஆகியோரின் தாக்கத்தால் தொடக்கத்தில் கவிதையில் ஆர்வம் இருந்திருந்தாலும், பத்திரிகைத் தொழிலாலும், வேறுசில காரணங்களாலும் கட்டுரை, சிறுகதை நாவல் எழுதுவதில் ஆர்வம் கொண்டு தனித்தடம் பதிக்கலானார்.

பிரபஞ்சன் ஒரு முற்போக்குச் சிந்தனையாளர்; முற்போக்குப் படைப்பாளர். அவரது எழுத்து பெரிதும் அடித்தட்டு மக்களைப் பற்றி பெண் மக்களைப் பற்றியதாகவே இருந்தன. பெண்களின் முன்னேற்றத்தில் பேரீடுபாடு கொண்டவர். உண்மையைக் கூற வேண்டுமென்றால் அதில் அவர் தலையாயவர். இதனைப் போன்றே சக எழுத்தாளர்களின் எழுத்துத் திறத்தை மனம் திறந்து பாராட்டுபவர். இதில், அவருக்குத் தெரிந்தவர், தெரியாதவர் என்ற பாகுபாடே கிடையாது. பத்திரிகையில் வரும் நல்ல கதைகளைக் கண்டால் உடனே தேடிப்பிடித்துப் பாராட்டுவார். அவர் எல்லோரையும் நேசித்தார். உண்மையைக் கூற வேண்டுமெனின் அவர் நல்லவர்களின் நல்லவர். அநியாயத்துக்கு நல்லவர்; சூதுவாது அற்ற நல்லவர்.

*அவருடைய நல்ல குணத்திற்கு ஒரு நிகழ்வைச் சுட்டிக் காட்டுவது ஏற்றது. ஒருமுறை ஓர் இலக்கிய நிகழ்வுக்கு அவரை அழைத்திருந்தனர். இவரும் சென்றார். அங்குப் பேசினார். அவரைப் பாராட்டி பெரிய வாழ்த்து மடலையும் தந்தனர். இரவு நேரம் அதிகமாகி விட்டதால் விழா முடிந்ததும் வீட்டிற்குப் புறப்பட்டார். ஏற்பாடு செய்தவர்கள் அவரைத் திரும்ப அனுப்பப் போக்குவரத்து வசதியைச் செய்யாததுடன், போக்குவரத்துக்கான பணத்தையும் அளிக்கவில்லை. அவரும் அவர்களிடம் எதனையும் கேட்கவில்லை. வீட்டிற்குப் புறப்பட்ட போதுதான் அவருக்கு ஒன்று தெரிய வந்தது. அதாவது, அவர் வீட்டிலிருந்து புறப்படும்போது பணத்தை எடுத்துவர மறந்துவிட்டார். அதனால், அந்த இரவில் அந்தப் பெரிய வாழ்த்து மடலை வரும் வழியில் ஒரு மரத்தின் மீது சார்த்திவிட்டுக் கால்நடையாகவே நடந்து வீட்டிற்கு வந்திருக்கிறார்.*

*இலக்கியப் பேச்சு இப்போது பெரும் வணிகமாகி விட்டது. கள்ள வணிகமாகிவிட்டது. இலக்கிய வாணர்கள் அறவிலை வணிகர்களாக வலம் வருகிறார்கள். இதனை நினைக்கும்போது தமிழ்த் தென்றல் திரு.வி.க. கூறியதுதான் நினைவுக்கு வருகிறது. அவர் ஒரு சமயம் இந்நாட்டு மக்களை எண்ணி "ஐயோ தமிழ்நாடே! உனக்கொரு ஐயோ!" என்றார். பிரபஞ்சனை ஐயோவென்று விட்டவர் களை நோக்கி "ஐயோ மக்களே" என்றுதான் கூற வேண்டி உள்ளது. உண்மையான மனிதரை இம் மக்கள் எப்போதுதான் அறியப் போகிறார்களோ! யாம் அறியோம் பராபரமே!*

*நல்ல எழுத்தாளர்கள் சிறந்த பேச்சாளர்களாக இருப்பதில்லை. சிறந்த பேச்சாளர்கள் நல்ல எழுத்தாளர்களாக இருப்பதில்லை. பிரபஞ்சன் நல்ல எழுத்தாளர் என்பது ஊரறிந்த உண்மை; ஆனால் அவர் பேச்சின் மகத்துவத்தைப் பலர் அறியார். அவர் தனித்தன்மை வாய்ந்த பேச்சாளர். பிரபஞ்சனின் பேச்சில் அலங்காரம் இருக்காது; அடுக்குமொழி இருக்காது; ஆர்ப்பரிப்பு இருக்காது. அறிவு இருக்கும்; அழகு இருக்கும்; அனுபவம் அமைதியாகப் பவனி வரும்; ஒரு முதிர்ந்த எழுத்தாளரின் அனுபவம் எப்படி அறிவுக்கதிராக அமைதிச் சுடராக வெளி வரும் என்பதற்கு அவரின் பேச்சுத்தான் சான்று. எல்லாவற்றைக் காட்டிலும், அவர் பேச்சில் உள்ள உடல்மொழி மகத்தானது. அதுதான் அவரது தனித்திறன். இதனை முன்னிட்டுத் தான் அவர் பேச்சை யாராலும் பேச முடியாது என்றேன். தோழர் ஜீவாவின் பேச்சிலும் உடல் மொழி உண்டு; எம்பி எம்பிப் பேசுவார். இரு பக்கமும் திரும்பித் திரும்பிப் பேசுவார். கைகளைத் தூக்கித் தூக்கிப் பேசுவார். அவரது பேச்சு எரிமலை போன்றது. கேட்போரைக் கிறங்கடிக்கும். அவரது ஆவேச உடல்மொழி தீமைகளைக் கொன்றழிப்பது போல் காட்சி தரும். அவர் உடல்மொழி ஊழிக் கூத்துப் போன்றது; பிரபஞ்சனின் உடல் மொழி நளினமானது; தென்றல் போன்றது. அவர், சொல்லில் புலப்படுத்துவதை அவரது முகமும், கைகளும், அசைவும் கூடுதலாகப் புலப்படுத்தும். இசைக்குப் பக்க வாத்தியம் போல், அவரது பேச்சுக்கு உடல் மொழி பலம் தரும். அந்த உடல் மொழி, கேட்போரின் உள்ளங்களில் பசுமரத்து ஆணி போல் பதியும். ஓர் எழுத்தாளரின் கதையை அதே எழுத்தாளர் கூறுவதைக் காட்டிலும் பிரபஞ்சன் கூறுவது சுகமாக இருக்கும். காரணம், பேச்சுடன் உடல்மொழி இணைவதுதான்.*

*கொடிய நோய் கடைசி நாட்களில் அவரது குரலை நிறுத்தியது; பேச்சை ஒடுக்கியது. புதுவையி லுள்ள மணற்குள விநாயகர் மருத்துவமனையின் மூன்றாம் மாடியிலுள்ள தனியறையில் 20-12-2018 அன்று காலை 11.45 மணிக்கு அவரைக் காணச் சென்றேன். A1 - அறையில் அவரைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். அவரது உடல் படுக்கையுடன் ஒட்டியிருந்தது. உடல் என்று சொல்வதற்கு ஏது மில்லாமல் அக்கொடிய நோய் அவரைச் சூறையாடி இருந்தது. அந்நிலையிலும், என்னைப் பார்த்ததும் வாங்க வாங்க எனும் தோரணையில் தலையை அசைத்தார். ஏதும் பேச அவரால் முடியவில்லை. அவருடைய மூத்தமகன் கௌதம் அருகில் இருந்தார். ஆக்ஸிஜன் பொருத்தப்பட்டு இருந்தும் மூன்று முறை இருமினார். சத்தம் இல்லாத சத்தம். சிறிது நேரம் இருந்துவிட்டு, கௌதமனுக்கு ஆறுதல் கூறி, பிரபஞ்சனைக் கையெடுத்துக் கும்பிட்டுப் பிரியா விடை பெற்றேன்; என் நெஞ்சம் கனத்தது; விம்மியது. ஒரு நல்ல மனிதருக்கா இந்த நிலை? அய்யோ! இயற்கையே என்று விம்மினேன். மறுநாள் 21-12-2018 அன்று பகல் 12.30 மணிக்கு என் நண்பர் என்னைத் தொடர்பு கொண்டார். எழுத்தாளர் பிரபஞ்சன் காலை 11.30 மணிக்குக் காலமானதாகக் கூறினார். "இன்னாது அம்ம இவ்வுலகம்" என்ற சங்கப் பாடல்தான் நினைவுக்கு வந்தது.*

*பிரபஞ்சன் ஏழை எளியவர்களுக்காக ஒடுக்கப் பட்ட மக்களுக்காக பெண்களுக்காக எழுதினார். பெண்ணியவாதிகள் பெண்ணியம் பேசு வதற்கு முன்பே, தம் கதைகளில் பெரியாரின் பெண்ணியத்தைப் பேசியவர். தம் கதைகளில் பெண் களுக்கு முக்கிய*

இடத்தை அளித்து அவர்களைப் பெருமைப்படுத்தியவர். ஒரு கதையில் சுமதி எனும் கதைமாந்தர். இவர் அரசு அலுவலராக இருந்தார். சேரிகளைத் தொலைதூரத்தில் அப்புறப்படுத்த வேண்டுமென்று பைல் வருகிறது. அதில் ஏழை மக்களைத் தொலை தூரத்திற்குத் துரத்துவது மனித நேயமாகாது என்று கூறிச் சில காரணங்களைக் குறிப்பிடுகிறார். அதனைக் கண்ட மேலதிகாரி "இப்படியெல்லாம் கம்யூனிஸ்ட் தனமாக குறிப்பு எழுதக் கூடாதெனக் கடிந்து எழுதுகிறார். அதனைக் கண்டு சுமதி எழுதியுள்ள குறிப்பு முக்கியமானது.

"கம்யூனிஸ்டாக இருப்பது ஏதோ சமூக விரோதியாக இருப்பது போன்று தாங்கள் கருதினால் அது தவறு; நான் கம்யூனிஸ்ட் இல்லை. என்னைப் போன்ற ஜனங்கள் துயரப்படுகையில் அவர்களுக்கு ஆதரவாக இருப்பதும், உதவுவதும், அவர்களின் போராட்டங்களில் ஆத்மார்த்தமான பங்களிப்புச் செய்வதும் கம்யூனிசம் என்றால் அந்த அர்த்தத்தில் கம்யூனிஸ்ட் என்றே ஒப்புக்கொள்கிறேன்."

இந்தக் குறிப்பிலிருந்து பிரபஞ்சனின் நோக்கு நிலையை நன்குணரலாம். பிரபஞ்சனின் கதைகளின் உள்ளடக்கம் மட்டுமன்றிக் கதைகளின் தலைப்புகளும் அழகானவை; அற்புதமானவை. பல தலைப்புகள் பாரதியின் வைர வரிகளாகும். "கனவு மெய்ப்பட வேண்டும்", "மானுடம் வெல்லும்", "வானம் வசப்படும்" என்பவை அவற்றில் சில. கதைகளுக்கு இத்தலைப்புகள் மணிமுடிகளாக விளங்குகின்றன. பிரபஞ்சனைப் போலவே அவரது கதைகளும் கதைகளின் தலைப்புகளும் வசீகரமானவை. இந்த வசீகரம் பலரைக் கவர்ந்தது. அவர்களில் மூவர் மிக மிகப் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்கள். அம்மூவர் யார்? ஒருவர் நடிகர் சிவகுமார். சில ஆண்டுகளுக்கு முன் பிரபஞ்சனின் இதய அறுவை சிகிச்சைக்கு உதவியளித்தவர், இரண்டாமவர் டாக்டர் சுப்பிரமணியன். இவர் மணற்குள விநாயகர் மருத்துவமனையில் மருத்துவராக இருந்து பிரபஞ்சனின் மருத்துவத்துக்கு உதவியர். மூன்றாமவர் புதுவை முதல்வர் மாண்புமிகு நாராயணசாமி ஆவார். பிரபஞ்சனுக்கு 2017-இல் புதுவை அரசின் சார்பில், சிறந்த இலக்கிய ஆளுமைக்காக ரூ.10 லட்சம் வழங்கிச் சிறப்பித்ததுடன், பிரபஞ்சன் காலமானவுடன் அவரது உடலை அரசு மரியாதையுடன் அடக்கம் செய்தார். இது பெரிதும் போற்றத்தக்கது. பிரபஞ்சன் எழுதியது போல மானுடம் வென்றிருக்கிறது. அவரின் கதை, கட்டுரைகளின் வாயிலாக மக்களின் கனவுகள் மெய்ப்படட்டும். வானம் வசப்படட்டும். பிரபஞ்சத்தின் சக்தி பெரிது அன்றோ! பிரபஞ்சனின் சக்தியும் அத்தகையதே! வாழ்க பிரபஞ்சனின் எழுத்துகள். ●



நேஷனல் புக் டிரஸ்ட் கன்னியாகுமரி மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் சங்கம் மற்றும்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் இணைந்து நடத்திய 32வது தேசிய புத்தகத் திருவிழா
நாகர்கோவில் மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் சங்கக் கட்டடத்தில் 19-12-18 அன்று நடைபெற்றது.
கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் எம்.வடநேரே அவர்கள்
கண்காட்சியினை திறந்து வைத்தார்.
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி,
மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.ரேவதி,
அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்க அகில இந்தியத் தலைவர் பொன்னீலன்,
தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற
மாநிலத் தலைவர் சி.சொக்கலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# விஜயா பதிப்பகம்

## சென்னை புத்தகக் கண்காட்சி 2019

**Stall no. 728, 729**

கீழே குறிப்பிட்டுள்ள எங்களது நூலாசிரியரின் நூல்கள் அனைத்தும் கிடைக்கும்.

| | |
|---|---|
| திரு. நாஞ்சில் நாடன் | திரு. வெ. இறையன்பு I.A.S. |
| திரு. Dr. K. விஜயகார்த்திகேயன் I.A.S. | திரு. ஜோதி நிர்மலாசாமி I.A.S. |
| திரு. மரபின்மைந்தன் ம. முத்தையா | திரு. Dr. C. சைலேந்திரபாபு I.P.S. |
| திரு. அ. அமல்ராஜ் இ.கா.ப. | திரு. கு. ஞானசம்பந்தம் |
| திரு. சென்னிமலை தண்டபாணி | திரு. சேதுராமன் சாத்தப்பன் |
| திரு. புலவர் சிவஞானம் | திரு. தபுசங்கர் |
| திரு. தங்கவேல் மாரிமுத்து | திரு. ஈரோடு இறைவன் |
| திரு. மு. மாதேஸ்வரன் | திரு. கீரனூர் ஜாகீர்ராஜா |

(எங்களது கோவை ஷோரூமில் அனைத்து பதிப்பகங்களின்
நூல்களும் தொடர்ந்து கிடைக்கும்)

தகவல்களுக்கு 0422-2394614
9047087053

**குறிப்பு :**

புத்தகக் கண்காட்சி அரங்கில் எங்களது நூலாசிரியர்கள் திரு. Dr. K. விஜயகார்த்திகேயன் IAS அவர்கள் 5ஆம் தேதி (மலை 6 மணி)யும், திரு. நாஞ்சில்நாடன் அவர்கள் 6 ஆம் தேதி (மாலை 6 மணி)யும் சிறப்புரையாற்ற உள்ளார்கள். அனைவரும் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

|கட்டுரை|

# காலனியமும் பின்னைக் காலனியமும்

## (இலக்கியத் திறனாய்வுப் பின்புலத்தில்)

முனைவர் உ.கருப்பத்தேவன்

**காலனியம்**

'காலனியாதிக்கம்' மற்றும் அதன் தாக்கம் பற்றிய ஆய்வு, காலனி ஆதிக்கத்திற்குப் பிந்தைய சமுதாயங்களின் வளர்ச்சிக்காகப் பின்பற்றப்பட்ட மூலாதார உத்திகள், கொள்கைகள் என்பனவற்றின் தேர்வுடன் நெருங்கிய தொடர்பும் உறவும் கொண்டதாகும். 'காலனியம்' என்பதற்கு, காலனியச் சமுதாயங்களின் வளர்ச்சியின்மை என்பது, அவை காலனியாவதற்கு முந்தைய காலத்தில் பின்தங்கிய நிலையில் இருந்ததையே புலப்படுத்துகின்றது.

காலனியாதிக்கம் என்பது நவீனமயமாக்கலுக்காக எடுக்கப்பட்ட ஒரு முயற்சி. காலனிய சமுதாயங்கள் இடைநிலையிலுள்ள சமுதாயங்கள் என்னும் கருத்தாக்கங்கள் நிராகரிக்கப்படுகின்றன. 'காலனியம்' என்னும் கொள்கை ஒரு சமுதாயத்தை மற்றொரு சமுதாயம் சுரண்டி அதன்மீது ஆதிக்கம் செலுத்தி, அதன் வளர்ச்சியைக் குன்றச் செய்யும் ஒரு முறையாகும். காலனியம் தனக்கு முந்தைய சமூகக் கட்டமைப்பைப் பாதுகாப்பதில்லை. அதை மாற்றுகின்றது. ஒரு புதிய காலனியக் கட்டமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியாக ஆக்குகின்றது. அந்தப் புதிய காலனியக் கட்டமைப்பு உலக முதலாளித்துவ அமைப்பின் ஒருங்கிணைந்த ஒரு பகுதி" (பிபன் சந்திரா, 'காலனியம்', த.அசோகன் முத்துசாமி (மொ.பெ.ஆ.), பாரதி புத்தகாலயம், சென்னை, 2012, பக்.4-5) என பிபன் சந்திரா விளக்கம் தந்துள்ளார்.

காலனியாதிக்கத்தின் கீழ் இயங்கும் காலனிய நாடுகள் அடிப்படையான மாற்றம் அல்லது நவீனமயமாக்கலுக்கு ஆட்பட்டன. ஆயினும், இது ஏகாதிபத்திய நாடுகளில் சமுதாயங்களின் அசல் பிரதிகளாக மாற்றப்படவில்லை. பொதுவாக, உற்பத்திச் சக்திகள் இடை விடாமல் முழுமையாக மாற்றி அமைக்கப்படுவதற்கு இட்டுச் செல்லும்; வளர்ச்சிப் போக்கிற்கு உட்படுத்துவதற்கு மாறாக, காலனிகள் வளர்ச்சியின்மையையே சந்தித்தன. காலனிகள் நவீனமயமாயின. ஆயினும், அது காலனியாதிக்க நாடுகளில் நிகழ்ந்தது போன்ற முதலாளித்துவ நவீனமயம் அன்று. அவற்றின் எதிர்பிம்பமாக காலனிகள் உருவாக்கப்பட்டன. அதாவது, புதிதாக விடுதலை பெற்ற ஒரு காலனிநாடு, காலனியத்திற்கு முந்தைய நிலைமையிலிருந்து தன்னுடைய வளர்ச்சிப் போக்கைத் தொடங்கவில்லை. அது காலனியாதிக்கக் காலத்தில் உருவாக்கப்பட்ட நிலைமைகளிலிருந்தே தன்னுடைய வளர்ச்சியைத் தொடங்கியது என்பதே 'காலனியம்' என்பதன் பொருளாகும். காலனியத்தின் கூறுகள் வருமாறு:

- ⋆ உலக முதலாளித்துவத்திற்குக் கீழ்ப்படிந்த, அதனிடம் உதவியை எதிர்பார்க்கும் நிலையிலுள்ள காலனிய நாடுகள் முற்றிலுமாகச் சிக்கலான முறையில் அதனுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.
- ⋆ காலனிக்கும் காலனியாதிக்க நாடுகளுக்கும் பரிவர்த்தனைகளும் உள்நாட்டுப் பொருளாதாரமும் வேறுவேறு எனப் பிரிக்கப்பட்டு உள்ளன. அவ்வாறு பிரிக்கப்பட்ட வேறு வேறு பகுதிகள் உலகச் சந்தையின் வாயிலாகவும், ஏகாதிபத்திய மேலாதிக்கத்தினாலும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.
- ⋆ காலனியாதிக்க நாடுகள் உயர்தொழில் நுட்பம், உயர் உற்பத்தி ஆற்றல், உயர் ஊதியம், உயர் மூலதனம் ஆகியனவற்றால் மிகுதியாகத் தேவைப்படும் பொருட்களை உற்பத்தி செய்கின்றன. காலனி நாடுகளில் இவை மறுக்கப்பட்டு குறைந்த ஊதியம் மற்றும் கடின உழைப்பில் மிகுதியாகத் தேவைப்படும் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
- ⋆ காலனியத்தின் உபரி உற்பத்தியையும், இலாபத்தையும் காலனியாதிக்க நாடுகள் தன்வயப்படுத்திக் கொள்கின்றன.

**பின்னைக் காலனியம்**

பின்னை அமைப்பியல், பின்னை நவீனத்துவம் போன்றே 'பின்னைக் காலனியம்' என்னும் கலைச்சொல்லாக்கம் பயன்படுத்தப்படுகின்றது. அமைப்பியலை மறுத்துப் பின்னை அமைப்பியலும், நவீனத்துவத்தை மறுத்துப் பின்னை நவீனத்துவமும் தோன்றின. இந்த அடிப்படையில் 'காலனித்துவம்'

என்ற நிலைப்பாட்டினை மறுத்து அதற்கு எதிராகத் தோன்றியதே பின்னைக் காலனித்துவம் ஆகும். பின்னைக் காலனித்துவம், அடிப்படையில் ஒரு படைப்பாக்க முறையாகவே கொள்ளப்படுகின்றது. பின்னைக் காலனித்துவ இலக்கியம் (Post - Colonial Literature) என்ற சொல்வழக்கு இன்று புத்தாக்கம் பெற்றுள்ளது. பின்னைக் காலனித்துவம் என்பது ஒரு குறிப்பிட்ட கால வரலாற்றின் விளைவாக ஏற்பட்ட ஒரு சிந்தனை வடிவமாகவும், மனப் போக்காகவும் இலக்கிய உலகில் கொள்ளப்படு கின்றது. இது தன்னைச் சார்ந்த ஆய்வு முறையையும் திறனாய்வு முறையையும் முன்வைக்கின்றது.

### பின்னைக் காலனியம் – தொடக்கமும் பின்புலமும்

ஒருநாடு மற்றொரு நாட்டை, அதனுடைய சமூக, அரசியல், பொருளாதாரப் பண்பாடுகளைத் தன்னுடைய ஆட்சியதிகாரத்தின் கீழ்க்கொண்டுவந்து ஆதிக்கம் செலுத்தும்போதே அதனைக் 'காலனித் துவம்' எனக் குறிப்பிடுகின்றனர். இது பழங்கால இந்திய வரலாற்றைப் பொருத்தவரையில் ஆரியர் களின் குடியேற்றத்தில் தொடங்குகின்றது. அவர் களுடைய அதிகாரத்தின் கீழ் பழங்குடியினராகிய திராவிட இனத்தவரின் மேலாண்மை ஒடுக்கப் பட்டது. ஆயினும் பொதுவாக இந்த நவீன காலத்தில் காலனித்துவ ஆதிக்கம் என்பது மூன்று, நான்கு நூற்றாண்டு அளவிலேயே நிலவியுள்ளது. ஐரோப்பியர் களின் பொருள்தேடும் எழுச்சியோடும், அறிவியல் தொழிற்புரட்சியோடும் பல்வேறு நாடுகளின் அரசியல் - புவியியல் வரலாற்றை வீழ்த்தி மாற்றி அமைத்ததோடு இது தொடங்குகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல்வேறு திசைகளில் மேலைநாட்டவரின் குடியேற்றங்களும் ஆதிக்கமும் தொடங்குகின்றன. போர்ச்சுகல், டச்சு, பிரிட்டன், பிரான்சு முதலிய ஐரோப்பிய நாட்ட வர்கள் தங்களுடைய எல்லைகளைத் தாண்டிப் புதிய ஆயுதங்களோடும் உற்பத்திக் கருவிகளோடும் நோக்கம் மற்றும் சிந்தனைகளோடும் பல்வேறு நாடுகளில் அடியெடுத்து வைத்தனர். பிறகு அந்த நாடு களைக் கைப்பற்றினர். பதினேழாம் நூற்றாண்டில் இவ்வாறு ஆங்கிலேய, டச்சு, பிரான்சுப் பேரரசுகள் தோன்றின. இவற்றுள் ஆங்கிலேயரின் ஆதிக்கமே மிகுதி. இந்தியா, மலேசியா, இலங்கை, தென்னாப் பிரிக்கா, ஆஸ்திரேலியா, ஃபிஜி முதலான நாற்பத் தேழு நாடுகள் 1914இல் ஆங்கிலேயரின் காலனி நாடுகள் ஆயின. பிரான்சு இருபது நாடுகளைக் கைப்பற்றியது. இவ்வாறு அடிமைப்பட்டுக் கிடந்த இந்த நாடுகள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல்வேறு போராட்டங்களினால் அரசியல் விடு தலையைப் பெற்றன. ஆயினும், காலனிய ஆதிக்க வடிவங்களும் அதன் தடயங்களும் அந்நாடுகளை விட்டுச் செல்லவில்லை; காலனியாதிக்கத்திற்குப் பின் நவீனக் காலனியாதிக்கம் தோன்றின.

இரண்டு மூன்று நூற்றாண்டுகளாகவே உலகத்தின் முக்கால் பகுதி நாடுகள் நேரடியாகவும், ஓரளவுக்கு முழுமையாகவும் காலனித்துவம் மற்றும் எதேச்சதி காரத்தின் பிடியில் சிக்கி பாதிக்கப்பட்டுள்ளன. அரசியல் விடுதலை பெற்றும் அந்நாடுகள் அதன் பின்விளைவுகளிலிருந்து மீளவில்லை. காலனித் துவத்தைத் தொடர்ந்து நவீனக் காலனித்துவம் வந்ததால் முன்னைய காலனிய நாடுகளின் மொழி, இலக்கியம், அரசியல், சமூக விழுமியங்கள், கல்விக் கொள்கைகள், தேசியம், பண்பாடு குறித்த கருத்தமைவுகள் ஆகியவற்றில் ஐரோப்பிய மாதிரி வடிவங்கள் போற்றப்பட்டன (தி.சு.நடராசன், திறனாய்வுக்கலை கொள்கைகளும் அணுகுமுறை களும், ப.243). உணர்வு மற்றும் செயல்பாட்டு நிலைகளில் 'சுயங்கள்' தாழ்த்தப்பட்டன. மரபுகள் ஒடுக்கப்பட்டன. இந்தச் சூழல்களின் எதிர்வினை களாகவே இவற்றைத் தவிர்ப்பதும், இவற்றிலிருந்து மீண்டு வருவதும் காலத்தின் தேவையாயிற்று. இதுவே பின்னைக் காலனித்துவத்தின் தேவை யாகவும் நோக்கமாகவும் அமைந்தது. ஐரோப்பியச் சிந்தனை வடிவங்களைத் தூக்கியெறிந்து விட்டு அவ்விடத்தில் தனக்கானதும் சுயமானதும் ஆன கருத்தியல்களையும் செயல்பாடுகளையும் முன் வைப்பது, அவற்றை மறுசீரமைப்பு செய்வது, இவற்றில் பின்னைக் காலனித்துவம் ஆர்வம் காட்டுகின்றது. தத்தம் நாட்டுச் சூழலமைவுகள் மற்றும் மரபுகளோடு ஏற்கெனவே கலந்து கிடக்கின்ற உண்மைகளைப் புதிய எதார்த்தமாகப் புனரமைப் பதே பின்னைக் காலனித்துவ இலக்கியத்தின் முதன்மைச் செயல்பாடாகும். மறுதலிப்பதும் மாற்றுத் தேடுவதுமே பின்னைக் காலனித்துவத்தின் நோக்கமாகும்.

### பின்னைக் காலனித்துவ இலக்கியத் திறனாய்வு

ஐரோப்பிய காலனித்துவக் கொள்கைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் எதிரான சிந்தனைகளை முன் வைப்பதே பின்னைக் காலனித்துவ இலக்கியத் திறனாய்வுப் போக்காகும். காலனித்துவக் கருத் தாக்கங்களை விவாதித்து மறுதலிப்பதே பின்னைக் காலனித்துவத் திறனாய்வு ஆகும். இலக்கியப் படைப்பு நூல்களின் வடிவமைப்புகளில் ஏற்பட்ட மாற்றங்களும் புத்தாக்கங்களும் உள்ளடக்கப் பொருள்களும் மேலைநாடுகளிலிருந்து இறக்குமதி யானவை என்பதை ஏற்காமல் - இவை நவீன காலனித்துவச் சிந்தனைப்போக்கு என்பதை மனத்தில் கொண்டு, மண்ணின் மரபுகளிலிருந்து

தோன்றக்கூடிய படைப்பாக்கப் போக்குகளை இனங்கண்டு முன்னிலைப்படுத்துவதே பின்னைக் காலனித்துவ இலக்கியத் திறனாய்வின் உயிர்ப்பான நோக்கமாகும். தமிழ் இலக்கியப் பின்புலத்தில் சொந்த இலக்கியங்களுக்கும் சிந்தனைகளுக்கும் ஏற்ப, மேலைநாட்டு இலக்கியங்கள் மற்றும் இலக்கியங்களின் ஒப்புமை மற்றும் ஏற்புடைமை களை நாடுவது, பன்னெடுங்காலமாக இருந்து வருகின்றது. இவற்றைத் தவிர்க்க வேண்டும்; தமிழ் மரபைத் தேடிப் புதுப்பிக்க வேண்டும். இதுவே பின்னைக் காலனித்துவம் வலியுறுத்தும் உடனடித் தேவையாகும்.

தமிழில் 'அழகியல்' என்னும் திறனாய்வுக் கோட்பாட்டை, தமிழ் மரபிலிருந்தே காட்டுவதற்குச் சரியான சான்றுகளும் கருத்துக்களும் உள்ளன. அதன் வேர்கள் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் உரையாசிரியர்களிடமும் காணப்படுகின்றன. இந்த அடிப்படையில் தி.சு.நடராசன் 'தமிழ் அழகியல்' (2013) என்னும் நூலினை எழுதியுள்ளார். தமிழ் அழகியல் கோட்பாட்டை மெய்ப்பிக்க ஆங்கிலம், இலத்தீன் இலக்கியங்களைத் தேடவேண்டிய அவசிய மில்லை. தமிழ் அழகியலுக்கும் மேலைநாட்டின் அழகியல் கோட்பாட்டிற்கும் பெருத்த அளவில் வேறுபாடு உள்ளது.

இந்திய இலக்கியப் பரப்பில் குறிப்பாகத் தமிழ் இலக்கியத்தில் பின்னைக் காலனித்துவ இலக்கியத் திற்கு மகாகவி பாரதியாரின் கவிதைகளும் கட்டுரை களும் கதை வடிவங்களுமே முதன்மையான மாதிரி வடிவங்கள் ஆகும். அவரது எழுத்துக்கள் பின்னைக் காலனித்துவ நிலைப்பாடுகளை அப்பட்டமாகக் காட்டுகின்றன. முதலிலேயே இந்திய நாட்டின் விடுதலை உணர்வுடனேயே கவிஞராக வந்த அவர்,

> **'எல்லாரும் அமரநிலை எய்தும் நன்முறையை**
> **இந்தியா உலகிற்கு அளிக்கும் - ஆம்**
> **இந்தியா உலகிற்களிக்கும் - ஆம், ஆம்**
> **இந்தியா உலகிற்களிக்கும்'**

என்று உலகத்திற்கு அறிவிப்புச் செய்கின்றார். இவ்வாறு பாரத சமுதாயத்திற்கு வாழ்த்துச் சொல்லும் பாரதியார் தொடக்கத்திலிருந்து காலனித்துவ மனப்போக்கை மறுதலிக்கவும், எதிர்க்கவும், தவிர்க்கவும் செய்துள்ளார். அத்துடன் அவர் சரியான மாற்றுக்களையும் முன்வைத்துள்ளார். இவ்வாறு பாரதியாரிடம் பின்னைக் காலனித்துவ எதிர்ப்பு மனப்போக்கும் அணுகுமுறையும் நிறைந்து காணப் பட்டதை ம.பொ.சிவஞானம் 'பாரதியும் ஆங்கிலமும்' (இன்ப நிலையம், சென்னை, 1961) என்னும் நூலில் விளக்கிக் கூறியுள்ளார். ஆயினும், பாரதியாரை 'மகாகவி' (The Great Poet) எனக் கருதமுடியாது என வாதிட்ட கல்கியும், ராஜாஜியும் நவீன காலனித்துவ மனப்போக்குடையவர்களாகவே திகழ்ந்துள்ளனர். மண்ணின் மரபுடன் உயிர்த்து நிற்கும் நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புற இசைக் கூறுகள், நாட்டுப் புறக் கதைக்கூறுகள், தொன்மங்கள் ஆகியன வற்றைப் பொருத்தமற்றவை எனக் காலனித்துவ கருத்தாடல்கள் நிராகரித்து, அவ்விடத்தில் தத்தம் கொள்கைகளைப் புதுமையானதாக இறக்குமதி செய்தது.

புதுக்கவிதை வரலாற்றின் தொடக்கத்தில் காலனித்துவ மனநிலைகளும் உத்திகளும் மேலாதிக்கம் செலுத்தின. பின்னைக் காலனித்துவம் இப்போக்கினை மறுதலித்தது. அது அவ்விடத்தில் தன்னுடைய கலைக் கொள்கையை மீண்டும் கொண்டு வந்ததை பின்னைக் காலனித்துவ இலக்கியத் திறனாய் வாளராகிய பிரான்ட்ஸ் ஃபெனோன் சுட்டிக் காட்டியுள்ளார். தமிழில் கதைகளைச் சொல்லும் முறையில் இன்றும் நவீனக் காலனித்துவமே ஆதிக்கம் செலுத்துகின்றது. சாருநிவேதிதா, கோணங்கி, தமிழவன் ஆகியோரின் கதைகள் நவீன காலனித்துவப் பின்னணி கொண்டவையே.

### தமிழ் மரபில் சாதியமும் ஆணாதிக்கமும்

சாதியக் கட்டமைப்பிற்கும் ஆணாதிக்க மனப் பான்மைக்கும் அவற்றின் கருத்தியல் தனத்திற்கும் எதிர்ப்பைக் காட்டும் பெரும்பாலான தலித் இலக்கியங்களிலும், பெண்ணியப் படைப்புக் களிலும் பின்னைக் காலனித்துவ மனப்போக்கே காணப்படுகின்றது. இந்த வகையான மனநிலை களும், எதிர்வினைகளும், கலகக் குரல்களும் 'மூன்றாம் உலக நாடுகள்' எனப்படும் முன்னாள் காலனிய நாடுகளில் சர்வ சாதாரணமாகக் காணப் படுகின்றன. எட்வர்டுசைத்தின் 'கீழைத் தேசியம்' (Orientalism) என்ற கொள்கைக்கும், காயத்ரி ஸ்பைவக் அடித்தளமக்கள் ஆய்விற்கும் வித்திட்ட பின்னைக் காலனித்துவ முன்னோடிகள் ஆவர். 'பின்னை நவீனத்துவம்' என்னும் இயக்க மையம், விளிம்புநிலை என்னும் இருநிலை எதிர்வுகளைக் கூறி, இரண்டிற்கும் இடையிலான மோதலையும் விளக்குகின்றது. இவ்வகையில் காலனித்துவக் கருத்தாடல்களை மையம் என்றால், முன்னைக் காலனிய நாடுகளின் நிகழ்வுகளையும் கருத்தாக்கங் களையும் விளிம்பு நிலையாகக் கொண்டு பின்னைக் காலனித்துவம் பேசுவதாகக் கொள்ளலாம்.

'பின்னை நவீனத்துவம்' வரலாற்றை மறுதலிக் கின்றது. பின்னைக் காலனித்துவம் வரலாற்றை ஏற்று விவாதிக்கின்றது. பின்னை நவீனத்துவம் மொழியின் பயன்பாட்டிற்கும், அதிலுள்ள அரசியலுக்கும் முக்கியத் துவம் தருவதில்லை. பின்னைக் காலனித்துவம்

மொழிப் பயன்பாட்டிற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கின்றது. மொழிப் பயன்பாட்டில் காலனித் துவம் நவீன காலனித்துவமும் எவ்வாறு வெளிப் படுகின்றன? சொந்த நாட்டின் பண்பாட்டின் கூறு களாக மொழியை வென்றெடுப்பது எப்படி? என்பதை உணர்வுடனும் ஆர்வத்துடனும் பின்னைக் காலனித்துவம் பேசுகின்றது.

பின்னை அமைப்பியலுக்கும் பின்னை நவீனத் துவத்திற்கும் மாறாகத் தேசியம், பண்பாடு, மாற்று, மறுதலிப்பு, மறுகட்டமைப்பு, சமூகப் பொருளாதார முன்னேற்றம் ஆகியன குறித்துப் பின்னைக் காலனித்துவம் விரிவாகப் பேசுகின்றது. பின்னைக் காலனித்துவம், மரபுசார் பண்பாட்டைக் காலனியத்தி லிருந்து மீட்பது உலகிலுள்ள நாடுகள் தங்களுடைய மரபுசார் கருத்தாடல்களை இழந்துவிடாமல் மீட்டெடுப்பதும், நாடு, இனம், மொழி, பண்பாடு சார்ந்த சுயமரியாதைகளைப் பாதுகாப்பதும் பின்னைக் காலனித்துவ இலக்கியப் படைப்புக்களின் நோக்க மாகும்.

**பின்னைக் காலனித்துவம் - விவாதங்களும் விமர்சனங்களும்**

பின்னைக் காலனித்துவம் 1990களிலேயே ஓர் இலக்கியக் கொள்கையாகத் தோற்றம் பெற்றது. அப்பொழுதே அதன்மீது எதிர்வினைகளும் கடுமை யான விவாதங்களும் நிகழ்த்தப்பட்டன. மார்க்சிய இலக்கியத் திறனாய்வாளர்களான ஆரிஃப் திர்லிக், அஜீஸ் அகமது ஆகியோர் பின்னைக் காலனித்துவக் கொள்கைகளின் பல அடிப்படைக் கருத்துக்களையே கேள்விக்கு உரியதாக்கினர். பின்னைக் காலனித் துவம் புலம்பெயர்ந்த அறிஞர்களால் உருவாக்கப் பட்ட கொள்கை என்றும், அது அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் தோற்றுவிக்கப்பட்டது என்றும் இவர்கள் கூறினர். ஆதலால் இது அமெரிக் காவின் அரசியல், பொருளாதார முன்னேற்றம் சார்ந்த ஒரு கொள்கையாக மையப்படுத்தப் படுகின்றது. ஆரிஃப், பின்னைக் காலனித்துவத்தை அடிப்படையியலுக்கு எதிரானதாக நோக்குகின்றார். (Peter Barry, ‘Polginning Theory – An introduction to Literary and Cultural Theory’, Manchester University Press, 1995, Pp.88-92) அவர் இக்கொள்கையால் தேசியவாதமும் மார்க்சியமும் உடைக்கப்பட்டு, கூறுபடுத்தப்பட்டு, எந்தப் பெருங்கதையாடலுமற்ற வட்டார அறிவுலகிற்கு படைப்பாளிகளும் திறனாய் வாளர்களும் தடுமாற்றம் கொள்வதாகக் கருது கின்றார். இவரைப் போன்றே அன்னிமெக்கிலின்டாக் காலனியம், பின்னைக் காலனியம் என்னும் கலைச் சொல் ஆக்கத்தையே கேள்விக்குறி ஆக்குகின்றார். “இக்கலைச் சொல்லாக்கம் ஐரோப்பா அல்லாத பண்பாடுகளை ஐரோப்பியக் காலவரிசை அடிப் படையில் வரலாற்று மறுஆக்கம் செய்ய முயல்கிறது. இதனால் காலத்துவம் என்பதே வரலாற்றின் தீர்க்கமான குறிப்பானாக வடிவம் பெறுகின்றது. இது அனைத்து நிகழ்வுகளையும் ‘காலத்துவம்’ என்ற ஒன்றுக்குள் முடியச் செய்கின்றது” (BruckKing (Edr.), New National and Post – Colonial Literature – An Introduction, 1996, Pp.32-35) என அவர் விமர்சனம் செய்தார். மெக்லின்டாக், ஷோகத் ஆகிய இரு திறனாய்வாளர களும் பொருளாதார அதிகாரம், சமுதாய வர்க்கச் சிக்கல்களை விளக்குவதற்குப் பின்னைக் காலனித்துவம் ஆற்றல் அற்றது என்றும், அது மேற்கட்டுமானம் குறித்தே பேசுவதாகவும் தங்கள் விமர்சனத்தை முன் வைத்துள்ளனர். ‘பின்னைக் காலனித்துவத்தின் அரசியல்’ என்ற கட்டுரையில் அஜீஸ் அகமது வெளிப்படையாகவே பின்னைக் காலனித்துவக் கோட்பாட்டின் உள்நோக்கத்தைச் சாடியுள்ளார். உலகமயமாக்கலுக்கும் பன்னாட்டுக் குழும முதலாளித் துவத்திற்கும் பின்னைக் காலனித்துவக் கொள்கை உடந்தை என்றும், இக்கொள்கை நடப்பு அரசியல் நெருக்கடியைத் தவிர்ப்பதற்கான உணர்வினைத் தருவதாகவும் அஜீஸ் அகமது கூறுகின்றார்.

“பின்னைக் காலனித்துவத்தின் பன்மையியம், பல பண்பாட்டியல் போன்ற கருத்தாக்கங்கள் பல மொழிகள், பல பண்பாடுகள் நிலவும் இந்தியச் சூழலுக்கு ஏற்றவைதான். இருப்பினும், இது முன்மொழிகின்ற பண்பாட்டு அடையாளங்களின் இரட்டைத்தன்மை, நிலையற்ற தன்மை, ஒட்டுத் தன்மை என்பன இறுதியில் பண்பாடு அடையாள மற்ற நிலையில், பண்பாட்டு எதிர்ப்புணர்வற்ற நிலையில் எல்லோரையும் உலகமயமாக்கலில் கரைத்துவிடும் அபாயமும் இருக்கின்றது” (பா.ஆனந்த குமார், “பின்னைக் காலனியத்துவம்- ஒரு பொதுஅறிமுகம்”, தி.சு.நடராசன், க.பஞ்சாங்கம் (மொ.பெ.ஆ.), தமிழில் திறனாய்வுப் பனுவல்கள், 2014, ப.462) எனப் பா.ஆனந்தகுமார் கருதுகின்றார்.

பின்னை நவீனத்துவம் வெளிப்படையாகக் கூறுபடுத்தப்பட்ட இலக்கிய உலகையும் நுண் அரசியலையும் பேசுகின்றது. ஆனால் பின்னைக் காலனித்துவம் அரசியலாகக் கட்டமைக்கப் படாமல் மொழி, இலக்கியம், பண்பாடு சார்ந்த கருத்தாக்கங்களாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆரிஃப், அஜீஸ் அகமது ஆகியோர் குறிப்பிடுவதைப் போன்று சமூகத்தின் மேற்கட்டுமான நிகழ்வுகளிலேயே மூன்றாம் உலக நாடுகளின் பிரதிநிதித்துவத்தைப் பின்னைக் காலனித்துவம் வேண்டுகின்றது.

சமூக அடித்தளமான பொருளாதாரம் மற்றும் வர்க்கப் பிரச்சினைகளில் மூன்றாம் உலக நாடுகளின் பிரதிநிதித்துவம் குறித்து பின்னைக் காலனித்துவ விமர்சகர்கள் எவரும் பேசவில்லை. அரசியல் அதிகாரத்தால் பணிய வைத்து அமெரிக்க ஐரோப்பிய நாடுகளின் அதிகார மையப்புள்ளிக்கு எதிரான கருத்தாக்கத்தைப் பின்னைக் காலனித்துவம் முன்னெடுத்துச் செல்லும் போதே, இந்தியாவிற்கும் இன்றைய உலகச் சூழலுக்கும் பொருத்தமான கொள்கையாக அது இருக்கும், இல்லையாயின் காலனியச் சூழலில் தோன்றிய இலக்கியங்களைத் திறனாயும் ஒரு கொள்கையாகவே அது நின்று விடும்.

**இரட்டைக்காலனி ஆதிக்கமும் பெண்ணிய அடக்குமுறையும்**

முதல் உலக - மூன்றாம் உலகப் பெண்களுக் கிடையில் பண்பாட்டு எல்லையைக் கடந்த 'சகோதரி' உணர்வைப் பின்னைக் காலனித்துவம் முன் வைக்கின்றது. ஆயினும் மூன்றாம் உலக நாடுகளின் பெண்ணியத்தின் தனித்தன்மைகளைக் கொண்டு அதைக் 'கறுப்புப் பெண்ணியம்' என்றும், 'மூன்றாம் உலகப்பெண்ணியம்' என்றும், பின்னைக் காலனியப் பெண்ணிய இலக்கியமென்றும் தனித்துவம் பேசப்படுகின்றது. பெண்மீதான ஆணாதிக்கத்தை ஆண்மையம் X பெண்விளிம்பு என்னும் பின்னை நவீனத்துவச் சிந்தனையோடு (ஆண்) காலனியாதிக்கர் X (பெண்) காலனியாவோர் என்னும் பின்னைக் காலனித்துவக் கருத்தாக்கத்தோடும் பின்னைக் காலனிய ஆய்வாளர்கள் பேசுகின்றனர். மூன்றாம் உலகப் பெண்ணடிமைத்தனத்தைக் கிறிஸ்டன் ஹோல்ஸ்ட் பீட்டர்சென், அன்னா ரூதர்ஃபோர்டு ஆகியோர் 'இரட்டைக் காலனி ஆதிக்கம்' என்கின்றனர். மூன்றாம் உலகப் பெண் காலனிய நடைமுறை களுக்கும் பிரதிநிதித்துவத்திற்கும் முதலில் ஆட்படுகின்றாள். அடுத்ததாக தந்தைவழிக் குடும்ப அமைப்பில் கணவனின் குடும்பத் தலைமைக்கு அடிமையாகின்றாள். இதனைப் புதுமைப்பித்தனின் 'துன்பக்கேணி' சிறுகதையால் அறியலாம். இக் கதையில் வரும் மருதி என்பவள் பிரிட்டிஷ் கால திருநெல்வேலிச் சீமையிலிருந்து கணவனைப் பிரித்து இலங்கைத் தேயிலைத் தோட்டத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றாள். அங்குத் தேயிலைத் தோட்ட மேனேஜர் வாயிலாக வெள்ளையதிகாரி பாட்ரிக்ஸன் ஸ்மித்திடம் மருதி கற்பை இழந்து, ஒரு பெண் குழந்தைக்குத் தாயாகின்றாள். இது முதல்வகைக் காலனியாக்கமாகும். இது காலனிய ஆட்சியின் பின்புலத்தில் நிகழ்வது.

மருதி வேலை செய்யும் தேயிலைத் தோட்டத்தில் அவளைக் காணவந்த மேனேஜர் கணவனான அந்த வெள்ளையனிடம் தன் மகள் வெள்ளச்சியை அனுப்பி விடுகின்றாள். வெள்ளையன் தன் மகளை நல்ல விதமாக வளர்ப்பான் என நம்பி அவளை ஒப்படைத்தாள் மருதி, பின்பு ஒருநாள் தன்மகள் வெள்ளச்சியைக் காண வந்த மருதிக்கு அவ்வெள்ளையன் இன்னொருத்தியைத் திருமணம் செய்து கொண்டு வருவதைக் கண்டு அதிர்ச்சி அடைகின்றாள். இந்த இரண்டாவது வகை அடக்குமுறை ஆணாதிக்கத்தால் நிகழ்வது.

மூன்றாவது வகையான ஒடுக்குமுறை இந்திய சாதிய அமைப்புச் சார்ந்தது. தாழ்ந்த சாதிப்பெண் மீது உயர்ந்த சாதிக்கார ஆண் வன்முறையில் ஈடுபடுவது அக்கால கிராமத்தின் இயல்பான போக்காகும். மருதி இலங்கைத் தேயிலைத் தோட்டத்திற்குச் செல்வதற்கு முன்னர் கிராமத்திலிருந்த மருதியையும் அவளது கணவனையும் (தமிழ்நாட்டில்) அக்கிராமத்தின் உயர் சாதிக்காரன் ஆகிய காட்டயத்தேவன் தலைமுடியைப் பிடித்து அடிப்பது இந்த வகையான சாதிய ஒடுக்கு முறையாகும்.

பின்னைக் காலனியக் கொள்கையின் முக்கியத் திறனாய்வாளராக விளங்கும் காயத்திரி அடித்தள மக்களின் அடிமைத்தனத்தையும் பெண்ணடிமைத் தனத்தையும் ஒப்பிட்டு நோக்குகின்றார். அவர் 'அடித்தள மக்கள் பேசமுடியுமா?' (Can the Subaltern Speak?' என்னும் கட்டுரையில், 'அடித்தள மக்களுக் கென்று வரலாறு இல்லை. அவர்கள் பேசக்கூடிய அளவு உரிமையுடையவர்கள் அல்லர்; குறிப்பாக, அடித்தள மக்களாகப் பெண் இருந்துவிட்டால் அவளது நிலை ஆழமான நிழலுக்குள் மறைக்கப் படும்' (John Mc Leod, 'Beginning Post Colonialism', Manchester University Press, 2000, Pp.118-123) எனக் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவில் குடியிருக்கும் ஸ்பைவக்கைத் தாண்டி, மூன்றாம் உலக நாடுகளிலும் இன்று பெண்ணியம் ஆய்வு செய்யப்படுகின்றது. இவர்கள் மேல்நாட்டுப் பெண்ணியச் சிக்கல்கள், மூன்றாம் உலகப்பெண்கள் பிரச்சினைகளோடு தொடர்பற்றவை என்று அவற்றை ஒதுக்கிவிடு கின்றனர். 'பாலினம்' (Gender) என்பது இனம், வர்க்கம், நாடு, நிறம், பண்பாடு இவற்றோடு தொடர் புடையதாக மூன்றாம் உலகப் பெண்ணியத்தில் பார்க்கப்படுகின்றது. மேலும், மூன்றாம் உலகப் பெண்ணியப் படைப்புக்கள் - பின்னைக் காலனியப் பெண்ணியப் படைப்புக்கள் 1980-1990களில் மிகுந்த அளவில் வளர்ச்சி அடைந்துள்ளன.

**பின்னைக் காலனியவாதிகளின் 'மொழி அரசியல்'**

பின்னைக் காலனியவாதிகள் மொழியைப் பண்பாட்டு உற்பத்திக் கருவியாகவும், பிரதிநிதித்துவ அரசியலின் வெளிப்பாடாகவும் நோக்குகின்றனர். 'காமன்வெல்த் இலக்கியம்', 'பின்னைக் காலனிய

இலக்கியம்' என்னும் ஆட்சிகள் பெரிதும் ஆங்கில மொழியில் எழுதப்படும் இலக்கியங்களையே குறிக்கின்றன. இங்கு ஆங்கிலம் என்பது ஒரு காலனியாதிக்க மொழி; காலனிய அதிகாரத்தின் மொழி என்பதை மறந்துவிடக்கூடாது. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பின்னைக் "காலனியத் திறனாய்வாளராகிய பில் அஷ்க்ராஃப்ட், 'காலனிய அதிகார மொழியின் சவாலை எதிர்கொள்ளும்போது, அதனது உலகப் பார்வையைக் கருத்தில் கொள்ளாமல், புது வகையான பிரதிநிதித்துவத்தை மொழியில் படைக்க வேண்டும். எனவே 'புதிய ஆங்கிலத்தைப் பயன்படுத்திப் படையுங்கள்'" எனக் குறிப்பிட்டுள்ளார். இவரது இக்கருத்திற்கேற்பவே மூன்றாம் உலக நாட்டு எழுத்தாளர்கள் செயல்பட்டு வருகின்றனர். நைஜீரியாவைச்சேர்ந்த சினுவா ஆச்பி, வோல் சோயின்கா, டிரினிடாட் நாட்டின் நைபால், இந்திய எழுத்தாளர் அருந்ததிராய் ஆகியோர் தங்களது படைப்புக்களில் புதுவகை ஆங்கிலத்தைப் பயன்படுத்துகின்றனர். அதில் பண்பாடு கலந்த ஆங்கில மொழி வடிவங்கள் காணப்படுகின்றன.

அருந்ததிராய் தம் 'அற்ப விசயங்களின் கடவுள்கள்' (Gods of Small Things) என்னும் நூலில் 'One' என்னும் ஆங்கிலப் பெயருக்குப் பதிலாக 'Onnu' என்னும் மலையாள எண்ணுப்பெயர் வடிவத்தைப் பயன்படுத்தியுள்ளார். ஆர்.கே.நாராயணன் மற்றொரு கோணத்தில் நின்று 'ஆங்கிலம் எங்களது சுதேசிய மொழி' எனக் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் கென்ய நாட்டின் நாவலாசிரியர் என்குகி 1980க்கு முன்னர் தனது படைப்புகளை ஆங்கிலத்தில் எழுதினார். பின்னர் ஆங்கிலத்தில் எழுதுவதை நிறுத்திவிட்டு, அவருடைய தாய்மொழியான 'ஜிகுயூ' ('Gikuyu')வில் எழுதி வருகின்றார். 'ஒரு மொழியைத் தவிர்ப்பது அம்மொழியின் ஒட்டுமொத்தமான பண்பாட்டையே தவிர்ப்பது' எனக் கூறும் என்குகி, மொழியைச் சமூக வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாது; அது தனித்த வடிவமும் பண்பும் கொண்டது; தனித்த வரலாறும் உலகத்துடன் தனித்த உறவும் கொண்டது என்கின்றார். மொழி பண்பாட்டின் கொள்கலம் என்பதை அவர்,

"பண்பாட்டில் ஒழுக்கவியல், அறவியல், அழகியல் மதிப்புக்கள் அடங்கியுள்ளன. இம்மதிப்புக்களே அம்மக்களின் பண்பாட்டின் அடித்தளமாகும். மனித இனத்தின் தனித்தன்மையைக் காட்டும் உணர்வு மொழியில் உள்ளது. மக்களின் வரலாற்று அனுபவங்களின் கூட்டு நினைவு வங்கியாக உள்ளது மொழி; மொழியே பண்பாட்டின் ஊடகம். இத்தகைய தாய்மொழியைப் புறக்கணித்து, காலனிய மொழிகள் என்னும் காலனியக் கண்ணாடிகள் வாயிலாக உலகைக் காணும் காலனிய ஆதிக்கத்திற்கு உட்பட்டோர் அவர்களது சமூகத்தின் அடையாளத்திலிருந்து விலகி நிற்கின்றனர்" (Elleke Bochmer, "Colonial And Post Colonial Literature", Oxford University Press (1995), Pp.88-90) எனக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மொழியைப் பொருத்தவரையில் ஒரு காலத்தில் சுவாமிநாத தேசிகர், சுப்பிரமணிய தீட்சதர், வைத்தியநாத தேசிகர் ஆகிய மூவரும் இலக்கணக் கொத்து, பிரயோக விவேகம், இலக்கண விளக்கம் ஆகிய நூல்களின் ஆசிரியர்கள் (கி.பி. பதினேழாம் நூற்றாண்டினர்). இவர்கள் அனைத்துப் பெருமைகளும் வடமொழிக்கே உண்டு; தமிழ் மொழிக்கு எந்தப்பெருமையும் இல்லையெனக் கூறித் தமிழ்ச் சிந்தனையைச் சிறைப்படுத்தினர். தற்பொழுது ஆங்கிலமொழி என்னும் காலக் கண்ணாடியை அணிந்து கொண்டு பலர் தமிழ்ப் பண்பாட்டை நீக்கம் செய்து வருகின்றனர்.

**ஐரோப்பிய மைய உலகப் பார்வை**
**(Eurocentric World Vision)**

உலக வரலாறு, உலகப் பண்பாடு குறித்த இன்றைய ஆய்வு நோக்குகளில் ஐரோப்பிய மையப் பார்வையே தலைமையிடம் பெறுகின்றது. ஐரோப்பியர்கள் தங்களை உயர்வாகவும், மூன்றாம் உலக நாட்டு மக்களைத் தாழ்வாகவுமே சித்திரித்துள்ளனர். இவ்வகையில் அவர்களது பண்பாட்டு விளக்கங்கள் கட்டமைக்கப்பட்டிருப்பதாக எட்வர்டு சைத்தன் (Edward Saidhan) 'கீழ்த்திசையியல்' (Orientalism) என்னும் நூலில் விரிவாக எழுதியுள்ளார். ஐரோப்பியர்களின் காலனி மயமாக்கலை காலனி ஆதிக்கர் X காலனியாவோர் என்னும் பார்வையில் சைத்தும் பின்னைக் காலனியவாதிகளும் விவாதித்துள்ளனர்.

மேற்குலக அறிவும், கற்றலும் உடையதாகவும், கிழக்குலக அறியாமையும் இயற்கைத் தன்மையும் கொண்டதாகவும் காட்டும் ஐரோப்பியர்கள் மேற்கை உயர்தரம் என்றும், கிழக்கை அதிலிருந்து மாறுபட்டதாகவும் அதற்கு அடிபணிவதாகவும் காட்டியுள்ளனர். கிழக்கை மற்றதாகவும் (Other), மேற்கிற்கு அடங்கியதாகவும் நோக்கும் பார்வையே ஐரோப்பியர்களிடம் சிறப்பிடம் பெறுகின்றது. மெக்காலேயின் 'கீழ்த்திசை இலக்கியங்கள்' குறித்த, "ஒரு சிறந்த ஐரோப்பிய நூலகத்தில் ஓரடுக்கு, இந்தியா மற்றும் அரேபிய நாடுகளின் ஒட்டுமொத்த இலக்கியங்களுக்குச் சமமானது என்னும் கூற்றை மறுக்கக்கூடிய கீழ்த்திசையியலார் எவரையும் யான் கண்டதில்லை. அரபிய, சமசுகிருதக் கவிதைகள் புகழ்வாய்ந்த ஐரோப்பிய நாட்டிலக்கியங்களோடு துணிச்சலோடு ஒப்பிடும் கீழ்த்திசையியலார் எவரையும் யான் கண்டதில்லை" (Susan Bassnett, 'Comparative

Literature – A Critical Introduction, Oxford University Press, 1998, P.17) என்னும் மதிப்பீடு ஐரோப்பிய மைய உலகப்பார்வைக்குத் தக்க சான்றாகும்.

### பின்னைக் காலனித்துவத்தில் பண்பாட்டு வேர்களும் நெருக்கடிகளும்

பின்னைக் காலனித்துவம், ஒற்றைப் பண்பாட்டிற்கும் பண்பாட்டு எதேச்சதிகாரத்திற்கும் எதிராகப் பண்பாட்டு வேறுபாடுகள், பன்மைப் பார்வை, பல பண்பாட்டியல் ஆகிய கருத்தாக்கங்களை முன்வைக்கின்றது. இவ்வாறு பின்னைக் காலனித்துவம், 'பண்பாடு' திறவைத்தன்மை கொண்டதாகவும் (Opened Type), பிற பண்பாடுகளை ஏற்பதாகவும் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றது. ஹோமிபாபர், புலம்பெயர்ந்தோர், அடித்தள மக்கள் சார்பாக நின்று நோக்கும்போது 'பண்பாடு' ஒட்டுத் தன்மையுடையதாக இருப்பதாகக் கூறுகின்றார்.

பூர்வகுடிகள், தாயகத்திலிருந்து வெளியேறியோர், அகதிகள், நாடு கடத்தப்பட்டோர் ஆகியோரது அடையாளங்கள், பண்பாட்டு நெருக்கடிகள் ஆகியன குறித்துப் பின்னைக் காலனியப் படைப்பாளர்களும் திறனாய்வாளர்களும் விரிவாக எழுதுகின்றனர். சாலிமார்கன் என்னும் ஆஸ்திரேலிய எழுத்தாளர் 'My Place' என்னும் தன்னுடைய வாழ்க்கை வரலாற்று நூலில் ஆஸ்திரேலியப் பூர்வகுடிகளின் வரலாற்றை விளக்கமாக எழுதியுள்ளார். அவர் அந்நூலில் ஆஸ்திரேலியப் பழங்குடி அன்னைக்கும், வெள்ளைத் தந்தைக்கும் பிறந்த ஒரு பெண்ணின் பண்பாட்டு அடையாள நெருக்கடியை நுணுக்கமாக அலசியுள்ளார்.

கென்ய நாட்டு எழுத்தாளர் என்குகி, புலம்பெயர்ந்த இந்திய எழுத்தாளர்களான சல்மான் ருஷ்டி, விக்ரம்சேத், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த டிரினிடாட், எழுத்தாளர் சர்வித்யாதர் சூரஸ் நைபால் ஆகிய பின்னைக் காலனிய எழுத்தாளர்களின் படைப்புகளில் பண்பாட்டு அடையாள நெருக்கடிகளைக் கடந்து பண்பாட்டுவழிகள், பண்பாட்டு வேர்களைப் பற்றிய தேடல்களும், தாயக நாட்டமும் காணப்படுகின்றன. இந்தியாவின் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குப் புலம்பெயர்ந்தோர் படைப்புகளிலும் இதனைக் காணலாம்.

தமிழ் எழுத்தாளர்களில் தோப்பில் முஹமது மீரான், சு.வேணுகோபால் ஆகியோர் தாங்கள் வாழும் காலம் மற்றும் வெளி உணர்வு கடந்து மற்றொரு காலம் மற்றும் வெளியில் தங்கள் படைப்புகளில் இயங்குகின்றனர். திருநெல்வேலியில் 21ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் தோப்பில் முஹம்மது மீரான் 'சாய்வு நாற்காலி', 'துறைமுகம்' போன்ற தனது படைப்புகளில் 19ஆம் நூற்றாண்டுக் கேரளச் சமூக வெளிக்குள் பயணிக்கின்றார். இவ்வாறே சு.வேணுகோபால் 'நுண்வெளிக் கிரணங்கள்' என்னும் தன்னுடைய நாவலில் இன்றைய தமிழ்ச் சமூகத்தின் காலம் மற்றும் வெளிகளைக் கடந்து 19ஆம் நூற்றாண்டின் சமூகவெளிக்குள் நுழைந்து தமது இனமக்களின் புலம்பெயர் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். பின்னைக் காலனியத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுவதைப் போல தோப்பில் முஹமது மீரான், சு.வேணுகோபால், கி.ரா. ஆகியோரது படைப்புகளில் வரும் கதாபாத்திரங்களின் பண்பாட்டு அடையாளங்கள் ஒற்றைத்தன்மை கொண்டவையாகவும், இரட்டைத் தன்மையுடையவையாகவும் காணப்படுகின்றன.

பின்னைக் காலனித்துவம் முன்வைக்கும் பல்பண்பாட்டியலில், தாயகப் பண்பாட்டு நாட்டம் என்னும் கருத்தாக்கம் எஸ்.டி.ராஜ்குமார், ஹெச்.ஜி.ரசூல் ஆகிய தமிழ்க் கவிஞர்களின் கவிதைகளில் பொருந்தி நிற்கின்றன. தமிழகத்திலும், கேரளாவிலும் பூர்வீகப் பழங்குடி மக்களாக வாழ்ந்து வருகின்ற 'கணியான்' இனமக்களின் சொந்தப் பண்பாட்டை என்.டி.ராஜ்குமார் வாதைகள் (பிசாசுகள்) வாயிலாக ஏவி விடுகின்றார். இவரது கவிதையில் தமிழ் - கேரளப் பண்பாட்டு ஊடாட்டம் மொழியிலும் கருவிலும் வடிவத்திலும் கலந்து காணப்படுகின்றன. ஜெயமோகனின் படைப்புகளிலும் இதனைப் பரவலாகக் காணமுடிகின்றது. பண்பாட்டு ஊடாட்டத்திற்கும் பல்பண்பாட்டியலுக்கும் சான்றளிப்பனவாக ரசூலின் 'மைலாஞ்சி' (மருதாணி) என்னும் கவிதைத் தொகுப்பு அமைந்துள்ளது. தமிழ், மலையாளம், அராபி மொழி வடிவங்களும், பண்பாட்டு வடிவங்களும் இத்தொகுப்பில் ஊடாடி நிற்கின்றன என்பதை அறியமுடிகிறது.


### பயன்பட்ட நூல்கள்


1. மங்கை, அ., ராபர்ட் ஜே.சி.யங் பின்காலனியம் மிகச் சுருக்கமான அறிமுகம், அடையாளம், சென்னை, 2007.
2. அசோகன் முத்துசாமி,த., பிபன் சந்திராவின் காலனியம் (கட்டுரைத் தொகுப்பு) பாரதி புத்தகாலயம், சென்னை, 2012.
3. ந.முத்துமோகன், பா. ஆனந்தகுமார், ஹெச்.ஜி.ரசூல், எச்.முஜீப் ரஹ்மான், பின்னைக் காலனியம், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், கன்னியாகுமரி, 2007.
4. நடராசன், தி.சு., திறனாய்வுக்கலை (கொள்கைகளும் அணுகுமுறைகளும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2016.
5. க.பஞ்சாங்கம் (மொ.பெ.ஆ.), தி.சு.நடராசன், தமிழில் திறனாய்வுப் பனுவல்கள், சாகித்திய அகாதமி, புதுதில்லி, 2014.
6. Bruck King (Edr.), New National and Post – Colonial Literature – An Introduction, Oxford University Press, New York, 1996.
7. Elleke Bochmer, Colonial & Post Colonial Literature, Oxford University Press, New York, 1995.

# சென்னை புத்தகக் கண்காட்சியில்
# என்.சி.பி.எச்.சின் புதிய வெளியீடுகள்





**விலைக்கு வந்த வாழ்வு**
(தெலுங்கு சிறுகதைகள்)
**கொ.குடும்பராவ்**
₹ 110/-





**நம்பிக்கை**
**வெ.இறையன்பு**
₹ 50/-





**இன்று மழை பெய்யும்**
(நாடகம்)
**மா.கமலவேலன்**
₹ 85/-




**அழகு**
**வெ.இறையன்பு**
₹ 50/-




**வரலாறு**
**சொல்லும் பாடம்**
**என்.முருகன்** ஐ.ஏ.எஸ்.
₹ 195/-




**தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட**
**வகுப்பினர் பட்டியல்**
**கோ. அருணாசலம்**
₹ 85/-



## மனிதரை இழிவாக நடத்தும் மதத்தை

# மதம் எப்படி என்று சொல்ல முடியும்?

டாக்டர் அம்பேத்கர்

மலையாளத்திலிருந்து தமிழில்: ஏ.எம். சாலன்

*1935, டிசம்பர் 8-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை, நிர்பீடுகாரர்களுடைய வாழ்க்கையில் ஒரு மகத்தான நாள். அன்றிரவு போரஸ் சாலையின் பக்கத்திலுள்ள ஜெயராம் பாய் தெருவில் பழைய டோர்சாலில் ஒரு மாபெரும் கூட்டம் நடைபெறும் என்றும், மத மாற்றம் சம்பந்தமாக டாக்டர். அம்பேத்கர் உரையாற்றுவார் என்றும் அறிவிக்கப்பட்டது.*

*ஸ்ரீ சோமவம்சீய குருதத்த பிரசாதிக பஜன சங்கத்தின் 22-ஆவது ஆண்டு திருவிழா பிரமாதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. வழக்கமாக ஆண்டு தோறும் அதில் ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள் கலந்துகொள்வதுண்டு.*

*இந்த அமைப்பைத் தொடங்கி வைத்த திரு. மாதவராவ் மோரே மறைந்து போனார். அந்த இடத்திலிருந்து செயல்பட்டுக் கொண்டிருந்த திரு. பாலாஜி சுட்காஜி மோரே, சங்கர் ராவ் ஆடெ ஜாதவ், மாதவராவ் பார்கே, கங்காராம் பந்த்முக்தாதம், ரேவஜி பொவாடோஸ் போன்ற தலைவர்கள் அதைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தார்கள். இங்கு நடைபெறும் இரண்டாவது நாள் திருவிழாவில் டாக்டர். அம்பேத்கரை, மத மாற்றம் பற்றி உரையாற்ற அழைத்திருந்தார்கள்.*

*அந்தப் பொதுக்கூட்டத்தில் அவர் ஆற்றிய உரை பின்வருமாறு:*

“எனக்கு தொடக்கத்தில் ஒன்று, இரண்டு விஷயங்களைப் பற்றி நான் சொல்லியாக வேண்டும். போன வருசம் நடந்த திருவிழாவில் என்னால் பங்கெடுக்க இயலாமல் ஆயிற்று. இந்த வருடமும் ‘தத்த ஜெயந்தி’ போன்றதொரு திருவிழாவில் மத மாற்றத்தைப் பற்றிப் பேசுவது அவ்வளவு சரியல்ல! ஆனால், இது கடைசித் திருவிழாவாக இருக்கும் என்று ரேவஜி சொன்னதினால் நான் இதில் கலந்து கொள்ள ஒப்புக்கொண்டேன்.

இம்மாதிரி இடங்களில் வைத்து மதம் மாற்றத்தைப் பற்றிப் பிரசங்கம் பண்ணுவது அவ்வளவு சரியல்ல! ஆனால், அதைப் பற்றி இரண்டு வார்த்தைகளாவது சொல்லாமல் இருக்க முடியாது.

மத மாற்றத்தைப் பற்றி நான் முடிவு பண்ணி விட்டேன். ஆனால், நான் காத்திருப்பது உங்களுடைய முடிவைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காகவேதான்!

நீங்கள் மொத்தம் 7 கோடி பேர் இருக்கிறீர்கள். நீங்கள் மதம் மாறுகிறீர்களா என்பதைப் பற்றி நான் தெரிந்து கொள்ள வேண்டும். இதிலிருந்து ஒருவர் கூட விடுபட்டுப் போகக்கூடாது! சிலர் மட்டும் மதம் மாறினால் அதனால் உங்களுக்குத்தான் நஷ்டம். ஏழு கோடி மக்களும் கூட்டமாகத்தான் மதம் மாற வேண்டும். அதை விட்டுவிட்டு பத்து பேர் இசுலாமியர் களாகவும், நான்காயிரம் பேர் கிறிஸ்தவர்களாகவும் சிதறிக்கிடந்தால் நமக்கு எந்தவித நன்மையும் ஏற்படாது. இது போக, உங்களில் ஒருசிலர் மட்டும் என்னோடு சேர்ந்து மதம் மாறினாலும் என்னால் உங்களுக்கு எதுவும் செய்ய இயலாது. எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து என்னோடு மதம் மாற வேண்டும்! அதற்காக வேண்டி, எத்தனைக் காலம் வேண்டு மானாலும் நான் காத்திருக்கத் தயார்.

இந்து மதம் ஒரு மதம் இல்லை; அது ஒரு நோய்! மிகவும் ஆபத்தான நோய்! (இதைச் சொல்லி விட்டு டாக்டர். அம்பேத்கர் சுற்றுமுற்றும் பார்த்தார். எங்கும் ஒரே ஆரவாரமும், அதைத் தொடர்ந்து கை தட்டும் ஓசையும் எழுந்தது). இந்த நோய் அதிகம் பாதித்திருப்பது நம் நாட்டிலுள்ள இந்துக்களைத்தான்! எங்களை (தாழ்த்தப்பட்ட, உழைப்பாளி மக்களை) இல்லை. நாம் அவர்களோடு (மேட்டிமைச் சாதி மக்களோடு சேர்ந்து நாமும் இந்துவானால்) கூடிச் சேர்ந்தால் அது நம்மையும் பாதிக்கும். நம்மில் தொற்று நோய் பீடித்தவரை நாம் விலக்கி வைப்பது போல் நாம் சாதி இந்துக்களிலிருந்து விலகி இருக்க வேண்டும்.

அந்த நோய் இந்துக்களுக்குத்தான்; தாழ்த்தப்பட்ட மக்களாகிய நமக்கு இல்லை! தாழ்த்தப்பட்ட மக்களாகிய நாம் என்ன பாவம் பண்ணினோம்? ஒரு பாவமும் பண்ணினது கிடையாது! பாவம் செய்தவர்கள் மேல்சாதி இந்துக்களே. ஆனால், அதனுடைய எதிர்விளைவை நாமும் சேர்ந்துதான் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். எனவே நாம் அதிலிருந்து விலக வேண்டும். அந்த நோயிலிருந்து விடுபட வேண்டுமென்றால், மேல்சாதி இந்துக்களும் அதிலிருந்து விலகி, நம்மோடு வரலாம்!

தீண்டாமை ஒழிக்கப்படும் என்று சொல்லப் படுகிறது; ஆனால் அது நடக்கப் போவதில்லை.

இந்துமதம் மதமாகக்கூட நிலை நிற்கவில்லை. அது ஒரு மதம் என்று சொன்னால் அதை நிரூபித்துக் காட்ட யாராவது முன்வர வேண்டும்.

இந்துமதம் ஒரு விஷம்; விஷத்தை யாராவது அமுதமாக்க முடியுமா? முடியாது. ஒரு மதத்திற்குள்ளே இருக்கும் மனிதர்களை (தாழ்த்தப்பட்ட உழைப்பாளி மக்களை) மனிதப் பிறவிகளாக அது கருதவில்லை. இப்படியிருக்க, நாம் அதை எப்படி மதம் என்று ஒப்புக்கொள்ள முடியும்? (ஒரு மதம் எவ்வாறு இருக்க வேண்டும்? அதனுடைய தகுதிகள் என்னென்ன? சமூகத்தில் அதன் செயல்பாடு எவ்வாறு இருக்க வேண்டும்? என்பதற்கு உதாரணமாக டாக்டர். அம்பேத்கர் அவற்றைப் பற்றி ஒரு அத்தியாயத்தில் தெள்ளத்தெளிவாகக் குறிப்பிடுவதை இங்கே நாம் நினைவில் கொள்ள வேண்டும். -மொ-ஆர்.) விஷத்தை அமுதாக மாற்றும் வித்தை யாருக்காவது தெரிந்தால் அதை எனக்கும் கற்றுத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். விஷத்தை அமுதாக்கு வதற்கு ஒருபோதும் இயலாது! ஒருவேளை உப்பு அதிகமாகிவிட்டால் அதைக் குறைக்கலாம்; புளிப்பை இனிப்பாக்கலாம். ஆனால், விஷத்தை அமுதாக்க முடியாது!

எனக்குச் சமைக்கத் தெரியும். ஒரு பெண்ணைப் போல் நான் நன்றாகச் சமையல் பண்ணுவேன். இது பற்றி உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம்! ஒரு வேளை எனக்கு வேறு வேலை எதுவும் கிடைக்க வில்லை என்றால், ஒரு சமையல்காரனாவதற்குத் தான் நான் இந்த சமையற் கலையைப் படித்ததே! (பின் இதுபற்றி அம்பேத்கர். விரிவாக விளக்குகிறார். மொ-ஆர்.)

எனக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் குஜராத்தி லிருந்து ஒரு கடிதம் வந்தது. அந்தக் கதையைப் பற்றி நான் இங்கே சொன்னால் இந்து மதம் விஷம் என்பது உங்களுக்குப் புரியும்.

குஜராத்தில், ஒரு கிராமத்தில் ஜைன மாண வர்கள் தங்கிப் படிப்பதற்காக விடுதி ஒன்று இருக்கிறது. அங்கே மேல்சாதியைச் சேர்ந்த பத்து, இருபது பிள்ளைகளும், அவர்களை மேற்பார்வையிட வயதான ஒரு காப்பாளரும் இருக்கிறார். அந்த விடுதிக்குள் தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த ஒரு தம்பதியரும் உண்டு. அவர்களுக்கு மூன்று, நான்கு வயதில் ஒரு குழந்தை! அவர்கள், அந்த விடுதிக்குள் கூலிக்கு வேலை செய்பவர்கள்.

அவர்கள் விடுதிக்கு, வேலைக்குப் போகும் வேளையில் தங்கள் குழந்தையை முதுகில் தொட்டில் கட்டித் தூக்கிக் கொண்டு போவது வழக்கம்.

ஒருநாள் குழந்தையை விளையாட விட்டு விட்டு, அதன் அம்மாவும், அப்பாவும் எங்கோ, வெளியே போயிருந்தனர். அந்த விடுதியின் வளாகத்திற்குள்ளே தண்ணீர் நிரம்பிய குட்டை ஒன்று உள்ளது. குழந்தை விளையாடி விளையாடி, அந்த விடுதியின் வாசல் பக்கமுள்ள தண்ணீர் நிரம்பிய அந்தக் குட்டையின் பக்கமாகப் போய்

விட்டது. எதிர்பாராத விதமாக அக்குழந்தை, அந்தக் குட்டையின் கரையோரமாகச் சென்றது. அந்தக் குட்டை நான்கு, ஐந்து அடி ஆழமும், இரண்டு, இரண்டரை அடி அகலமும் உடையது. எதிர்பாராத விதமாக குழந்தை அந்தக் குட்டைக்குள் விழுந்து விட்டது. இதை அந்த விடுதியிலுள்ள மேல்சாதிப் பிள்ளைகளும், காப்பாளரும் பார்த்துக் கொண்டிருந்தார் களாம்! ஆனால், அக்குழந்தையைக் காப்பாற்ற யாரும் முன் வரவில்லையாம்! அதைப் பார்த்துக் கொண்டிருந்த மேல்சாதிப் பிள்ளைகள் அக் குழந்தையின் தாய் - தந்தையருக்கு விவரத்தைத் தெரியப்படுத்தினார்கள். விஷயம் அறிந்து சற்று நேரம் கழித்து குழந்தையின் பெற்றோர், மார்பில் அடித்து அழுதவாறு அங்கு ஓடிவந்து குட்டைக்குள் விழுந்து கிடந்த தங்கள் குழந்தையைத் தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடினார்களாம்! அங்கே குழந்தையைப் பரிசோதித்துப் பார்த்த மருத்துவர், குழந்தை இறந்து இரண்டு மணி நேரமாகிறது என்றாராம்.

இங்கு பிரச்சினை இதுதான்!

விடுதியில் தங்கியிருந்த மேல்சாதிப் பிள்ளை களும், காப்பாளரும் குட்டையில் விழுந்த அந்தக் குழந்தையை ஓடிச்சென்று தூக்காமலிருந்தது ஏன்?

அதற்குரிய காரணம் ஒன்றே ஒன்று தான்! குழந்தை தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்தது.

இதுதான் இந்துமதம்!

அவர்களிடமிருந்து மனித நேயத்தை எதிர் பார்ப்பது தவறு. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்து மதத்திடமிருந்து ஒருபோதும் நீதி கிடைக்கப் போவதில்லை.

இந்துமதம் ஒரு கருத்தக் குஷ்டரோகமாகும். தாழ்த்தப்பட்ட மக்கள் அதிலிருந்து விடுபட வேண்டு மானால் மதம் மாறுவது ஒன்றே மார்க்கமாகும்.

இது மாதிரி சமீபத்தில் நாசிக் மாவட்டத்தில் நாதூர் என்ற இடத்தில் நடைபெற்ற சம்பவத்தைப் பற்றி நீங்கள் வாசித்துத் தெரிந்து கொண்டிருக்கலாம்.

மஹர் சாதியைச் சேர்ந்த இரண்டு பெண்கள் கோதுமைக் கதிர்களைத் தங்கள் வயலிலிருந்து பறித்தெடுத்துக் கொண்டு நடந்து வந்திருக்கிறார்கள். மதம் மாற்ற அறிவிப்பைத் தொடர்ந்து வெறுப்பேறி யிருந்த மராட்டியர்கள், அது தங்களுடைய வயல் களிலிருந்து பறித்தெடுத்தது என்று மனப்பூர்வமாக அவர்கள் மீது குற்றம் சுமத்தினார்கள்.

'இது உங்கள் வயல்களிலிருந்து பறித்தெடுத்தது அல்ல' என்று, அப்பெண்கள் தாழ்ந்து மன்றாடி சொன்ன பிறகும் கூட அவர்கள் கேட்கத் தயாரில்லை யாம்! கடைசியில் அவர்கள், அப்பெண்களை தேக உபத்திரவம் செய்தார்களாம்! அதற்குப் பிறகும் மராட்டியர்களின் கோபம் அடங்கவில்லையாம்! அவர்கள், தங்களுடைய ஆடு, மாடுகளை எல்லாம் அவிழ்த்து, மஹர் சாதி மக்களின் வயல்களுக்குள் இறக்கிவிட்டு, பயிர்களை நாசம் பண்ணினார்கள். நம் நாட்டுத் தாழ்த்தப்பட்ட மக்களிடம் மேல்சாதி இந்துக்கள் இம்மாதிரிதான் நடந்து கொள்கிறார்கள்.

இதனால்தான் நான் சொல்கிறேன் - இந்துமதம் ஒரு நரகம் என்று.

மத மாற்றம் சம்பந்தமாக நீங்கள் என்ன முடிவு எடுக்கப் போகிறீர்கள் என்று, எனக்குத் தெரிய வேண்டும். எனக்கு உங்களுடைய தலைமை தேவை யில்லை; எனக்கு வேறு எந்தவித எதிர்பார்ப்பும் கிடையாது. என்னுடைய லட்சியத்தை அடைய எனக்குத் தெரியும். என்னோடு சேர்ந்து மதம் மாற வேண்டுமானால் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து வர வேண்டும். ஒன்று, இரண்டு மாதங்களுக்குள் இங்கே, பம்பாயில் மஹர் மக்களுடைய முதல் மாநாடு நடைபெற உள்ளது. அப்புறம் நம் நாட்டிலுள்ள பிறசாதி மக்களையெல்லாம் சேர்த்து, கூட்டாக ஒரு மாநாடு நடத்தி, தீர்மானம் எடுக்க வேண்டும். அதற்கு இன்னும் அதிக காலம் தேவைப்படும்.

உங்களுக்கு நான் தேவையான அளவு கால அவகாசம் தருகிறேன். நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

மதம் மாறுவதற்கு என்ன செய்யவேண்டும் என்று இன்று, இந்த மேடையில் வைத்துச் சொல் வதில் அர்த்தம் இல்லை. நீங்கள் வசிக்கும் கட்டடத்திலிருந்து நிரந்தரமாக இடம் மாற எல்லோரும் மனதார நிச்சயித்தால், அதற்கான வழியைப் பற்றிச் சொல்கிறேன்.

நீங்கள் இன்னும் இந்து மதத்தைப் பின் தொடர்வது, உங்களுக்கு அதைப்பற்றிச் சரியாகத் தெரியாததினால்தான்! உங்களுக்குச் சுரணையும், தன்மானமும் இல்லாததினால்தான், நீங்கள் மனிதநேயத்தைப் பற்றி இன்னும் அறியாமல் இருக்கிறீர்கள். எனவேதான் நீங்கள் இன்னும் இந்து மதத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

இதோடு நான், என் உரையை முடித்துக் கொள்கிறேன்."

*நிர்நீட், டிசம்பர் - 15, 1935*

[டாக்டர் அம்பேத்கர் நூல் தொகுப்பு: 38-லிருந்து எடுக்கப்பட்டது.]

●